விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

புதிய சேவை அறிமுகம்
பொதிகள் சேவை
Door to Door Service
அவுஸ்திரேலியா Rs 800/-
லண்டன் Rs 600/-
Parcel.Lk
இல. 225 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 2224338 / 021 4925024
இல. 25 கந்தசாமி கோவில் வீதி, வவுனியா. 024 4930200

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 ஆனி 19 திங்கட்கிழமை (03.07.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 196

# மக்களை ஏமாற்றி தேர்தலில் வெல்வோம்

## தமிழரசுக் கட்சிக் கலந்துரையாடலில் உண்மையை உளறிய கனகசபாபதி; ஓடிச் சென்று வாயடைத்தார் சுமந்திரன்

23-ம் பக்.

அன்பு வாசகர்களே!
புருசோத்தமன் எழுதும்
**தமிழரின் தலைவிதி எப்படியாகும்?**
தொடர் எதிர்வரும் 10.07.2017 திங்கட்கிழமை முதல் வெளிவரும்.

## முதியவரொருவர் சடலமாக மீட்பு

(கரணவாய்)

வல்வெட்டித்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முலாவிமடம் பொக்கணைப்பகுதியில் உள்ள தோட்டக் கிணறு ஒன்றில் இருந்து முதியவரின் 23☛

## மயிலிட்டி மீன்பிடி துறைமுகம் இன்று விடுவிப்பு

(யாழ்ப்பாணம்)

27 வருடங்களின் பின்னர் இன்றைய தினம் மயிலிட்டி மீன்பிடி துறைமுகம் விடுவிக்கப்படவுள்ள நிலையில் இராணுவத்தினர் 23☛

### வலம்புரி ஊடகவியலாளர் மீது

## தமிழரசுக் கட்சி எம்.பியின் வாகன சாரதி அடாவடி

(யாழ்ப்பாணம்)

வலம்புரி பத்திரிகையின் ஊடகவியலாளர் மீது தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் வாகன சாரதியால் அடாவடியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் மீனவ பிரதிநிதிகளுக்கும் இடையிலான கலந்துரையாடல் ஒன்று நேற்றைய தினம், கிறீன் கிறாஸ் விருந்தினர் விடுதியில் இடம்பெற்றது.

அப்போது மீனவ சமூகத்தினரின் கருத்துக்களை 23☛

### விசாரணைக்குழு அமைக்கப்படாவிடின்

## இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் நானாகவே ஆஜராகுவேன்!

(குருமன்காடு)



மாகாண தெரிவுக்குழு அமைக்கப்பட்டு விசாரணை செய்யாது விடின் இலஞ்ச ஊழல் ஆணைக் குழுவில் நானாக ஆஜராவேன் என வட மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொட 02☛

### கீரிமலை கடலில் மூழ்கி

## பாடசாலை மாணவன் பரிதாபமாக மரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கீரிமலை கடலில் குளிக்கச் சென்ற பாடசாலை மாணவன் ஒருவன் நீரில் மூழ்கி பரிதாபகரமாக உயிரிழந்துள்ளான்.

இதில் மல்லாகம் பாடசாலை ஒன்றில் கல்வி பயிலும் குளமங்கால் பகுதியைச் சேர்ந்த சங்கர் சங்கீதன் (வயது16) என்ற மாணவனே உயிரிழந்துள்ளான்.

பிரஸ்தாப மாணவன் நேற்று 23☛

## இழுவை மடி மீன்பிடி தடை அமுலானால் மாற்றுத் தொழில், நட்டஈடு அவசியம்

### மாவை எம்.பி வலியுறுத்து



(யாழ்ப்பாணம்) இழுவை மடி மீன்பிடி தடைச்சட்டம் கொண்டுவரப்பட்டால், உள்ளூரில் அத்தொழிலை செய்த மீனவர்களுக்கு மாற்றுத்தொழில் அல்லது நட்டஈடு வழங்கப்பட வேண்டும் என இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா கோரிக்கை விடுத்துள்ளார்.

இழுவை மீன், மீன்பிடி தொழிலை தடைசெய்யும் சட்டமூலம் எதிர்வரும் 6 ஆம் திகதி பாராளு 23☛

## த.தே.கூ - மீனவபிரதிநிதிகள் கலந்துரையாடலில் குழப்பம்



(யாழ்ப்பாணம்)

இழுவைமடி தொழிலை தடை செய்யும் சட்டமூலம் தொடர்பாக த.தே.கூ பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் மீனவ பிரதிநிதிகளுக்குமான கலந்துரையாடலில் மீனவ சமூகத்தினரின் கருத்துக்களை கூறுவதற்கு அனுமதி அளிக்காமல், பாராளுமன்ற உறுப்பினர்கள் வெளியேற முற்பட்டதால் நேற்றைய தினம் அங்கு பெரும் குழப்பநிலை ஏற்பட்டது.

இழுவை மீன், மீன்பிடி தொழிலை தடைசெய்யும் 23☛

## மிருசுவிலில் வாள்வெட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மிருசுவில் சந்தியில் இடம்பெற்ற வாள்வெட்டு சம்பவத்தில் இளைஞர் ஒருவர் படுகாயமடை 23☛

## 110-வது நாளாக போராட்டம்

(கரணவாய்)

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களினால் மருதங்கேணியில் மேற்கொள்ள 23☛

## 8.9 கிலோ கஞ்சா மீட்பு

### ஐவர் கைது

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் நேற்று பிற்பகல் சுற்றிவளைப்பில் ஈடுபட்ட வேளை சித்தன்கேணியில் உள்ள 24☛

## புதிய அரசியலமைப்பு தீர்வுகளை வழங்கும்!

### வின்ஸ்டன் பத்திராஜா நம்பிக்கை



(மட்டக்களப்பு)

புதிய அரசியலமைப்பு சிறுபான்மை மக்களின் நீண்டகால பிரச்சினைகளுக்கு தீர்வினை காண்பதாக அமையும் என தான் நம்புவதாக அரசியலமைப்பு மீளாய்வு மக்கள் பிரதிநிதிகள் பேரவையின் அதிகாரி 24☛

## "மாற்றுத் தொழில் வழங்க முடியாது"

### - சுமந்திரன் எம்.பி



(யாழ்ப்பாணம்)

இழுவை மடி மீன்பிடித்தொழிலில் ஈடுபட்டவர்களுக்கு மாற்றுத்தொழில் வழங்குவதில், எனக்கு உடன்பாடில்லை என த.தே.கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார். 23☛

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## மரண அறிவித்தல்

# தர்மகுலசிங்கம் செல்வமணி

பிறப்பு
1952 - 06 - 06



இறப்பு
2017 - 07 - 01

பண்ணாகத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தர்மகுலசிங்கம் செல்வமணி அவர்கள் 01.07.2017 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுந்தரம்பிள்ளை-நல்லமுத்து தம்பதிகளின் மகளும், அராலியை சேர்ந்த இராமநாதன்-விசாலாட்சியின் மருமகளும், தர்மகுலசிங்கம் (குலம்), அவர்களின் அன்பு மனைவியும், அமரர்களான குணரத்தினம், கமலாதேவி, இராசதுரை, உமாதேவி, ஈஸ்வரி மற்றும் தவத்துரையின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 2017.07.03ஆம் திகதி 10 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் திருவடிநிலை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:-சு.தவத்துரை
இ.இலிங்கேஸ்வரன்
இ.சுந்தரேஸ்வரன்

-குடும்பத்தினர்
தர்மகுலசிங்கம்
(கணவன்)

(9667)

## இலஞ்ச ஊழல்...

டாபில் சுகாதார அமைச்சின் ஊடகப் பிரிவால் நேற்று ஊடகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட அறிக்கை வருமாறு.

வடக்கு மாகாண அமைச்சர்கள் மீது சுமத்தப்பட்டிருந்த குற்றச்சாட்டுகள் தொடர்பில் மாகாண முதலமைச்சர் அவர்களினால் நியமிக்கப்பட்ட விசாரணைக்குழு ஏற்கெனவே விசாரணைகளை மேற்கொண்டு குற்றச்சாட்டுகளிலிருந்து விடுவிக்கப்படுவதாக தனது அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில் மீண்டுமொரு விசாரணைக்குழு நியமிக்கப்பட்டு விசாரணை செய்யப்படவுள்ளதாக முதலமைச்சர் தெரிவித்துள்ளார்.

சட்டபூர்வமான, சுயாதீனமானதொரு விசாரணைக்குழு அமைக்கப்பட்டு மீண்டும் விசாரணைகள் நடைபெறுமானால் அதற்கு முன்னைய விசாரணைக்குழுவுக்கு ஒத்துழைப்பு வழங்கியதுபோன்று பூரணமான ஒத்துழைப்பை வழங்க தயாராகவுள்ளேன். எனினும் அவ்வாறான விசாரணைக்குழு அமைக்கப்படாதவிடத்து மத்திய அரசின் சட்டபூர்வமான விசாரணைக்குழுவான இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவில் (FCID) நானாக ஆஜராகி என்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை சமர்ப்பித்து விசாரணைக்கு உட்படுவேன் என வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் மருத்துவர். ப.சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அமைச்சர் மேலும் தெரிவிக்கையில், நான் ஒருபோதும் விசாரணைக்கு பயந்தவன் அல்ல பயப்பிடவேண்டிய அவசியமும் எனக்கில்லை. நான் எந்தவிதமான குற்றங்களையும் செய்யவில்லை. இந்த மாகாணத்தின் சுகாதார துறை அபிவிருத்திக்காகவும், கொடிய யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட எமது மக்களுக்காவும் பணிசெய்யவே எனது மருத்துவ தொழிலை இராஜினாமா செய்து விட்டு பொதுவாழ்க்கைக்கு வந்தேன். அமைச்சுப்பதவியும் நான் கேட்டுப் பெற்றுக்கொள்வில்லை. துறைசார் அனுபவத்தின் அடிப்படையில் கட்சியின் தலைமையும், மாகாண முதலமைச்சரும் என்னை அமைச்சராக நியமித்தார்கள். அவர்களால் எனக்கு வழங்கப்பட்ட பதவியைக்கொண்டு மாகாணத்தின் சுகாதார துறை அபிவிருத்திக்கும், யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் எனது சக்திக்கும், மாகாண சபையின் சக்திக்கும் அப்பாற்பட்ட வகையில் அர்ப்பணிப்புடன் எனது கடமையை செய்திருக்கின்றேன். தற்போதும் செய்து கொண்டிருக்கின்றேன்.

கொடிய யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு அநாதரவாக விடப்பட்டுள்ள பொதுமக்கள், முன்னாள் போராளிகள், பெற்றோரை இழந்த சிறுவர்கள், கணவனை இழந்த மனைவிமார், விசேட தேவைக்குட்பட்டவர்கள் இவர்களை பழைய நிலைக்கு கொண்டு வருவதற்காக நாங்கள் எவ்வளவோ செய்யவேணடியுள்ளது. அவர்களுக்கான விசேட செயற்திட்டங்கள் பலவற்றை எனது அமைச்சு செய்து வருகின்றது. அதைவிடுத்து வெறும் ஆவேசப்பேச்சுக்களை மட்டும் பேசி காலத்தை வீணடிப்பதில் எனக்கு உடன்பாடில்லை. மக்களோடு மக்களாக அவர்களின் துன்பதுயரங்களில் பங்கெடுத்தவன் என்ற வகையில் அவர்களின் துயரங்களை நன்கறிவேன்

கடந்த மூன்றரை வருடங்களில் வடக்கு மாகாண சுகாதாரத்துறை பாரிய் அபிவிருத்திகளை கண்டுள்ளது. இதை கண்கூடாக பார்க்கலாம். நாட்டின் ஏனைய மாகாணங்களுக்கு முன்னுதாரணமான பல திட்டங்களை நாங்கள் செய்திருக்கின்றோம். எனினும் அரசியல் காழ்ப்புணர்ச்சிகளாலும், பதவி மோகத்தினாலும் சிலர் என்மீது அபாண்டமான பழியைச் சுமத்தியுள்ளனர் என்றார்.(செ-250)

## அறிவித்தல்

இலங்கை முதலுதவி சங்கத்தின் அதிர்ஸ்டலாப சீட்டு 02.06.2017 வெள்ளிக்கிழமை அதிர்ஸ்டம் பார்ப்பதாக இருந்தோம். ஆனால் தவிர்க்க முடியாத காரணத்தினால் 06.10.2017 வெள்ளிக்கிழமை பிற்போடப்பட்டுள்ளது என்பதை அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

(9659)

பணிப்பாளர்
இலங்கை முதல் உதவிச் சங்கம்

# 20ஆம் ஆண்டு நினைவஞ்சலி

யாழ்.ஏழாலை மேற்கைப்
பிறப்பிடமாகவும் திருநெல்வேலி கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த

## திருமதி இராஜகுமாரியம்மா (இராசாத்தி அண்ணி) சிவலிங்கம்

(ஓய்வுபெற்ற நெசவு போதனாசிரியர்)

அவர்களின் இருபதாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
20 - 11 - 1946

மறைவு
14 - 07 - 1997

திதி:-
03.07.2017

நொடிகளும் நிமிடங்களும்
நாட்களாய் மாதங்களாய் வருடங்களாய்
20 ஆகிப் போனதோ அம்மா
ஓடும் ஆண்டுகள் காலக் கணக்கு எம் கனவில் கண்டிரா
உன் விதியின் நெடுங்கணக்கு!

விதியே எமக்கு மட்டுமேன் இந்த தாய்ப்பறிப்பு
காலக் கடிகாரமே கண்ணில் மீண்டும்
ஒருமுறை எம் கடவுளைக் காட்டாயோ?
பரிதவித்தோம் திக்கற்றுக் கிடந்தோம் பின் தவழ்ந்தோம்!

இன்று தனியாக நடக்கப் பழகிக் கொண்டோம்
நீ காட்டிய நேர்வழியில் அம்மா
உன்வாசம் எம் ஊனில் ஊறி உயிரில் கலந்து சுவாசத்தின் மூச்சாகி
எம் குழந்தைகளாய் சிரிப்பதை இன்று உணர்க்கின்றோம் அம்மா!

உன் அழகு, அவர்கள் அழகு
உன் சிந்தனைகள், அவர்கள் எண்ணங்கள்
உன் கனவுகள், அவர்கள் வழித்தடம்
உன் இலட்சியங்களே அவர்கள் இறுதி இலக்கு

நொடிக்கு மேல் நொடியாக இன்று போல்
என்றும் நாம் ஐயமின்றி உணரும்
இப் பிரபஞ்ச சக்தியாய் எம்மோடு நீ இருப்பாயாக!



"ஜனனேதயம்" அம்மன் வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
திருநெல்வேலி.

உங்கள் பிரிவால் வாடும்
கணவன், பிள்ளைகள், மருமக்கள்
மற்றும் பேரப்பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போரின் இறுதிக் கட்டத்தில் மக்களை மீட்கும் திட்டத்தை

# இலங். அரசு சாகடித்தது!

## ரொபேர்ட் ஓ பிளேக் குற்றச்சாட்டு



(கொழும்பு)

போரின் இறுதிக்கட்டத்தில் புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் சிக்கியிருந்த மக்களை இந்திய-இலங்கை அரசாங்கங்களுடன் இணைந்து அமெரிக்க கடற்படையினர் மூலம் மீட்கின்ற விரிவான ஒருங்கிணைந்த திட்டம் ஒன்று இருந்தது. ஆனால் அதை இலங்கை அரசாங்கம் சாகடித்து விட்டது என இலங்கைக்கான முன்னாள் அமெரிக்கத் தூதுவர் ரொபேர்ட் ஓ பிளேக் தெரிவித்துள்ளார்.

அப்போதைய காலகட்டத்தில் கொழும்பில் அமெரிக்கத் தூதுவராகப் பணியாற்றிய பிளேக், கடந்தவாரம் வோஷிங்டனில் நடந்த கூட்டம் ஒன்றில் உரையாற்றிய போதே இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

செரன்டிபிடி எனப்படும், இலங்கையில் பணியாற்றிய அமெரிக்க தூதுவர்கள், இராஜதந்திரிகள் மற்றும் இலங்கையைச் சேர்ந்த அமெரிக்கர்கள் அங்கம் வகிக்கும் அமைப்பின் கூட்டத்தில் உரையாற்றிய ரொபேர்ட் ஓ பிளேக்,

"போரின் இறுதிக்கட்டத்தில், புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் சிக்கியிருந்த மக்களை, இந்திய, இலங்கை அரசாங்கங்களுடன் இணைந்து, அமெரிக்க கடற்படையினர் மூலம் மீட்கின்ற, விரிவான ஒருங்கிணைந்த திட்டம் ஒன்று இருந்தது.

எனினும், நோர்வேயின் சமாதான தூதுவர் எரிக் சொல்ஹெய்மையும், என்னையும் விடுதலைப் புலிகள் பணயக் கைதிகளாகப் பிடித்துக் கொள்வார்கள் என்ற அச்சத்தினால், இலங்கை அரசாங்கம் அந்த யோசனையை சாகடித்து விட்டது. ஆனால், சொல்ஹெய்மையும், என்னையும் விடுதலைப் புலிகள் பணயக் கைதிகளாகப் பிடித்துக் கொள்வார்கள் என்று நான் நம்பவில்லை.

இது விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை மீட்கின்ற முயற்சி என்றும் கூட உணர்வுகள் இருந்தன. ஆனால், அமெரிக்க கடற்படைப் படகுகள் மூலம், ஒவ்வொருவரையும் இலங்கையின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு செல்வதே இந்தத் திட்டமாக இருந்தது.

விடுதலைப் புலிகளின் கப்பல்களை மூழ்கடிக்க அமெரிக்கா உதவியதாக, இன்னொரு விவாதம் இருக்கிறது. விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்களை எடுத்துச் செல்லும் கப்பல்கள் இருக்கும் இடத்தை கண்டறிவதற்கு நாம் இலங்கைக்கு உதவினோம். இலங்கை கடற்படை தான் உண்மையில் அவற்றை தாக்கி அழித்தது.

விடுதலைப் புலிகளுக்கு உதவும் எண்ணம் எமக்கு ஒருபோதும் இருக்கவில்லை.

போர் அரங்கில் இருந்து தெற்குப் புறமாக வெளியேறுவதற்கு மக்களை விடுதலைப் புலிகள் அனுமதிக்காததால், அவர்கள் மனித கேடயங்களாகும் நிலையைக் கருத்தில் கொண்டே, இந்த மீட்பு திட்டம் வகுக்கப்பட்டது" என்றும் ரொபேர்ட் ஓ பிளேக் தெரிவித்துள்ளார். (இ-7)

## 'உமா ஓயாவுக்காக என்னை கைது செய்வதற்கு முயற்சி'

### மகிந்த ராஜபக்ஷ அச்சம்



(கொழும்பு)

"உமா ஓயா திட்டத்தால் ஏற்பட்ட பாதிப்புகளுக்கு நானே காரணம் எனவும், அதனால் என்னை கைது செய்யுமாறும், அரசசார்பற்ற நிறுவனங்கள் சில, கோரிக்கை முன்வைத்துள்ளன" என முன்னாள் ஜனாதிபதியும் நாடாளுமன்ற உறுப்பினருமான மகிந்த ராஜபக்ஷ குற்றஞ் சுமத்தியுள்ளார்.

இந்த உமா ஓயா திட்டம், வெல்லஸ்ஸ மக்களின் கோரிக்கைக்கு ஏற்பவே முன்னெடுக்கப்பட்டது எனவும், அவர் தெரிவித்தார்.

ஆனால், அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க, இந்த உமா ஓயா திட்டம், மகிந்த ராஜபக்ஷவின் பிறப்பிடமான மெதமுலனவுக்கு நீரைக் கொண்டு செல்வதற்காகவே முன்னெடுக்கப்பட்டது எனத் தெரிவித்துள்ளார்.

இந்நிலையிலேயே தன்னைக் கைது செய்ய திட்டம் தீட்டப்படுவதாக மகிந்த ராஜபக்ஷ அச்சம் வெளியிட்டுள்ளார். (இ-7)

## நிறைவேற்று அதிகாரத்தில் ஐ.தே.க. அதிக ஆர்வம்

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ரத்து செய்து நிறைவேற்று பிரதமர் முறைமை ஒன்றுக்கு செல்ல வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் இணங்கியுள்ளன.

பிரதி பிரதமர் பதவியொன்றை உருவாக்குவதற்கும் ஐக்கிய தேசியக் கட்சி பரிந்துரை செய்துள்ளது.

புதிய அரசியல் அமைப்பு உருவாக்கப்பட முன்னதாக நிறைவேற்று அதிகார பிரதமர் முறைமை உருவாக்கப்பட வேண்டுமென பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

இந்த யோசனைத் திட்டம் தொடர்பில் ஜே.வி.பி மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட கட்சிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்தி இறுதித் தீர்மானம் எடுக்கப்படவுள்ளது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இரத்து செய்வது குறித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் கவனம் செலுத்தி வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஹசரங்க டி சில்வா ஹட்ரிக், சண்டகன் 4/52

# சிம்பாப்வேயை ஊதித்தள்ளியது இலங்கை






இடது கை சுழல் பந்து வீச்சாளர்களான சண்டகன், அறிமுக வீரர் ஹசரங்க டி சில்வா ஆகியோரின் அசத்தலான சுழல்பந்து வீச்சு கைகொடுக்க, சிம்பாப்வே அணிக்கெதிரான 2ஆவது ஒரு நாள் போட்டியில் இலங்கை அணி 7 விக்கெட் வித்தியாசத்தில் இலகுவாக வெற்றி பெற்றது.

இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள சிம்பாப்வே அணி 5 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் பங்கேற்கிறது.

இத்தொடரின் முதலாவது ஒரு நாள் போட்டியில் சிம்பாப்வே அணி வெற்றி பெற்றிருந்த நிலையில்,

2ஆவது போட்டி காலி சர்வதேச விளையாட்டரங்கில் நடைபெற்றது.

இலங்கை அணி சார்பில் புது முக வீரரும் சுழற்பந்து வீச்சாளருமான ஹசரங்க டி சில்வா தனது ஒரு நாள் கிரிக்கெட் அறிமுகத்தை மேற்கொண்டார்.

போட்டியின் நாணயசுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் பந்து வீச தீர்மானித்தது.

அதன்படி சிம்பாப்வே அணிக்கு தொடக்க வீரர்களாக மசகட்சா மற்றும் சொலமன் மிர் களமிறங்கினர்.

முதல் ஒருநாள் போட்டியில் சதமடித்து இலங்கை அணி பந்து வீச்சாளர்களை கதற விட்ட சொலமன் மிர், இப்போட்டியில் டக் முறையில் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தார்.

இவரைத் தொடர்ந்து அடுத்து வந்த எர்வின் (22), வில்லியம்ஸ் (13) என வந்த வேகத்தில் பெவிலியன் திரும்பினர். மற்றொரு தொடக்க வீரரான மசகட்சா 41 ஓட்டங்கள் எடுத்து வெளியேறினார்.

இலங்கை அணியின் பந்து வீச்சை சமாளிக்க முடியாமல் சிம்பாப்வே அணி வீரர்கள் திணறினர்.

ஒரு கட்டத்தில் சிம்பாப்வே அணி 31 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 147 ஓட்டங்களை எடுத்திருந்தது.

ஆட்டத்தின் 33ஆவது ஓவரை அறிமுக வீரர் ஹசரங்க டி சில்வா வீசினார். இதை எதிர்கொண்ட வேல்லர் (33) போல்டாகி வெளியேற. அடுத்து வந்த டிரிபனோவும் எல்.பி.டபிள்யூ ஆகியும் வெளியேற ஹசரங்க டி சில்வாவுக்கு ஹட்ரிக் வாய்ப்பு கிடைத்தது.

ஹட்ரிக் பந்தாக வீசப்பட்ட அப்பந்தை எதிர்கொள்ள முடியாமல் சடாரா போல்டானார்.

சிம்பாப்வே அணி இறுதியாக 33.4 ஓவரில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 155 ஓட்டங்கள் எடுத்தது.

**காலியில் இடம்பெற்ற முதலாவது ஒரு நாள் போட்டியில் இலங்கை அணிக்கு அதிர்ச்சி வைத்தியம் கொடுத்த சிம்பாப்வே அணியை 2ஆவது ஒரு நாள் போட்டியில் இலங்கை முறைப்படி கவனித்துக் கொண்டது.**

இலங்கை அணி சார்பில் சண்டகன் 52 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும் ஹசரங்க டி சில்வா 15 ஓட்டங்களுக்கு3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

ஒரு நாள் போட்டி வரலாற்றில் அறிமுக போட்டியிலே ஹட்ரிக் விக்கெட் எடுத்து சாதனை படைத்த மூன்றாவது வீரர்என்ற பெருமையை ஹசரங்க டி சில்வா பெற்றார்.

156 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கை நோக்கி களமிறங்கிய இலங்கை அணிக்கு டிக்வெல - குணதிலக இணை ஆரம்பம் வழங்கியது.

குணதிலக 8 ஓட்டங்களிலும் அடுத்து வந்த குசல் மெண்டிஸ் முதல் பந்திலே ஆட்டமிழந்து இலங்கை அணிக்கு அதிர்ச்சி அளித்தனர்.

இருப்பினும்டிக்வெலவுடன்ஜோடி சேர்ந்த தரங்க அணியை சரிவிலிருந்து மீட்டார். இருவரும் நிதான ஆட்டத்தை வெளிப்படுத்தினர்.

இதனால் அணியின் ஓட்ட எண்ணிக்கையும் சீரான வேகத்தில் எகிறியது.

அணியின ஓட்ட எண்ணிக்கை 77 ஓட்டங்களை தொட்ட போது டிக்வெல 35 ஓட்டங்களுடன் கிரிமர் பந்து வீச்சில் பெவிலியன் திரும்பினார்.

ஆட்டத்தை கையில் எடுத்துக் கொண்ட உபுல் தரங்க அவ்வப்போது பவுண்டரிகள் அடித்து அணியின் எண்ணிக்கை குறையாமல் பார்த்துக் கொண்டார்.

இவருக்கு இணையாக ஆடிய அணியின் தலைவர் மத்தியூசும் தன் பங்கிற்கு ஓட்டங்கள் குவித்தார்.

இதனால் இலங்கை அணி இறுதியாக 30.1 ஓவரில் 3 விக்கெட் இழப்பிற்கு 158 ஓட்டங்கள் எடுத்து 7 விக்கெட் வித்தியாத்தில் வெற்றி பெற்றது.

இலங்கை அணி சார்பில் அதிகபட்சமாக உபுல் தரங்க அரைச்சதம் கடந்து 75 ஓட்டங்கள் எடுத்தார்.

இந்த வெற்றியின் மூலம் 5-போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் இரு அணிகளும் 1-1 என்ற கணக்கில் சமநிலையில் உள்ளன.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக இலங்கை அணியின் சண்டகன் தெரிவானார்.

## ஐ.சி.சி மகளிர் உலகக் கிண்ண கிரிக்கெட்

# பாகிஸ்தானை வீழ்த்தியது இந்தியா

பாகிஸ்தானுக்கு எதிரான உலக கிண்ண லீக் போட்டியில் இந்திய மகளிர் அணி 95 ஓட்டங் கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இங்கிலாந்தில் பெண்களுக்கான ஐ.சி.சி., உலக கிண்ண கிரிக்கெட் தொடர் நடக்கிறது.



டெர்பி நகரில் நடந்த 11ஆவது லீக் போட்டியில் இந்தியா - பாகிஸ்தான் அணிகள் மோதின.

இந்திய அணியில் ஷிகா பாண்டேவுக்கு பதிலாக மான்சி ஜோஷி தேர்வு செய்யப்பட்டார்.

பாகிஸ்தான் அணியில் பிஸ்மா மரூப், இம்தியாஸ் ஆகியோர் நீக்கப்பட்டு இராம் ஜாவெத், டயானா பெய்க் சேர்க்கப்பட்டனர்.

நாணயச்சுழற்சியில் வென்ற இந்திய அணித் தலைவி மிதாலி ராஜ், முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார்.

இந்திய அணிக்கு மந்தனா (2) ஏமாற்றினார். பூணம் ராத் (47) அரைச்சத வாய்ப்பை இழந்தார். அணித் தலைவி மிதாலி ராஜ் [illegible] சொற்ப ஓட்டத்தில் ஆட்டமிழந்தார்.

தீப்தி சர்மா (28), சுஷ்மா வர்மா (33) ஆறுதல் தந்தனர். கோஸ்வாமி (14) நிலைக்கவில்லை.

இந்திய அணி 50 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 169 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது. ஜோஷி (4), பூணம் யாதவ் (6) ஆட்டமிழக்காமல் இருந்தனர். பாகிஸ்தான் சார்பில் நாஷ்ரா சாந்து 4 விக்கெட் கைப்பற்றினார்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய பாகிஸ்தான் மகளிர் அணி 38.1 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 74 ஓட்டங்களை மட்டுமே எடுத்து 95 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வி அடைந்தது.

துடுப்பாட்டத்தில் பாகிஸ்தான் மகளிர் அணி சார்பில் அதிகபட்சமாக அணித் தலைவி சானா மிர் 29 ஓட்டங்கள் எடுத்தார்.

பந்துவீச்சில் இந்திய மகளிர் அணி ஏக்தா பிஷ்ட் 5 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

## பீபா கொன்பெடரேஷன் கால்பந்து

# 3ஆம் இடம் போர்த்துக்கல்




ரஷ்யாவில் நடைபெற்று வரும் பிபா கொன்பெடரேஷன் கால்பந்து தொடரில் மெக்சிக்கோவை வீழ்த்தி 3ஆவது இடம்பிடித்தது போர்த்துக்கல்

ரஷ்யாவில் பிபாவின் கொன்பெடரேஷன் கிண்ண கால்பந்து தொடர் நடைபெற்று வருகிறது. லீக் ஆட்டங்கள் முடிவில் சிலி, ஜேர்மனி, போர்த்துக்கல் மற்றும் மெக்சிக்கோ அணிகள் அரையிறுதிக்கு முன்னேறின. அரையிறுதில் மெக்சிக்கோ, போர்த்துக்கல் அணிகள் தோல்வியடைந்தன.

3ஆவது இடத்திற்கான போட்டியில் இரு அணிகளும் நேற்று மோதின. தொடக்கம் முதலே இரு அணி வீரர்களும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார்கள். போர்த்துக்கல்லுக்கு பெனால்டி வாய்ப்பு கிடைதத்து. இதை ஆட்ரியன்சில்வா கோலாக்க தவறினார். அதன்பின் இரு அணி வீரர்களுக்கும் பல வாய்ப்புகள் கிடைத்தன. இதை இரண்டு அணி கோல் காப்பாளர்களும் சாமர்த்தியமாக தடுத்தார்கள்.

ஆட்டத்தின் 54ஆவது நிமிடத்தில் மெக்சிக்கோ வீரர் அடித்த பந்தை போர்த்துக்கல் வீரர் நேட்டோ காலில் பட்டு ஓன் கோலாக மாறியது. இதனால் மெக்சிக்கோ 1:0 என முன்னிலை பெற்றது.

பின்னர் போர்த்துக்கல் வீரர்கள் பதில் கோல் அடிக்க முயற்சி செய்தனர். ஆனால் பலன் அளிக்கவில்லை. 90ஆவது நிமிடத்தில் போர்த்துக்கல் கோல் அடிக்கவில்லை. காயம் மற்றும் ஆட்டம் தடை ஆகியவற்றை கணக்கில் கொண்டு கூடுதல் நேரம் கொடுக்கப்பட்டது. அதை பயன்படுத்தி 91ஆவது நிமிடத்தில் அணித் தலைவர் பெபே கோல் அடித்தார். இதனால் 1:1 என போட்டி சமநிலையில் முடிந்தது.

நொக்அவுட் போட்டி என்பதால் கூடுதல் நேரம் ஒதுக்கப்பட்டது. 104ஆவது நிமிடத்தில் போர்த்துக்கல் அணிக்கு பெனால்டி வாய்ப்பு கிடைத்தது. அதை பயன்படுத்தி அட்ரியன் சில்வா கோல் அடித்தார். இதனால் போர்த்துக்கல் 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று 3ஆவது இடத்தை பிடித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்வரும் செப்டெம்பர் மாதம் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்

(கொழும்பு)

எதிர்வரும் செப்டெம்பர் மாதத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை நடத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆளும் கட்சியின் சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் இது குறித்து கொழும்பு ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார். இந்த விடயம் தொடர்பில் அனைத்து அரசியல் கட்சிகளும் பொதுவான இணக்கப்பாட்டை எட்டியுள்ளதாகவும் புதிய தேர்தல் முறையின் அடிப்படையில் மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடத்துவது குறித்து கட்சி மட்டத்தில் பல்வேறு சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. பெரும்பாலும் எதிர்வரும் செப்டெம்பர் மாத நிறைவிற்குள் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த சாத்தியம் உண்டு என அவர் தெரிவித்தார். (இ-7)

# ஆனந்த சமரசேகரவின் அனுமதிப்பத்திரம் ரத்து

கொழும்பின் முன்னாள் பிரதம சட்ட வைத்திய அதிகாரி, ஆனந்த சமரசேகரவின் பதிவை ஆறு மாதங்களுக்கு இரத்துச் செய்ய இலங்கை வைத்திய சபை தீர்மானித்துள்ளது.

இதற்கமைய, அவரது வைத்திய அனுமதிப் பத்திரம் ஆறு மாதங்களுக்கு தடை செய்யப்படுவதாக, வைத்திய சபையின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

மறைந்த ரக்பி விளையாட்டு வீரராக இருந்த வசிம் தாஜுடீனின் உடற்பாகங்கள் மாயமான சம்பவம் தொடர்பில் குற்றம் சுமத்தப்பட்டமை குறித்தே ஆனந்த சமரசேகரவுக்கு எதிராக இவ்வாறானதொரு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிய வந்துள்ளது.

வசிம் தாஜுடீனின் உடற்பாகங்கள் காணாமல் போன சம்பவம் தொடர்பில் கொழும்பு நீதவான் நீதிமன்றம் வழங்கிய உத்தரவுக்கு அமைய, இலங்கை வைத்திய சபையால் விஷேட விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஐந்து குற்றச்சாட்டுக்களின் கீழ் இந்த விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதோடு, அவற்றில் மூன்றில் ஆனந்த சமரசேகர குற்றவாளியாக இனங்காணப்பட்டுள்ளதாக, தெரிய வந்துள்ளது. (இ-7)


## ஏல விற்பனை

யா/இளையதம்பி இந்து வித்தியாலயத்தின் 2016 ஆம் ஆண்டிற்கான பொருட் கணக்கெடுப்பின் பிரகாரம் ஒரு தொகுதி பழைய மரத் தளபாடங்கள் ஏல விற்பனை செய்யப்படவுள்ளன.

ஏல விற்பனைத் திகதி: 19.07.2017 புதன்கிழமை
நேரம் : 10.00
இடம்: குறித்த பாடசாலை

பங்குகொள்ள விரும்புவர்கள் நேரில் சமூகமளிக்கவும்.

அதிபர்,
யா/இளையதம்பி இந்து வித்தியாலயம்,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
(இ)



## 31ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

அமரர் பேரம்பலம் செங்கமலம்




04.07.2017 செவ்வாய்க்கிழமை அன்னாரது இல்லத்தில் நிகழும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ள அனைத்து உறவுகளையும் அழைப்பதோடு, எமது குலவிளக்கின் மறைவின்போது எம்முடன் துயர் பகிர்ந்து ஆறுதல் தந்தவர்களுக்கும் பல வகையிலும் உதவிகள் புரிந்தவர்களுக்கும் எமது நன்றிகளையும் உரித்தாக்குகிறோம்.

இல- 187, "ஆ" பகுதி,
தேவிபுரம், புதுக்குடியிருப்பு
(C-8938)
குடும்பத்தினர்


# 5 தமிழ் இளைஞர்கள் மரணம் தொடர்பாக உண்மையை மறைத்ததால் மக்கள் கொதிப்பு

இங்கிலாந்து கம்பர் சான்ட் கடலில் உயிரிழந்த 5 தமிழ் இளைஞர்கள் உட்பட 7 பேரின் மரணவிசாரணை வழக்கின் தீர்ப்பால் மக்கள் கொதிப்படைந்துள்ளனர்.

உயிர்களை காக்கும் கடமையில் தவறிய பணியாளர்கள் மீதும் உண்மையை மறைக்க முயன்ற மரண விசாரணை அதிகாரி மீதும் சட்ட நடவடிக்கை தொடரும் என புலம்பெயர் சட்டத்தரணி கீத் குலசேகரம் தெரிவித்துள்ளார்.

கம்பர்சான்ட் (Camber Sand Beach) என்று அழைக்கப்படும் இங்கிலாந்தின் தெற்கிலுள்ள கரையொன்றில் ஐந்து தமிழ் இளைஞர்கள் உட்பட ஏழு பேர் நீரில் மூழ்கி இறந்தமை தொடர்பான மரண விசாரணை வழக்கு கடந்த ஐந்து நாட்களாக நடைபெற்று, கடந்த வெள்ளிக்கிழமை நிறைவுக்கு வந்துள்ளது.

இறுதியில் தீர்ப்பை வழங்கிய மரண விசாரணை அதிகாரி, அரச தரப்பின் தவறுகளை மறைத்து, இறந்தவர்கள் மீதே பழியை சுமத்தும் விதத்தில் "விளையாட்டு வினையானது" (Misadventre) என்ற தீர்ப்பை வழங்கினார். இதனால் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினர் மற்றும் பொது மக்கள் மிகவும் கொதிப்படைந்தனர்.

குறித்த விடயம் தொடர்பில் இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டிலேயே மேற் கண்டவாறு சட்டத்தரணி தெரிவித்துள்ளார்.

கடந்த ஓகஸ்ட் மாதம் 24ஆம் திகதி அன்று, ஐந்து தமிழ் நண்பர்கள் அதே கடற்கரையில் நீரில்மூழ்கி பரிதாபமாக இறந்து போனார் கள். தென்மேற்கு லண்டனை சேர்ந்த சகோதரர்களான ச.கேனுகன், ச.கோபிகாந்தன் மற்றும் இவர்களது நண்பர்களான, ர.நிதர்சன், சி.இந்துசன் சி.குருசாந்தன் ஆகிய நண்பர்களே இந்த சம்பவத்தில் இறந்து போனவர்களாவர்.

இச்சம்பவம் தொடர்பான வழக்கில் பாதிக்கப்பட்டவர்கள் சார்பில், சட்டத்தரணிகளான, பற்றிக் றொச்சி, மாசியா வில்ஸ் ஸ்ருவேட், கிலாரி நெல்சன், றொலு அக்பிலுசி மற்றும் கீத் குலசேகரம் ஆகியோர் ஆஜராகியிருந்தனர்.

வெளிப்பார்வைக்கு மிகவும் அழகாக தென்படும் கம்பர்சான்ட் கடற்கரையில் மிகவும் பயங்கரமான ஆபத்துக்கள் மறைந்துள்ளன.

ஆனால் இது பற்றி போதிய எச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்கவும், உயிர் காப்பு பணியாளர்களை நியமிக்கவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தவறியிருந்தனர்.

கடந்த ஓகஸ்டில் நடந்த ஐந்து நண்பர்களின் மரணத்தின் பின்னரே அங்கே உயிர்காப்புப் பணியாளர்கள் பணிக்கு அமர்த்தப்பட்டார்கள்.

இது தொடர்பாக கருத்து தெரிவித்த சட்டத்தரணி கீத் குலசேகரம், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இழைத்த பாரதுரமான தவறை சுட்டிக்காட்ட மறுத்தது மட்டுமல்லாமல், இறந்தவர்கள் மீதே பழியை சுமத்தும் விதத்தில் தனது தீர்ப்பை வழங்கியிருப்பது மரணவிசாரணை அதிகாரியின் மீது மிகவும் அதிருப்தியை ஏற்படுத்தி இருக்கிறது. அத்துடன் உயிர்களை காக்கும் கடமையில் தவறிய பணியாளர்கள் மீதும், உண்மையை மறைக்க முயன்ற மரண விசாரணை அதிகாரி மீதும் சட்ட நடவடிக்கை தொடரும் எனவும் தெரிவித்தார். (இ-9)


அன்பு வாசகர்களே!
உங்களுக்கும் ஓர் அரிய சந்தர்ப்பம்

நீங்கள் அறிந்த
- செய்திகள்
- புகைப்படங்கள்
- நிகழ்வுகள்
- பேசும் படங்கள்

போன்றவற்றை வலம்புரியில் வெளிவரச் செய்வதற்கு உங்கள் கைத்தொலைபேசியில் உள்ள VIBER செயலி மூலம் தகவல்களை இலகுவாக பரிமாறிக் கொள்ளுங்கள்.

VIBER செயலி இல
076 636 3378

Viber


## இராசி பலன்

03.07.2017
(ஆனி 19, திங்கட்கிழமை)
சூரிய உதயம் காலை 5.55 மணிக்கு
தசமி பின்னிரவு 1.15மணிவரை
சுவாதி பின்னிரவு 5.40 மணிவரை
சுபநேரம் 11.57-1.27 மணிவரை
இராகுகாலம் 7.27 - 8.57 மணிவரை
வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | சுக் | சூரி செவ் |
| கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் ரேவதி | | புத |
| | | | ராகு |
| | சனி | சந் | குரு |

**மேடம்:** உறவினர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், நண்பர்களின் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்குவர், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.

**இடபம்:** கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், தொழிலில் ஆர்வத்துடன் ஈடுபடுவீர்கள், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் ஏற்படலாம், குடும்ப மகிழ்ச்சி கூடும்

**மிதுனம்:** நன்மைகள் நாடி வரும் நாள், உள்ளன்போடு பழகியவர்களின் எண்ணிக்கை கூடும், பிள்ளைகள் வழியில் பெருமைக்குரிய சம்பவங்கள் இடம் பெறலாம்.

**கடகம்:** புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும், பயணங்களால் பலனுண்டு, தேவைகள் பூர்த்தியாகும் நாள், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு.

**சிம்மம்:** உறவு பகை பாராமல் ஒற்றுமையாக இருப்பீர்கள், சிந்திக்காமல் செய்த காரியங்களில் கூட சிறப்படையும் நாள், அரசியல் செல்வாக்கு மேலோங்கும் நாள்.

**கன்னி:** சுய முயற்சிகளின் மூலம் சுகம் காண வேண்டிய நாள், வீட்டுத் தேவைகள் பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும், வாக்கு மேன்மையுண்டு.

**துலாம்:** தேக நலனில் அதிக அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும், தொழிலில் புதிய பொறுப்புகளை யோசித்து செய்வது நல்லது, கற்பனை மிகுதியான நாள்.

**விருச்சிகம்:** உறவினர் தொடர்பான சில காரியங்களுக்காக சற்று அலைய நேரிடலாம், பயணத்தில் பிரபலமானவர்களின் சந்திப்பு இடம் பெறலாம்.

**தனுசு:** நினைத்தது நிறைவேறி நிம்மதி காணும் நாள், தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மகரம்:** சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், எண்ணிய காரியங்கள் எளிதில் நிறைவேறும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கும்பம்:** முன்னேற்றம் காண்பதற்கு முயற்சி எடுக்கும் நாள், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், பயணங்களால் பலனுண்டு, நேற்றைய பணியொன்று இன்றும் தொடரலாம்.

**மீனம்:** காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், தொழில் ரீதியான பயணங்களில் கூடுதல் கவனம் தேவை, குடும்பத்தில் சிறு சிறு விவாதங்கள் ஏற்படலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையின் பரிசளிப்பு விழாவும் நிறுவுனர் தினமும் கடந்த 29 ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட கல்வி அமைச்சின் பாடசாலை வேலைகள் பணிப்பாளர் கலாநிதி அபேய சுந்தர உட்பட விருந்தினர்கள் பாண்ட் வாத்திய அணியினருடன் வரவேற்று அழைத்து வரப்படுவதையும் அருட்தந்தை சி.எஸ்.ஆர்.சசிதரன், நிறுவுநர் கலாநிதி பீற்றர் பேசிவல் அடிகளாரின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவிப்பதையும் பிரதம விருந்தினர் மாணவர்களுக்கு பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

## அராலியில் முறையற்றவிதத்தில் கொட்டப்படும் கழிவுகளால் அவதி

அராலி கிழக்கு அம்மன் கோவிலுக்கு முன்பாக கடற்கரையினை அண்டிய பிரதேசத்தில் முறையற்றவிதத்தில் கொட்டப்படும் கழிவுகள் தொடர்பில் பொது அமைப்புக்கள் எதிர்ப்பினை வெளியிட்டுள்ளனர். இவ்விடத்தில் நாளாந்தம் கழிவுகள் கொட்டப்படுகின்றன.

இக் கழிவுகள் உரிய முறையில் மீள் சுழற்சி செய்யப்படாது எரிக்கப்பட்டு வருகின்றன. குறிப்பிட்ட தூர உயரத்திற்கு சுவர் அமைக்கப்பட்டு இருந்தும் பொலித்தீன்கள் காற்றோட்டதிசையில் பறந்து கால்நடைகளின் மேய்ச்சல் தரையினை நிரப்புவனவாக காணப்படுகின்றன. இதன் காரணமாக கடற்கரை சூழல் கழிவுகளால் நிரப்பப்படுகின்ற நிலை உருவாகியுள்ளது. (இ-91)

## பார்த்தீனியத்தை ஒழியுங்கள்



வடமராட்சியின் சில பகுதிகளில் பார்த்தீனியத்தின் பரம்பல் அதிகரித்துக் காணப்படுவதனால் அவற்றை அழிப்பதற்கு உரிய அதிகாரிகள் முன்வர வேண்டும் எனப் பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

உடுப்பிட்டி வீரபத்திரர் கோவிலடிப் பகுதியிலும் மண்டான்-உப்பு ரோட்டுப் பகுதிகளிலும் பார்த்தீனியத்தின் பெருக்கம் அண்மைக்காலமாக அதிகரித்துக் காணப்படுகின்றது.

இப்பகுதியில் கடந்த சில வருடங்களுக்கு முன்னரும் பார்த்தீனியத்தின் பரம்பல் அதிகரித்து காணப்பட்டதாகவும் கரவெட்டிப் பிரதேச செயலக அதிகாரிகள்அதுதொடர்பில் கவனம் எடுத்து இராணு வத்தினர், பிரதேச செயலக உத்தியோகத்தர்களை ஒருங்கிணைத்து மேற்கொள்ளப்பட்ட சிரமதானப் பணிமூலம் பார்த்தீனியம் அழிக்கப்பட்டது.

ஆனால் தற்போது அச்செடிகள் மீண்டும் பரவலடைந்து காணப்படுகின்றன.

எனவே இவற்றை அழிக்க உரிய அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-60)




## பொங்கல் விழா

(மந்துவில்)

தென்மராட்சி, மந்துவில் வடக்கு தச்சகாடு வயல் அண்ணமார் ஆலய வருடாந்த பொங்கல் விழா எதிர்வரும் 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு இடம் பெறவுள்ளது. (இ-10-101)

## மாணவர்களுக்கான மகிழ்வூட்டும் அரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.கோப்பாய் வடக்கு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையில் தரம்4,5ஆம்வகுப்புமாணவர்களுக்கான மகிழ்வூட்டும் அரங்கினூடாக கல்வியில் ஆர்வத்தை ஏற்படுத்தும் செயற்பாடு கடந்த 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வடமாகாண உளசமூக வள நிலையத்தின் வளவாளர் நா.கு.மகிழ்ச்சிகரனின் நெறிப்படுத்தலில் நடைபெற்றது.

மேலும் இந் நிகழ்வில் மனிதத்தன்மையுடன் என்றும் வாழ்வோம், நேரான சிந்தனையை வளர்த்துக் கொள்வோம், மற்றவர்களைக் குறை கூறுவதைத் தவிர்த்துக் கொள்வோம், ஒரு நேரம் ஒரு வேலையில் ஈடுபடுவோம் என்றும் மகிழ்ச்சியாக இருப்போம் போன்ற மகிழ்ச்சியூட்டும் செயற்பாடுகள் நடைபெற்றன. (இ-10-23)

## நிறைவு விழா

அமரர் சின்னட்டியன் பசுபதி ஞாபகார்த்த நிதியம் இரண்டாம் ஆண்டு நிறைவு விழா நாளை 4 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு நாவலம்பதி ஞானவைரவர் ஆலய குரு சிவ ஸ்ரீ கிருஷ்ணமூர்த்திக் குருக்களின் ஆசியுரையுடன் ஆரம்பமாகும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி.கிழக்கு (கோப்பாய்) பிரதேச செயலர் திருமதி சுபாஜினி மதியழகன் கலந்து கொள்வார். (இ-7)

## குரங்குத் தொல்லை அதிகரிப்பு

(வரணி)

வரணி இடைக்குறிச்சி மாசேரி பகுதிகளில் குரங்குகளின் தொல்லை அதிகரித்துள்ளதாக பிரதேச மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

வரணிப்பிரதேசத்தில் குரங்குகள் பயிர்களை அழிப்பதாகவும் வீடுகளுக்குள் புகுந்து உணவுப் பொருட்களை அசுத்தம் செய்வதாகவும் குரங்குகளை விரட்ட முற்படும் போது கடிக்க முற்படுவதாகவும் பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பாக கடந்த காலங்களில் உரிய அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டு குரங்குகள் பிடிப்பதற்கான கூடுகள் வழங்கப்பட்டு பின்பு குரங்குகளை கொண்டு செல்வதற்கான ஒழுங்கு விதிகள் தொடர்பான பிரச்சினை ஏற்பட்டு கூடுகள் மீளப் பெறப்பட்ட நிலையில் தற்போது குரங்குகளின் தொல்லை மீண்டும் அதிகரித்துள்ளது என்றும் இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கைகளை உடன் எடுக்குமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-10-103)

## மானிப்பாய் இந்துக் கல்லூரியின் நிறுவுநர் தினமும் பரிசளிப்பும்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் இந்துக் கல்லூரியின் நிறுவுனர் தினமும் பரிசளிப்பு விழாவும் நாளை 4ம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 8.30 மணிக்கு கல்லூரி முதல்வர் எம். இந்திரபாலா தலைமையில் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் இடம் பெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கல்லூரியின் பழைய மாணவனும் அவுஸ்திரேலிய மெல்பேர்னில் வசிக்கின்ற ஓய்வுநிலை நிலை சிரேஷ்ட பொறியியல் முகாமையாளர் கே.சரநதன் ,சிறப்பு விருந்தினராக கல்லூரியின் பழைய மாணவனும் கனடா Ryerson பல்கலைக்கழக விரிவுரையாளர் ரி.உதயகரன்,கௌரவ விருந்தினராக சண்டிலிப்பாய் கோட்ட கல்விப்பணிப்பாளர்எஸ். சிவானந்தராஜா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

நிறுவுநர் நினைவுப் பேருரையினை ஓய்வு நிலை யாழ். மாவட்ட நீதிபதி ஆர்.வசந்த சேனன் ஆற்றவுள்ளார்.

இந்நிகழ்வில் மாணவர்களது கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (இ-7)





ஒளிரும் நிலா நண்பர்கள் கழகத்தினால் யாழ். வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலய மாணவர்களுக்கு 20 பிளாஸ்ரிக் கதிரைகளும் கற்றல் உபகரணங்களும் வழங்கும் நிகழ்வு கடந்த 30 ஆம் திகதி பாடசாலை மண்டபத்தில் அதிபர் த.செல்வகுமார் தலைமையில் நடைபெற்றபோது...

(படங்கள்:- பொற்பதி செய்தியாளர்

## பொன்விழா கலை இலக்கிய போட்டி முடிவுகள் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை கணபதி படிப்பகத்தின் 50ஆவது ஆண்டு விழாவினை முன்னிட்டு வல்வை நெடியகாடு இளைஞர் கலாமன்றம் நடத்திய பொன்விழா கலை இலக்கிய போட்டிகளில் வல்வெட்டித்துறை நகர சபைக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு இடையில் நடத்தப்பட்ட போட்டிகளின் முடிவுகள்.

**கீழ்ப்பிரிவு**

கட்டுரைப்போட்டி

முதலாம் இடம்-பா.மதுரா-யாழ்.கம்பர்மலை வித்தியாலயம்,இரண்டாம் இடம்- ச.சஞ்சிகா- யாழ்.வல்லை மகளிர் மகா வித்தியாலயம், மூன்றாம் இடம்- சி.மதுநிலா- யாழ். கம்பர்மலை வித்தியாலயம்.

சிறுகதைப்போட்டி

முதலாம் இடம்-ம.மலர் நிலா- யாழ்.வல்வை மகளிர் மகா வித்தியாலயம், இரண்டாம் இடம்- சி.யாழினி- யாழ். சிதம்பரக்கல்லூரி , மூன்றாம் இடம்-வியிரமிதா-யாழ்.வல்வை மகளிர் மகா வித்தியாலயம்.

கவிதைப் போட்டி

முதலாம் இடம்-பா.மதுரா-யாழ்.கம்பர்மலை வித்தியாலயம், இரண்டாம் இடம்-சி.யாழினி- யாழ்.சிதம்பரக் கல்லூரி, மூன்றாம் இடம்-ம.மலர்நிலா- யாழ்.வல்வை மகளிர்மகா வித்தியாலயம்.

**மேல்பிரிவு**

கட்டுரைப்போட்டி

முதலாம் இடம்-செ.ஆர்த்திகா- யாழ்.வல்வை மகளிர் மகா வித்தியாலயம், இரண்டாம் இடம்-இ.பவிதா- யாழ். வல்வை சிவகுரு வித்தியாலயம், இருவர் மூன்றாம்இடம்-தி.திருவாஜனி- யாழ்.வல்வை மகளிர் மகா வித்தியாலயம், பா.கீத்தனி- யாழ்.சிதம்பரக் கல்லூரி.

சிறுகதைப்போட்டி

முதலாம் இடம்-இ.தர்சினி- யாழ்.வல்வை மகளிர் மகா வித்தியாலயம், இரண்டாம் இடம்- கே.சாமினி-யாழ்.வல்வை மகளிர் மகா வித்தியாலயம், மூன்றாம் இடம் இருவர்-சி.பிரவீனா, பா.கீர்த்தனி- யாழ். சிதம்பரக் கல்லூரி.

கவிதைப்போட்டி

முதலாம் இடம்-பா.கீர்த்தனி-யாழ்.சிதம்பரக்கல்லூரி, இரண்டாம் இடம்-இ.பவிதா-யாழ்.வல்வை சிவகுரு வித்தியாலயம், மூன்றாம் இடம்-அ.கோபிகா- யாழ்.வல்வை மகளிர்மகா வித்தியாலயம்.

**திறந்த பிரிவு**

கட்டுரைப்போட்டி

முதலாம் இடம்-மா.செல்வரத்தினம்- யா/தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயம், இரண்டாம் இடம்- இராமையா கலாரமணி- இல.19,பழைய வீதி, பலாங்கொடை, மூன்றாம் இடம்-ஜெயவதனன் காயத்திரி- மாகியப்பிட்டி, சண்டிலிப்பாய்.

கவிதைப்போட்டி

முதலாம் இடம்- சி.தங்கராசா- நாவற்கிணற்றடி, குப்பிளான் தெற்கு, இரண்டாம் இடம்-திருமதி உலகேஸ்வரி சேதுபதி- துவாளி வீதி, இமையாணன் மேற்கு, உடுப்பிட்டி, மூன்றாம் இடம்-கீழ்கரவை கி.குலசேகரன் (ஓய்வு நிலை பிரதேச முகாமையாளர்-இலங்கை வங்கி), 119/4, ஆதர் சிறிசேன மாவத்தை, அப்புத்தனை.

சிறுகதைப்போட்டி

முதலாம் இடம்-எஸ்.ஜே. ஜெயக்குமார்- குளுந்த வேலி, கரணவாய் தெற்கு, இரண்டாம் இடம்-இ.சச்சிதானந்தம்-எல்லைஒழுங்கை, தும்பளை, மூன்றாம் இடம்-செ.செல்வராஜா- 149/31, பொற்பதிவீதி.

குறிப்பு-பொன் விழா கலை இலக்கிய போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில்கள் கணபதி படிப்பகத்தின் 50 ஆவது ஆண்டு விழாவில் வைத்து வழங்கிக் கௌரவிக்கப்படும். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுத்தடுத்து வெடித்த மூன்று கார்க்குண்டுகள்

## 18பேர் உடல் சிதறிப் பலி!



(டமாஸ்கஸ்)

**உள்நாட்டுப் போர் உச்சக்கட்டத்தை எட்டியுள்ள சிரியா நாட்டின் தலைநகரான டமாஸ்கஸ் பகுதியில் நேற்று அடுத்தடுத்து மூன்று இடங்களில் நிகழ்ந்த கார்க் குண்டுத் தாக்குதல்களில் 18 பேர் துடிதுடித்து உயிரிழந்தனர்.**

சிரியாவில் ஜனாதிபதி பஷர் அல் ஆசாத்துக்கு எதிரான ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் ஜிஹாதி குழுவினர் நாட்டின் பல பகுதிகளை கையகப்படுத்தி, தங்களது ஆதிக்கத்தின்கீழ் வைத்து நிர்வகித்து வருகின்றனர். இதுதவிர, ஐ.எஸ். தீவிரவாதிகளும் சில பகுதிகளை கைப்பற்றி தங்களது கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ளனர். இந்த குழுக்களையும் வேட்டையாட அமெரிக்க விமானப் படையின் துணையுடன் அந்நாட்டு முப்படைகளும் தீவிரமாக போரிட்டு வருகின்றன.

இந்நிலையில், டமாஸ்கஸ் நகரின் மத்தியில் உள்ள தாஹிர் சதுக்கம் அருகே நேற்றுக்காலை சுமார் 6 மணியளவில் தீவிரவாதி செலுத்தி வந்த கார் பலத்த சத்தத்துடன் வெடித்து சிதறியது. இந்த பதற்றம் அடங்குவதற்குள்ளாகவே விமான நிலையம் செல்லும் நெடுஞ்சாலையில் உள்ள பாதுகாப்பு படையினரின் முகாமை குறி வைத்து வந்த இரு கார்க் குண்டுகள் வெடித்தன.

தாஹிர் சதுக்கம் அருகே வெடித்த கார்க்குண்டில் சிக்கி 8 பேர் உயிரிழந்ததாக முதற்கட்ட தகவல்கள் வெளியாகின. இந்நிலையில், மேற்கண்ட மூன்று தாக்குதல்களிலும் பலியானோர் எண்ணிக்கை 18 ஆக உயர்ந்துள்ளது.

தீவிரவாதிகள் நேற்று நடத்தியுள்ள இந்த கார்க் குண்டு வெடிப்பு தாக்குதல் கடந்த மார்ச் மாதத்திற்கு பின்னர் டமாஸ்கஸ் நகரில் நடைபெற்ற மிகப்பெரிய தாக்குதல் ஆகும்.

ஜனநாயக முறையில்மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சிரியா ஜனாதிபதி பஷர் அல் ஆசாத்தின் ஆட்சிக்கு எதிராக கடந்த 2011ஆம் ஆண்டிலிருந்து இங்கு பல்வேறு ஆயுதம் ஏந்திய புரட்சிப் படையினர் உள்நாட்டுப் போரில் ஈடுபட்டு வருகின்றனர்.

அரசுப் படைகள் மற்றும் புரட்சிப் படையினர் இடையே நடைபெற்றுவரும் சண்டையில் பொதுமக்கள் உட்பட சுமார் 3 இலட்சத்து 20 ஆயிரம் பேர் பலியாகியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (8)

## கனடாவின் 150 ஆவது பிறந்தநாளில் தமிழர் கலாசார பண்பாட்டு நிகழ்வுகள்



(ஒட்டாவா)

பல்லாயிரக்கணக்கான கனேடியர்கள் கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில் திரண்டு கொண்டாடுகின்ற கனடாவின் 150 ஆவது பிறந்த நாள் மிகக் கோலாகலமாக நடைபெற்று வருகிறது.

பல்கலாசார நிகழ்வுகள் பல ஆயிரம் மக்களின் உயிரோட்டமுள்ள பங்களிப்பு பல முக்கிய கனேடிய பிரமுகர்களின் வரவு என்று நிகழ்வுகள் களைகட்டின.

கனேடிய தமிழர் பேரவை ஏற்பாட்டில் தமிழ் பாரம்பரிய கலாசாரத்தையும் பண்பாடுகளையும் பிரதிபலிக் கும் பல கலை நிகழ்வுகளும் இங்கே நடைபெற்றன. பல ஆயிரம் தமிழர்களும் பங்கேற்று கனேடிய பூர்வீக குடிமக்களுக்கும் கனேடிய அரசுக்கும் கனேடிய நாட்டுக்கும் தங்களது நன்றியைத் தெரிவித்தனர்.

இன்றும் இந் நிகழ்வுகள் தொடரவுள்ளன. (8)

## நாட்டுக்கு தலைவர் ஊருக்கு வேலை

### மகிந்த மீது சம்பிக்க விசனம்

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நாட்டுக்கே தலைவராக இருந்த போதிலும் தனது ஊருக்கே வேலைகளை செய்ததாக அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார். உமா ஓயா ரஜரட்ட பிர தேசத்திற்கு செல்லும் மகாவி திட்டத்திற்கு தண்ணீரை வழங்கும் மூல இடம்.

இந்த தண்ணீரை வெல்லவாயவுக்கு கொண்டு சென்று அங்கிருந்து தனது ஊரான மெதமுலனவுக்கு கொண்டு செல்லும் தேவையே மகிந்த ராஜபக்ஷ வுக்கு இருந்தது.

சரியான பொறியிய லாளர்களின் ஆலோசனை களை பெறாமல் பல ஆயிரம் கோடி ரூபாய் செலவில் மகிந்த ராஜபக்ஷ இந்த திட்டத்தை ஆரம்பித்தார்.

உமாஓயா திட்டத் தினால் தற்போது ஏற்பட் டுள்ள பிரச்சினைக்கு ஜனாதிபதியும் பிரதமரும் பொறுப்புக் கூற வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது என சம்பிக்க ரணவக்க மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## கப்பல்கள் மோதி விபத்து; ஊழியர்கள் உயிர் தப்பினர்

பிரான்ஸ்-பிரிட்டனுக்கு இடையே உள்ள ஆங்கில கால்வாயில் எண்ணெய் கப்பலும் சரக்கு கப்பலும் மோதிக் கொண்ட விபத்தில், கப்பல்களில் இருந்த இந்திய ஊழியர்கள் அதிர்ஷ்டவசமாக உயிர்தப்பினர்.

பிரிட்டனையும் பிரான்ஸையும் இணைக்கும் முக்கிய கால்வாயாக ஆங்கில கால்வாய் உள்ளது. இங்கு கால்வாய் வழியாக கவுதமாலா நோக்கி ஒரு சீபிரெண்டியர் எண்ணெய் கப்பல், 38 ஆயிரம் தொன் பெற்றோலுடன் சென்று கொண்டிருந்தது. நைஜீரியாவில் இருந்து நெதர்லாந்து நோக்கி ஹூவாயன் எண்டீவர் என்ற மிகப்பெரிய சரக்கு கப்பலும் அதே பாதையில் பயணித்தது.

இவ் இரு கப்பல்களும் டோவர் துறைமுக நகரம் அருகே நேற்று முன்தினம் அதிகாலையில் மோதிக் கொண்டன. இந்த விபத்தில் இரண்டு கப்பல்களும் சேதம் அடைந்தன.

இதுபற்றி தகவல் அறிந்ததும், டோவர் மற்றும் ராம்ஸ்கேட் பகுதியில் இருந்து பிரிட்டன் கடலோர காவல்படையின் ஹெலிகொப்டர் மற்றும் படகுகள் அனுப்பி வைக்கப் பட்டன.

ஹூவாயன் எண்டீவர் கப்பலானது, இரண்டு கப்பல் பாதைகளுக்கு நடுவே நங்கூரம் பாய்ச்சி நிறுத்தப்பட்டுள்ளது. சீபிரண்டியர் கப்பலை இழுப்பதற்காக பிரான்சில் இருந்து இழுவை கப்பல் வரவழைக்கப்பட்டுள்ளது.

கப்பல்களில் இந்தியா மற்றும் சீனாவைச் சேர்ந்த 49 ஊழியர்கள் இருந்ததாகவும், அவர்கள் காயமின்றி அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பியதாகவும் பிரிட்டன் கடலோர காவல் படை தெரிவித்துள்ளது.

விபத்தில் கப்பல்கள் சேதம் அடைந்தபோதும், எண்ணெய்க் கசிவு ஏற்பட்டு, நீர் மாசுபட்டதாக தகவல் எதுவும் வெளியாகவில்லை. விபத்து குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. (8)

### சுரங்கப் பாதை இடிந்து ஒருவர் உயிரிழப்பு!

நிவிதிகல, மடார பிரதேசத்தில் மாணிக்ககல் அகழ்வுக்காக தோண்டப்பட்ட சுரங்கப் பாதை இடிந்து விழுந்ததில் 3 பேர் மண்ணில் புதைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். இச்சம்பவம் நேற்று முற்பகல் 11 மணியளவில் இடம்பெற்றுள்ளது. இவர்கள் மூவரும் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக கூறப்படுகின்றது. (இ-7)

## லொறியுடன் மோதிய பேருந்து தீக்கிரை

### 14 பேர் பலி

(மொஸ்கோ)

ரஷ்யா நாட்டின் மத்திய பகுதியில் லொறியுடன் நேருக்கு நேர் மோதிய பேருந்து தீப்பிடித்து எரிந்த விபத்தில் 14 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

ரஷ்யா நாட்டின் மத்திய பகுதியில் உள்ள டட்டர்ஸ்டான் குடியரசு எல்லைக்குட்பட்ட வீதியில் நேற்று முன்தினம் இரவு பயணிகளுடன் சென்ற ஒரு பேருந்தின் மீது எதிர்த்திசையில் வேகமாக வந்த ஒரு லொறி பயங்கரமாக மோதியது. மோதிய வேகத்தில் இரு வாகனங்களும் தீப்பிடித்து எரிந்தன.

பின்னிரவு நேரம் என்பதால் இந்த விபத்து நிகழ்ந்த போது பயணிகள் அனைவரும் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தனர். பேருந்து தீப்பிடித்து எரிவதை கண்டு அதிர்ச்சி அடைந்த பயணிகள் தங்களது உயிரை காப்பாற்றிக் கொள்ள பேருந்தில் இருந்து கீழே குதித்தனர். இருப்பினும், தீயின் கோரப் பிடியில் சிக்கிய 14 பேர் உடல் கருகி பரிதாபமாக உயிரிழந்தனர்.

வீதிப் பாதுகாப்பு முறைக்கு வாகன சாரதிகள் சரியாக மதிப்பளிக்காததால் கடந்த ஆண்டில் மட்டும் இங்கு வீதி விபத்தில் 20 ஆயிரம் மக்கள் பலியானது குறிப்பிடத்தக்கது. (8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உருத்திரபுரம் சிறுகுளத்தின் கீழான நிலக்கடலைச் செய்கை வயல் விழா



(கிளிநொச்சி)

கிளிநொச்சி உருத்திரபுரம் சிறுகுளத்தின் கீழான 80 ஏக்கர் நிலக்கடலை வயல் விழாவானது கடந்த 30 ஆம் திகதி உருத்திரபுரம் விவசாயப் போதனாசிரியர் ம.மகிலன் தலைமையில் நடைபெற்றது.

குறித்த வயல் விழா நிகழ்வில் மாகாண விவசாயப் பணிப்பாளர் எஸ்.சிவகுமார், கிளிநொச்சி மாவட்ட பிரதி மாகாண விவசாயப்பணிப்பாளர் பி.உகநாதன், உலக உணவு ஸ்தாபன அதிகாரி எஸ். பார்த்தீபன் மற்றும் மாவட்டத்தின் பாட்விதான உத்தியோகத்தர்கள், விவசாயப் போதனாசிரியர்கள், பகுதி கிராமசேவகர், பெரும்பாக உத்தியோகத்தர் மற்றும் நிலக்கடலைச் செய்கை விவசாயிகள், பாடசாலை மாணவர்கள் என பலர் பங்கேற்றிருந்தனர்.

இதில் பகுதி விவசாயப் போதனாசிரியர் தனது தலைமையுரையில் வேறுபட்ட நடுகைமுறைகளை கையாண்டமை, இயந்திர விதையிடும் கருவி மூலமான விதையிடல், திட்டமிட்ட பயிர்ச் செய்கை, நீர்ப்பாசன முகாமைத்துவம் தொடர்பாக தெளிவாக விளக்கமளித்தனர்.

மேலும் பிரதி மாகாண விவசாயப்பணிப்பாளர் தமது உரையில் கிளிநொச்சி ஒருங்கிணைந்த பண்ணையாளர் சங்கத்தின் தொழிற்பாடும், வயற்பாடசாலையின் முக்கியத்துவம் பற்றியும் கூறினார்.

இறுதியாக மாகாண விவசாயப் பணிப்பாளர் தமது உரையில் போசணையான உணவூட்டல், இளைஞர் விவசாயக் கழகங்கள் வினைதிறனாக இயங்குதல், இயந்திரமயமான விவசாய நடவடிக்கைகள் தொடர்பாகவும், விதை உற்பத்தி, சந்தைப்படுத்தல் தொடர்பாகவும் எடுத்துக் கூறினார்.

விவசாயிகள் சார்பில் நீர்ப்பாசன வாய்க்கால் புனரமைப்பு, உருத்திரபுரீஸ்வரம் இளைஞர் விவசாயக் கழகத்திற்கான கட்டட தேவை தொடர்பான கோரிக்கை முன்வைக்கப்பட்டது. தொடர்ந்து வயல் துண்டங்கள் பார்வையிடப்பட்டதுடன், அறுவடை நிகழ்வும் நடைபெற்றது. (2)

ஆடிப்பிறப்பை முன்னிட்டு

## பூநகரி கோட்டத்திற்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கிடையில் போட்டிகள்

(பூநகரி)

பூநகரி கலாசார பேரவையினால் ஆடிப்பிறப்பு நிகழ்வை முன்னிட்டு பூநகரி கோட்டப் பாடசாலை மாணவர்களுக்கிடையே பாவோதல், பேச்சு ஆகிய போட்டிகள் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுஅனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன.

போட்டியில் பங்கேற்க விரும்பும் பாடசாலைகள் உடனடியாக விண்ணப்பப் படிவங்களை பூரணப்படுத்தி பிரதேச செயலாளர், பூநகரி பிரதேச செயலகம், பூநகரி எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு பூநகரி பிரதேச செயலாளர் கேட்டுள்ளார்.

விண்ணப்பதாரர்கள்தபால் உரையின் இடது பக்க மூலையில் ஆடிப்பிறப்பு விழா போட்டிகள் - 2017 எனக் குறிப்பிடல் வேண்டும்.

போட்டிகள் மூன்று பிரிவுகளாக நடத்தப்படும்.

இதற்கமைய கனிஷ்ட பிரிவு, மத்திய பிரிவு, சிரேஷ்ட பிரிவு என மூன்று பிரிவுகளாக நடைபெறும்.

இதில் கனிஷ்ட பிரிவு தரம் ஒன்று தொடக்கம் ஐந்து வரையும் மத்திய பிரிவு ஆறு தொடக்கம் ஒன்பது வரையும் சிரேஷ்ட பிரிவு தரம் பத்து தொடக்கம் 13வரையும் நடைபெறும்.

போட்டிகள் அனைத்தும் எதிர்வரும் 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு பூநகரி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அனைத்து பாடசாலைகளிலும் கல்வி பயிலும் மாணவர்களை இப் போட்டிகளில் பங்கேற்ற வைக்குமாறு பிரதேச செயலாளரினால் கேட்கப்பட்டுள்ளது. (2-84)






ஒளிரும் வாழ்வு அமைப்பின் ஏற்பாட்டில் புதுக்குடியிருப்பு பிரதேசத்தின் உடையார்கட்டு தெற்குப் பகுதியில் மாற்றுத் திறனாளிகளுக்கான செயற்கை அவயவங்கள் மற்றும் வலுவூட்டல் உபகரணங்கள் தயாரித்தல், திருத்தம் மேற்கொள்வதற்கான கட்டடம் அமைப்பதற்கு நேற்று முன்தினம் மாலை 6 மணியளவில் அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டது. இந் நிகழ்வில் ஒளிரும் வாழ்வு அமைப்பின் தலைவர் ராஜ்குமார் தலைமையில் சிறப்பாக நடைபெற்ற இந்நிகழ்வில் வடக்கு மாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரனும் மாவட்ட செயலாளர் திருமதி ரூபவதி கேதீஸ்வரனும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரதீபன், கிராம அலுவலர், சமுர்த்தி உத்தியோகத்தர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் எனப்பலரும் கலந்து சிறப்பிததனர்.

# கோவில்புதுக்குளத்தில் கோஷ்டி மோதல்; படுகாயமடைந்த நபர் வைத்தியசாலையில்

## அவசர பொலிஸ் சேவைக்கு அழைத்தும் பயனில்லை; பொது மக்கள் குற்றச்சாட்டு

(குருமன்காடு)

வவுனியா கோவில் புதுக்குளத்தில் நடைபெற்ற கோஷ்டி மோதலொன்றின் போது குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

படுகாயமடைந்தவர் எஸ்.ரஜீவ்காந் (வயது - 32) என்ற குடும்பஸ்தர் ஆவார்.

இச் சம்பவம் கடந்த 30 ஆம் திகதி இரவு 11 மணியளவில் நடைபெற்றது.

இச்சம்பவம் பற்றி தெரிய வருவதாவது,

கோவில்புதுக்குளம் சந்தியில் நின்ற இரண்டு பேருக்கும் வீதியில் பயணித்த இருவருக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறிய நிலையில் குறிப்பிட்ட நபர் படுகாயமடைந்ததுடன் ஒருவர் தப்பியோடிய சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதனைத் தொடர்ந்து சுமார் ஒரு மணி நேரமாக அப்பகுதியில் பதற்றமான சூழ்நிலை காணப்பட்டது.

இச்சம்பவம் குறித்து வவுனியா தமிழ்மொழிமூல அவசர பொலிஸ் சேவைக்கு (076 622 4949) தகவல் வழங்கிய போதும் வவுனியா பொலிஸார் சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு வருகை தரவில்லை என பொது மக்களால் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இதேவேளை, வவுனியாவில் தமிழ்மொழி மூல அவசர பொலிஸ் சேவைக்கு அழைத்து பொலிஸாருக்கு தகவல் வழங்கினால் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் இலங்கையில் செயற்படும் ஒரேயொரு தமிழ் மொழி மூல பொலிஸ் அவசர சேவை என விளம்பரப்படுத்தியுள்ள போதும் முறைப்பாட்டுப் பெற்ற பொலிஸார் சம்பவ இடத்திற்கு வரவில்லை என்பதும்குறிப்பிடத்தக்கது. (2-250)

# இலவச சிங்கள வகுப்பு

கரித்தாஸ்கியூடெக்வன்னி நிறுவன நிதி அனுசரணையில் இலவச சிங்கள வகுப்பு கிளிநொச்சியில் மாவட்ட சமூக சேவைகள் அலுவலகத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.


வார நாட்களில் செவ்வாய், வியாழன் ஆகிய இரு நாட்களில் பிற்பகல் 2 மணி முதல் 4 மணி வரையும் வகுப்பு நடைபெறும்.

ஆறு மாதகால பயிற்சி நெறியில் இரு தடவைகள் பரீட்சை நடைபெற்று சான்றிதழ் வழங்கப்படும்.

விரும்புபவர்கள் நாளை செவ்வாய்க்கிழமை மட்டும் பிற்பகல் 2 மணிக்கு வந்து இணைந்து கொள்ள முடியும்.

கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவாளர் மண்டபத்திற்கு அண்மையில் உள்ள மாவட்ட சமூக சேவைகள் அலுவலகத்தில் தொடர்பு கொண்டு பதிவை மேற்கொள்ள முடியும். மேலதிக தகவல் தேவைப்படுவோர் 021 228 3363 என்ற தொலை பேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள முடியும். (2)

# வேலையற்ற பட்டதாரிகள் குழுவினர் சிவசக்தி ஆனந்தன் எம்.பியுடன் சந்திப்பு



(குருமன்காடு)

வடக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகளின் வவுனியா மாவட்ட பிரதிநிதிகள் குழுவினர் நேற்று முன்தினம் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனுடன் சந்திப்பை மேற்கொண்டனர். குறித்த சந்திப்பு மாவட்ட கட்சி அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்தச் சந்திப்பில் வடக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாகவும், வடக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகளால் மேற்கொள்ளப்படும் போராட்டம் தொடர்பான இன்றைய நிலைப்பாடு குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

இதேவேளை போராட்டம் தொடர்பான நாடாளுமன்ற உறுப்பினரது நிலைப்பாடு தொடர்பாக கேட்டறியப்பட்டதோடு, இதுவரை அவரது பங்களிப்பு, அக்கறை தொடர்பாக வினவப்பட்டது.

அதுமட்டுமல்லாமல்நாடாளுமன்றத்தில் போராட்டம் தொடர்பான அழுத்தங்களை எவ்வாறு வழங்கவேண்டும் என்பது தொடர்பாக விளக்கப்பட்டதோடு, வடக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகள் சமூகத்தின் மகஜர் ஒன்றும் அவரிடம் கையளிக்கப்பட்டது.

மேலும், இச்சந்திப்புகள் வடக்கு மாகாணத்தை பிரதிநிதித்துவம்செய்யும்அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களையும் கட்டம் கட்டமாக சந்திக்கும் ஏற்பாட்டில் இது முதலாவதாக இடம்பெற்ற சந்திப்பாகும்.

தனித்தனியாக சந்திப்பினை மேற்கொண்ட பின்னர் விரைவில் அனைவரையும் ஒரே மேடையில் சந்திப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பூநகரி பிரதேசசெயலர் பிரிவிற்குட்பட்ட முழங்காவில் அருள்மிகு ஸ்ரீ செல்வயோக சித்தி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த தேர்த்திருவிழா கடந்த 29ஆம் திகதி நடைபெற்றது. இவ் ஆலயத்தின் தலம் முழங்காவில் பிள்ளையார், விருட்சம் அரசமரம், தலமகிமை மேற்குப்பக்க வாயில் கொண்டதும் முழங்காது மின்னாது இடிவிழுந்து இயற்கையாக தீர்த்தம் ஊற்றெடுத்துக்காணப்படுதல் ஆகும்.

# குடிநீரின்றி அவதியுறும் பிரதேசங்களுக்கு குடிநீர் விநியோகம் தொடர்பில் ஆராய்வு



(பரந்தன்)


கிளிநொச்சியில் பூநகரி பிரதேச செயலர் பிரிவிலுள்ள வரலாற்று ரீதியாக இது வரை குடிநீர் இல்லாத பிரதேசங்களான குமுழமுனை, கரியாலை, நாகபடுவான், இரணைமாதா நகர், செல்லக் குறிஞ்சி ஆகிய பிரதேசங்களுக்கு நீர் எவ்வாறு வழங்குவது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தலைமையில் நேற்று முன்தினம் முழங்காவில் வெங்கடேஸ்வர ஆலய மண்டபத்தில் நடைபெற்றது.

குறித்த கலந்துரையாடலில் குடிநீர் இல்லாத பிரதே சங்களிற்கு எவ்வாறு நீர் வழங்குவது தொடர்பில் நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையினரால் விளக்கம் அளிக்கப்பட்டது.

இதன் போது குடி நீர் இல்லாத பிரதேசங் களில் குடிநீருக்காக ஐந்து மணித்தியாலங்கள் வரி சையில் மக்கள் காத்தி ருப்ப தாகவும் இவர்களுக்கு நீர்த் தொட்டிகளில் நீர் வழங்குவது பொருத்தமற்றது எனவும் குழாய் வழி நீர் விநியோ கமே சிறந்தது எனவும் சுட்டிக் காட்டப்பட்டது.

குறித்த கலந்துரையாடலில் வடக்கு மாகாணசபை உறுப்பினர் சு.பசுபதிப்பிள்ளை, பூநகரி பிரதேசசெயலாளர், நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையினர் ,கிராம சேவையாளர்கள், முழங்காவில் கிராம பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், ஏனைய கிராமங்களின் பொது அமைப்புக்க ளின் பிரதிநிதிகள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2-312)

# பணம் செலவு செய்து குடிநீரைப் பெறுகின்றோம்



(ஓமந்தை)

வவுனியா ஓமந்தை பகுதியில் நிலவி வருகின்ற கடும் வரட்சியையடுத்து கிணறுகளில் நீர் வற்றிக் காணப்படுகின்றது. இதனால் அப்பகுதி மக்கள் குடிநீருக்கு அலைந்து திரியும் அவலநிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தமது அன்றாட தேவைகளுக்குக் கூட கிணறுகளில் நீர் இன்மையால் தாம் பெரும் அவதியுறுவதாக பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவிக் கின்றனர். இதனால் இப்ப குதி மக்கள் அன்றாடம் ஆயிரம், ஆயிரத்து 500 ரூபா பணம் செலவு செய்து பௌசர்களில் நீர் நிரப்பி தமது தேவைகளை பூர்த்தி செய்து வருகின்றனர்.

ஆதலால் சம்பந் தப்பட்ட திணை க்களங்களின் அதிகாரிகள் கவனத்தில் கொண்டு குடிநீர் விநி யோக த்தை வழங்க முன்வர வேண் டுமென பாதிக்க ப்பட்ட மக்கள் கோரிக்கை விடுகிக்கின்றனர். (2-112)







மன்னார் மடு திருப்பதி அன்னையின் ஆடி மாத திருவிழா திருப்பலி நேற்று காலை 6.15 மணிக்கு மன்னார் மறை மாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் மேதகு ஆயர் யோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை தலைமையில் கூட்டுத் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது.

இந்தத் திருவிழா திருப்பலியை தொடர்ந்து திருச் சொரூப பவனியும் அதனைத் தொடர்ந்து அன்னையின் திருச் சொரூப ஆசியும் வழங்கப்பட்டது.

நாட்டின் சகல பாகங்களில் இருந்து சுமார் இரண்டு இலட்சத்துக்கும் அதிகமான பக்த அடியார்கள் திருவிழா திருப்பலியில் கலந்து கொண்டனர்.

## சுழற்சிமுறைக் கடன் வழங்கல் இன்று

முதியோர்களுக்கான சுழற்சிமுறை கடன் வழங்கும் நிகழ்வு இன்று திங்கட்கிழமை பி.ப 2.30 மணிக்கு கிளிநொச்சி செல்வாநகர் செந்தாமரை சிறுவர் கழகத்தில் நடைபெறும்.

முதியோர் சங்க ஆலோசகர் மு.சிவபாலன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்விற்கு முதன்மை விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக கரைச்சி பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன்,கௌரவ விருந்தினர்களாக கரைச்சி பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எஸ். பி.அமலராசா, முதியோர்களின் தொடர் அனுசரணையாளர் சி.சிவனேசன், மாவட்ட சமூகசேவை அலுவலர் வே.தபேந்திரன் ,கிராம அலுவலர் எஸ்.சுகந்தன், செல்வாநகர் அ.த.க. பாடசாலை முதல்வர் சி.கேதீஸ்வரன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (2-254)

# நந்திக்கடல் வெளிப்பிரதேசத்தில் விடுவிக்கப்பட்ட காணிகளை சுத்தம் செய்த போது வெடி பொருட்கள்

முள்ளிவாய்க்கால் கிழக்குப் பிரதேசத்தில் இறுதி யுத்தத்தில் பயன்படுத்தப்பட்ட சில குண்டுகள் நேற்றுக் காலை வெடித்துச் சிதறியுள்ளன.

முள்ளிவாய்க்கால் - நந்திக் கடல் வெளிப்பிரதேசத்தில் பொது மக்களின் வயல் நிலங்கள் உள்ளிட்ட காணிகளை படையினர் அண்மையில் விடுவித்திருந்தனர்.

இதனையடுத்து குறித்த காணிகள் காணி உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

இந்த காணி நிலங்களை பொதுமக்கள் சுத்தம் செய்து குப்பைக்கு தீ மூட்டிய போதே குறித்த குண்டுகள் வெடித்துச் சிதறியுள்ளன.

இதனால் அந்த பிரதேசத்தில் சிறிது நேரம் அசாதாரண நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் பொதுமக்கள் தமது பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொண்டமையினால் எவ்வித பாதிப்புகளும் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

யுத்தம் முடிவடைந்த நிலையிலும் அப்பகுதியில் இன்றும் வெடிபொருட்கள், மற்றும் யுத்த சுவடுகள் காணப்படுகின்றன.

புதைக்கப்பட்ட நிலையிலும், கைவிடப்பட்ட நிலையிலும் ஆங்காங்கே வெடிபொருட்கள் மற்றும் ஆயுதங்கள் மீட்கப்பட்ட வண்ணமுள்ளன.

அந்த வகையில் படையினரால் விடுவிக்கப்பட்ட நிலங்களிலும் இறுதி யுத்தத்தின் போது பயன்படுத்தப்பட்ட ஆயுதங்கள் மற்றும் வெடி பொருட்கள் காணப்படுகின்ற ன. அவற்றை சுத்தம் செய்யும் போது சில நேரங்களில் வெடி ப்பு சம்பவங்களும் ஏற்படு கின்றமை குறிப்பிடத்தக்கது. (2)







முல்லைத்தீவு மாவட்டத்தில் யாழ்.இந்துக் கல்லூரி பழைய மாணவர் ஒன்றியம் பிரித்தானிய அமைப்பினையின் அனுசரணையுடன் சுமார் 80 மில்லியன் ரூபா செலவில் சுகம் பெண்களுக்கான மையம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. இந் நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே, முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தைக் கடத்தாது ஜனாதிபதி உரிய பதில் வழங்க வேண்டும்

தமக்குரிய பதில் வழங்கப்படும் வரை தமது போராட்டம் முன்னெ டுக்கப்படும் என தெரிவித்துள் ள, வலிந்து க்காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் ஜனாதிபதி காலத்தை கடத்தாது உடன் பதில் வழங்கவேண்டும் என வலியுறுத்தியுள்ளனர்.

இறுதிக்கட்ட யுத்தத்தின் போது சரணடைந்த, கைது செய்யப்பட்ட மற்றும் யுத்த காலத்தில் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் தமது உறவுகள் தொடர்பில் உரிய தீர்வை முன்னெடுக்குமாறு வலியுறுத்தி தொடர் கவனயீர்ப்பு போராட்டத்தை முனனெடுத்துள்ளனர்

இந்நிலையில் முல்லைத் தீவு மாவட்ட செயலகத்திற்கு முன்பாக முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டம் நேற்றுடன் 117 ஆவது நாளாக இடம் பெற்று வருகின்றது.

அத்துடன் தமது பிள்ளைகளின் பெயர் விபரங்களை வெளியிடவேண்டும் என போராட்டத்தில் ஈடுபட்டுள்ள உறவுகள் வலியுறுத்தியுள்ளனர். ஆனால் தீர்வுகளின்றி போராட்டங்கள் தொடர்கின்றன. (2-281)

# அனைத்து சமூகங்களையும் அரவணைக்கக்கூடிய ஆளுநர் கிழக்கு மாகாணத்திற்கு வேண்டும் - முதல்வர்

கிழக்குமாகாணத்திற்குசிவில் சமூகத்தைச் சேர்ந்தவரும் அனைத்து சமூகங்களையும் அரவணைத்துப் பாரபட்சமின்றி ஆளுகை செய்யக் கூடியவருமான ஒருவர் ஆளுநராக நியமிக்கப்பட வேண்டும் என தான் அவாக் கொண்டுள்ளதாக கிழக்கு மாகாண முதலமைச்சர் செய்னுலாப்தீன் நஸீர் அஹமட் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண ஆளுநராக இதுவரை பணியாற்றி வந்த ஒஸ்ரின் பெர்னாண்டோ ஜனாதிபதியின் செயலாளராக நாளை செவ்வாய்க் கிழமை தொடக்கம் நியமனம் பெறப்போவதையிட்டு கிழக்கு மாகாணத்திற்கு ஆளுநர் வெற்றிடம் ஏற்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண முதலமைச்சர் மேலும் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்திற்கான புதிய ஆளுநர் நியமனவிடயமாக ஜனாதிபதி எம்மோடு தொடர்பிலுள்ளார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீமும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ஆர். சம்பந்தனும் தற்போது ஜேர்மன் நாட்டில் உள்ளார்கள்.

அவர்களும் கிழக்கு மாகாண ஆளுநர் நியமனம் தொடர்பாக ஜனாதிபதியுடன் கருத்துப் பரிமாற்றத்திலே உள்ளார்.

சிறப்பான ஒரு ஆளுநர் நியமிக்கப்படுகின்ற போது தான் கிழக்கு மாகாணத்திலே நாம் இதுவரை கட்டியெழுப்பிய நல்லாட்சியின் பலாபலன்களை மக்கள் முழுமையாக அனுபவிக்க முடியும்.

நாம் கிழக்கு மாகாண சபையைப் பொறுப்பெடுத்ததிலிருந்து இதுவரை தேசத்திற்கு முன்மாதிரியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஐக்கிய தேசியக்கட்சி ஆகியவற்றுடன் தமிழ் முஸ்லிம் சிங்கள மக்கள் இணைந்து தேசிய இன ஐக்கியத்திற்கும் நல்லாட்சிக்கும் அர்த்தம் கற்பித்து ஆட்சி நடத்தி வருகின்றோம்.

எனவே, புதிய ஆளுநரின் வருகையினாலும் கிழக்கு மாகாண சபையின் நல்லாட்சி மேலும் அர்த்தபுஷ்டியாக மாற வேண்டும் என்று அவாவுறுகின்றோம்.

இது விடயமாக நான் ஜனாதிபதியிடம் தெரிவித்துள்ளேன். அதன்படி நிச்சயமாக கிழக்கை நிர்வகிக்கக்கூடிய சிறந்ததொரு ஆளுநரை ஜனாதிபதி நியமிப்பார். அதன் நிமித்தம் இன ஐக்கியத்தைக் கட்டி வளர்க்கக்கூடிய வாய்ப்பு கிட்டும் என்ற நம்பிக்கை எமக்குள்ளது எனத் தெரிவித்துள்ளார். (இ-7)





சக்தி கலாசார மேம்பாட்டு மன்ற 15ஆவது ஆண்டு விழா அண்மையில் நல்லூர் திவ்ய ஜீவன மண்டபத்தில் இடம்பெற்றது. இதன் போது சமூக.கலைப்பணிகளுக்காய் திருமதி தவம் கலாவதி (இசை நாடகம்), ஐ.முருகதாசன் (சமயப்பணி), ஜெரால்ட் நொயல்( திரை ஊடக கலை) , செ.செல்வேந்திரா , செல்வி வீ.சாயிதா.சி.கனகராஜா (சமூகப்பணி) ஆகியோர் 'சக்தி நற்பணியாளர்' விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.


## சு.க.செயலர்; எனக்கு எதுவும் தெரியப்படுத்தப்படவில்லை

### அமைச்சர்கள் விலகல் குறித்து துமிந்த

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 18 பிரதி மற்றும் இராஜாங்க அமைச்சர்கள் எதிர்வரும் செப்டெம்பர் மாதமளவில் பதவி விலக உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி ஏற்படுத்திக்கொண்ட தேசிய அரசாங்கத்தின் உடன்படிக்கை எதிர்வரும் செப்டெம்பர் மாதத்துடன் நிறைவடைகின்றது.

ஆனால் இவ்விடயம் தொடர்பாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளர் என்ற வகையில் தமக்கு எதுவும் தெரியப்படுத்தப்படவில்லை என அமைச்சர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்தார். (இ-7)



## பிரபல பாடகரைக் கொடூரமாக தாக்கிய ராஜபக்ஷ ஆதரவாளர்கள்

பிரபல பாடகர் சுனில் பெரேரா மீது மாணவ குழு வொன்று கடுமையாக தாக்குதல் நடத்தியுள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது. கொழும்பில் அமைந்துள்ள பிரபல பாடசாலையின் பழைய மாணவர்கள் சிலரினால் இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இசை நிகழ்ச்சியில் பாடல் பாடிய ஜிப்ஸிஸ் இசை குழு தலைவர் சுனில் பெரேரா மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சுனில் பெரேரா தனது பாடலில் ராஜபக்ஷர்களின் பெயர்களை பயன்படுத்தி பாடியமையினால் கோபமடைந்தவர்களே இவ்வாறு தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

மோதலை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முயற்சித்த நிகழ்ச்சியின் அறிவிப்பாளராக செயற்பட்ட சுயாதீன தொலைக்காட்சியை சேர்ந்தவர் மீதும் தாக்குதல் மேற் கொள்ளப்பட்டுள்ளது.

எப்படியிருப்பினும் இந்த மோதலை அடுத்து நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தவர்களினால் அதனை நிறைவு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் பல சந்தர்ப்பங்களிலும் பாடகர் சுனில் பெரேரா இவ்வாறு ராஜபக்ஷர்களின் பெயர்களை பயன்படுத்தியுள்ளமையினால் மோதல்கள் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# கூட்டுறவு இயக்கத்தை வரியிலிருந்து விடுவிப்பதற்கு ஜனாதிபதி நடவடிக்கை

(கொழும்பு)

கூட்டுறவு இயக்கத்தை வரியிலிருந்து விடுவிப்பது தொடர்பில் எதிர்காலத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

குருநாகல் மாலிகாபிடிய விளையாட்டரங்கில் நேற்று முன்தினம் சனிக்கிழமை பிற்பகல் நடைபெற்ற 95 ஆவது சர்வதேச கூட்டுறவு தின நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

மக்களின் நண்பனாக செயற்பட்டுவரும் மக்கள் இயக்கமான கூட்டுறவு இயக்கத்தைப் பலப்படுத்துவது நாட்டின் வறுமையை ஒழித்துக்கட்டும் நிகழ்ச்சித்திட்டத்தின் முக்கிய அம்சமாகும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

வெளிநாட்டு சொத்துக்களை பலப்படுத்துவதைப் போன்று ஏற்றுமதி வருமானத்தை அதிகரிப்பதற்கு கூட்டுறவு இயக்கத்திற்கு சொந்தமான பெரும்பாலான துறைகளை மேம்படுத்தவேண்டும் எனக் குறிப்பிட்ட ஜனாதிபதி, ஏற்கனவேயுள்ள கைத்தொழில்களை மேம்படுத்தும் அதேவேளை புதிய கைத்தொழில்களை உருவாக்கவேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

கூட்டுறவு இயக்கத்தில் உள்ள பிரச்சினைகளை தீர்த்து எதிர்காலத்தில் அதனை பலமான இயக்கமாக மாற்றி புதிய நிகழ்ச்சித்திட்டங்களுடன் முன்கொண்டு செல்வதற்கு அரசாங்கம் அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் என்பதுடன், கூட்டுறவு இயக்கத்தின் 2020 தொலைநோக்கை வெற்றிபெறச்செய்வதற்கு இத்துறையில் உள்ள அனைவரும் தமது பொறுப்புக்களை நிறைவேற்றவேண்டும் என்றும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (இ-7)




### நயினை நாகபூஷணி தாயே

அண்டமெல்லாம் அருளும்
ஆதி பராசக்தி தாயே
அகிலம் போற்றும்
அகிலாண்டேஸ்வரித் தாயே
அலைகடலின் இசையில்
வீற்றிருந்து காட்சி தரும்
அழகை காண இப் பாரினில்
ஆயிரம் கண் போதாது தாயே...

கா.டிகுஜன்
நாவாந்துறை.

### கருணையுள்ள தாயே அம்மா

கடல் தாண்டி வந்தோம் அம்மா
உன் கருணை கருவிழிகள்
அருளைப் பொழியும் அமுதத் திருவிழிகள்
மங்காப் புகழ் பெற்ற மங்கள நாயகியே
உன்னைக் காண ஓடோடி வருகின்றோம்
அருள் தருவாய் தாயே அம்மா

பஞ்சலிங்கம் பானுஜா
வேலணை



### நீ வரவேண்டும் தாயே

நீரலை நடுவே
நித்தம் அருள் புரிபவளே
அகிலம் போற்றும் அம்பிகையே
நயினையின் நாயகியே
நாதியற்ற எங்களுக்கு
நீதி கேட்க வாருமம்மா

நாள் தோறும் உனை
நினைக்கின்றோம்
நல்லவற்றை தாருமம்மா
நேர்மையான மானிடற்கு
புது வழியை காட்டுமம்மா
நாதியற்ற எங்களுக்கு
நீதி கேட்க வாருமம்மா

உன் மகிமை காட்டிடவே
உக்கிரமாய் வாருமம்மா
விரைவாக காட்சி தந்து
வீணர்களை வீழ்த்துமம்மா
நாதியற்ற எங்களுக்கு
நீதிகேட்டு- வாருமம்மா



தேன்நிலா
நல்லூர்.

### அம்பிகையே அருள் தருவாய்

நிற்க நிழல் இன்றி
நிம்மதி தான் இல்லாமல்
கல்லூரிகள் கவனிப்பாரற்று இருக்க
கவித்துவ ஆற்றல் குறையாமல் இருக்க
(அம்பிகையே அருள்புரிவாய்)
வேதனைகள் தொலைந்து போக
சோதனைகள் உன் அருளால் நீங்கிவர
சாதனைகள் பல நிலைத்து வர
நினைத்த காரியம் உன் அருளால் நிறைவேற
(அம்பிகையே அருள் தருவாய்)
மங்கையருக்கு தோஷம் நீங்கி
மணவாழ்வு கூடி வர
மாங்கல்யம் நிலை பெற்று
மணமாலை உகந்தருள
(அம்பிகையே அருள் தருவாய்)

பா. கலாதேவி,
சண்டிலிப்பாய் மேற்கு, சண்டிலிப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





யாழ்ப்பாணம் - வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் கோவில் 16 ஆம் நாள் திருவிழாவின் போது புஷ்ப ரதத்தில் சுவாமி வீதியுலா வருவதைப் படங்களில் காணலாம். (படங்கள்:- பொ.சோபிகா)

# அன்று இனிப்பாக இருந்த சமூக வலைத்தளங்கள் இன்று கசக்கின்றன

## நாமல் ராஜபக்ஷ சுட்டிக்காட்டு



(கொழும்பு)

நல்லாட்சி அரசாங்கத்தின் மீது மக்கள் அதிகளவு எதிர்பார்ப்பை கொண்டிருந்த போதும், அரசாங்கத்தின் செயற்பாடுகள் அனைத்தும் பூச்சிய நிலைக்கு சென்றுள்ளன என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, தனது ஊடக அறிக்கையில் தெரிவித்தார்.

"உலகத்தில் சமூக வலைத்தளங்களின் தாக்கம் அதிகரித்துள்ளது. இதனை கடந்த ஆட்சி மாற்றத்தின் போது கூட நன்றாக அறியக் கூடியதாக இருந்தது.

அப்போது எம்மை நோக்கிக் கூட பல கேள்விகள் எழுப்பப்பட்டன. அதற்கு பதில் வழங்க முயன்ற போது அதைக் கேட்கும் மனோ நிலையில் மக்கள் இருக்கவில்லை. அந்தளவுக்கு ஊடகங்களின் வாயிலாக மக்கள் மனங்கள் மாற்றப்பட்டிருந்தன.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, தனது வெற்றியின் ஆரம்ப காலத்தில், ஊடகங்களையும் ஊடகவியலாளர்களையும் அதிகம் புகழ்ந்தார்.

ஆனால் தற்போது அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு எதிராக ஊடகங்கள் மாறியுள்ள போது, அதனை ஆட்சியாளர்கள் விமர்சித்து முடக்க எத்தனிக்கின்றனர். அன்று இனிப்பாக இருந்த சமூக வலைத்தளங்கள் இன்று கசக்கின்றன.

மேலும், எமது ஆட்சிக் காலத்தைக் காட்டிலும் தற்போது தான் அரசாங்கத்தை பல மடங்கு மக்கள் விமர்சிக்கின்றனர்.

உண்மையில் இன்று மக்களிடத்தில், இந்த அரசாங்கத்தின் மதிப்பு பூச்சிய நிலைக்கு வந்துவிட்டது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# கொழுப்பற்ற முட்டை தயாரிக்க நடவடிக்கை

## அமைச்சர் அமரவீர தகவல்

(கொழும்பு)

பொலன்னறுவை மாவட்டத்தில் கொழுப்பற்ற முட்டை உற்பத்தியை மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக மஹாவலி திட்ட இராஜாங்க அமைச்சர் மற்றும் மீன்பிடித்துறை அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

மஹாவலி வலயத்தில் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பில் இடம் பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இந்த கருத்தை வெளியிட்டார்.

இதன்படி, எதிர்வரும் 2 மாதங்களில் கொழுப்பற்ற முட்டை உற்பத்தியை மேற்கொண்டு சந்தையில் விநியோகிப்பதற்கு எதிர் பார்த்துள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

கோழிகளுக்கு சிகப்பரிசி தவிடு மற்றும் அரிசியை அதிகளவில் உண்ணச் செய்து இந்த திட்டம் மேற்கொள்ளப்படுகிறது.

குறித்த அரிசியில் மொனோகொலின் K எனப்படும் விற்றமின்கள் அதிகம் இருப்பதால் கொழுப்பு குறைவாகவே இருப்பதாக அவர் தெரிவித்தார். (இ-7)

# டெங்கு ஒழிப்பில் மகிந்த அணியினர்

(கொழும்பு)

நாட்டில் அதிகரித்துள்ள டெங்கு நோயினை கட்டுப்படுத்துவதற்காக ஒன்றிணைந்த எதிர்க்கட்சியின் சார்பில் டெங்கு ஒழிப்பு படையணி ஒன்றை உருவாக்கவுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மொனராகலையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி தேர்தல் நடைபெறாமையினால் உள்ளூராட்சி மன்றங்களில் மக்கள் பிரதிநிதிகள் செயற்பட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால், டெங்கு நோய் பரவும் பகுதிகளில் முறையான சுகாரதார நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாத நிலை தோன்றியுள்ளதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

எனவே, மலேரியாவை ஒழிப்பதற்காக என்.எம். பெரேரா போன்றவர்கள் முன்னெடுத்த சூரியமல் செயல் திட்டத்தை போன்ற ஒரு வேலைத் திட்டத்தை ஆரம்பிக்கவுள்ளதாக மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். (இ-7)

# புதிய அரசை தெரிவு செய்யும் காலம் உருவாகியுள்ளது

## ஜே.வி.பி. பொதுச் செயலாளர் தெரிவிப்பு

புதிய அரசாங்கமொன்றை தெரிவு செய்ய வேண்டிய காலம் உருவாகியுள்ளது எனத் தெரிவித்துள்ள ஜே.வி.பி.யின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தற்போதைய அரசாங்கத்தை தோற்கடிப் பது என்பது சிரமமான காரியமல்ல எனவும் தெரிவித்துள்ளார்.

எனினும், இதற்கு முன்னைய மகிந்த அரசாங்கத்தை மீளவும் ஆட்சிப் பீடத்தில் ஏற்றுவதனால் இந்த அரசாங்கத்தை தோற்கடிப்பதில் அர்த்தமில்லை எனக் குறிப்பிட்டுள்ள அவர் மெய்யான மாற்றம் ஒன்றையே விரும்புவதாகத் தெரிவித்துள்ளார்.

மகிந்த அரசாங்கம் மக்களிடமிருந்து திருடியது எனவும், தற்போதைய அரசாங்கம் மத்திய வங்கியிலிருந்து திருடுகின்றது எனவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.



கொழும்பில் நேற்று நடந்த கூட்டத்தில் அவர் இவ்வாறு தெரிவித்தார். (இ-7)

# மோசடியான முறையில் பரீட்சைக்கு தோற்றுவோரின் மீது நடவடிக்கை

மோசடியான முறையில், கஷ்டப் பிரதேசங்களில் விண்ணப்பம் செய்து உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றுபவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பல்கலைக்கழக நுழைவினைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் கஷ்டப் பிரதேசங்களின் ஊடாக சிலர் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றுவதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

மேலும் மாணவர்கள் வெளி மாவட்டங்களுக்கு சென்று பரீட்சைக்கு தோற்ற இடமளிக்கும் பாடசாலை அதிபர்களை பணி இடைநீக்கம் செய்ய தேவையான நடவடிக்கைகளை எடுக்கப் போவதாக பரீட்சைகள்திணைக்கள ஆணையாளர் டப்ளியூ. [illegible] தெரிவித்துள்ளார். (இ-7)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1989RC<br>நட்சத்திரம்:அத்தம்<br>உயரம்: 166cm<br>தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்<br>தொ.இ: B/7506 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 16செவ் 1 இல்<br>தகைமை/தொழில்:O/L<br>எதிர்பார்ப்பு:வெளிநாடுமட்டும்<br>தொ.இ: G/7511 |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 9சூரிசெவ் 11 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:HNDA/தனியார் தொழில்<br>தொ.இ: B/7510 | பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்:சுவாதி<br>கி.பா: 35செவ் 8 இல்<br>உயரம்: 165cm<br>தகைமை/தொழில்:A/L<br>தொ.இ: G/7513 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்:பூரட்டாதி<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்<br>தொ.இ: B/7512 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்:மிருகசீரிடம்<br>கி.பா: 13சூரிசெவ் 11 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:HNDIT/தனியார் தொழில்<br>தொ.இ: G/7514 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்:புனர்பூசம்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:O/L/அரசதொழில்<br>தொ.இ: B/7515 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்:திருவாதிரை<br>கி.பா: 35செவ் 4 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:BIT, MHRM/தனியார் தொழில்<br>தொ.இ: G/7516 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## மும்பையில் மகிழ்ச்சி வெள்ளத்தில் மக்கள்



(மும்பை)

மும்பையில் தொடர்மழை காரணமாக நகர மக்களுக்கு குடிநீர் வழங்கும் 7 ஏரிகளிலும் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. கடந்த ஆண்டுகளை விட நீர் இருப்பு அதிகரித்ததால் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

மும்பையில் கடந்த சில நாட்களாக பருவமழை தொடர்ந்து பெய்து வருகிறது.

இந்தநிலையில் நேற்று முன்தினமும் அனைத்து இடங்களிலும் பலத்த மழை பெய்தது. இதனால் தாழ்வான பகுதிகளில் மழைநீர் தேங்கி வீடுகளுக்குள் தண்ணீர் புகுந்தது. சயான், தாதர் இந்துமாதா போன்ற இடங்களில் வீதிகளில் மழைநீர் தேங்கியது. இதனால் வீதிப் போக்குவரத்து ஓரளவு பாதிக்கப்பட்டு, வாகனச்சாரதிகள் சிரமம் அடைந்தனர்.

பலத்த மழையின் காரணமாக தாதர் ரானடே ரோடு பகுதியில் மரக்கிளை ஒன்று முறிந்து விழுந்தது. இதில், அங்கு வியாபாரம் செய்து கொண்டிருந்த நடைபாதை வியாபாரி ஒருவருக்கு இலேசான காயம் ஏற்பட்டது. மேலும் ஜோகேஷ்வரி பகுதியில் மேற்கு விரைவு நெடுஞ்சாலை அருகில் உள்ள பிரான சிஸ்வாடி பாலம் மழையின் காரணமாக இடிந்து விழுந்தது.

இதேபோல நேற்று முன்தினம் காலை துறைமுக, பிரதான வழித்தடத்தில் புகையிரத சேவை பாதிப்பு ஏற்பட்டது. இதனால் பயணிகள் அவதி அடைந்தனர்.

இதுகுறித்து மத்திய ரயில்வே செய்தி தொடர்பாளர் ஏ.கே. சிங் கூறுகையில், "மின்சார புகையிரதங்கள் 10 நிமிடங்கள் வரை தாமதமாக இயக்கப்பட்டன. அதன் பின் நிலைமை சீர் செய்யப்பட்டது. பயணிகளுக்கு பெரிய அளவில் பாதிப்பு ஏற்படவில்லை" என்றார்.

இதற்கிடையே இந்த ஆண்டு ஜூன் மாதம் மும்பைக்கு குடிநீர் வழங்கும் ஏரிகளின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் நல்ல மழை பெய்துள்ளது. இதன் காரணமாக ஏரிகளின் நீர் மட்டம் உயர்ந்தது.

இதுகுறித்து மும்பை மாநகராட்சி அதிகாரி ஒருவர் கூறுகையில், "தற்போது மும்பைக்கு குடிநீர் வழங்கும் துல்சி, விகார், தான்சா, மத்திய வைத்தர்னா, மேல் வைத்தர்னா, பட்சா, மோதக் சாகர் ஆகிய 7 ஏரிகளில் 4.92 இலட்சம் மில்லியன் லீற்றர் தண்ணீர் உள்ளது. இது கடந்த 2 ஆண்டுகளை காட்டிலும் அதிகம். 2016 ஆம் ஆண்டு இதே நாளில் ஏரிகளில் 1.09 இலட்சம் மில்லியன் லீற்றர் தண்ணீரும், 2015ஆம் ஆண்டு 3.5 இலட்சம் மில்லியன் லீற்றர் தண்ணீரும் இருந்தது குறிப்பிடத்தக்கது" என்றார்.

இந்தநிலையில் கடந்த வெள்ளிக்கிழமை காலை 8.30 மணி முதல் நேற்று முன்தினம் காலை 8.30 மணி வரையிலான 24 மணி நேரத்தில் கொலபா பகுதியில் 7 மி.மீ. மழையும், சாந்தாகுருஸ் பகுதியில் 93.2 மி.மீ. மழையும் பெய்ததாக வானிலை ஆய்வு மையம் தகவல் வெளியிட்டு உள்ளது. (8)

## ராம்நாத் கோவிந்தை வெற்றிபெறச் செய்வோம்!

### முதல்வர் பழனிச்சாமி உறுதி

(சென்னை)

ஜெயலலிதாவின் விருப்பத்தை நிறைவேற்றும் வகையில் ஜனாதிபதி தேர்தலில் ராம்நாத் கோவிந்தை வெற்றி பெறச் செய்வோம் என்று முதலமைச்சர் பழனிச்சாமி தெரிவித்துள்ளார்.

சென்னை கலைவாணர் அரங்கத்திற்கு வந்த பா.ஜ.க. ஜனாதிபதி வேட்பாளர் ராம்நாத் கோவிந்த், முதலமைச்சர் பழனிச்சாமி மற்றும் அ.தி.மு.க. அம்மா ஜனாதிபதி வேட்பாளருக்கு நல்குமாறு கோரியிருந்தார்.

நேற்றைய தினம் தேசிய ஜனநாயக கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் ராம்நாத் கோவிந்த், அ.தி.மு.க. பாராளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களை நேரில் சந்தித்து ஆதரவினை கோர வருகை தந்துள்ளார். ராம்நாத் கோவிந்த் எளிய விவசாய குடும்பத்தில் பிறந்து தன்னுடைய கடின உழைப்பினாலும், நேர்மை மற்றும்



அணி எம்.பி., எம்.எல்.ஏக்களை சந்தித்து ஆதரவு திரட்டினார்.

நிகழ்ச்சியில், முதலமைச்சர் பழனிச்சாமி பேசியதாவது,

ஜெயலலிதா, பிரதமர் மோடியுடன் நல்லுறவை வைத்திருந்தார் என்பதை நாம் அனைவரும் அறிவோம். ஜெயலலிதாவின் ஆசியுடன் நான் முதலமைச்சராக பதவியேற்ற பின், பிரதமரை சந்தித்து தமிழகத்தின் வளர்ச்சித்திட்டங்களுக்காக பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தியபோது, அவரும் தமிழக நலனில் அக்கறை கொண்டு கோரிக்கைகளை பரிசீலிப்பதாக தெரிவித்தார். பிரதமர் அ.தி.மு.க.வின் ஒத்துழைப்பை தேசிய ஜனநாயக கூட்டணியின

அர்ப்பணிப்பு குணங்களாலும் தான் எதிர்கொண்ட சமூகப் பொருளாதார தடைகளை தகர்த்தெறிந்தவர். 2 முறை ராஜ்ய சபா உறுப்பினராகவும், பீகார் மாநிலத்தின் ஆளுநராகவும் திறம்பட பணியாற்றியவர், தற்போது நம்மிடையே ஆதரவு கோரி வந்துள்ளார்.

நாமும் அவரை ஆதரித்து ஜெயலலிதாவின் விருப்பத்தை நிறைவேற்றும் வகையில் நாம் அனைவரும் ஜனாதிபதி வேட்பாளர் ராம்நாத் கோவிந்தை பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் பாரத தேசத்தின் ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெறச் செய்வோம் என்பதை உறுதியுடன் தெரிவித்துக்கொள்வோம் என்று தெரிவித்துள்ளார். (8)

## மோடி அரசு தவறான வழி

### சோனியாகாந்தி



(டில்லி)

மோடி அரசு தவறான வழியில் செயற்படுகிறது' என சோனியா காந்தி கடுமையாக தாக்கியுள்ளார்.

நேரு தொடங்கிய 'நஷனல்ஹெறால்டு' என்ற பத்திரிகை மீண்டும் தொடங்கப்பட்டுள்ளது. அதன் தொடக்கவிழா நேற்று முன்தினம் டில்லியில் நடந்தது.

அவ் விழாவில் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி உரையாற்றும்போது, மத்தியில் ஆளும் பா.ஜனதா தலைமையிலான மோடி அரசை பெயர் குறிப்பிடாமல் தாக்கியுள்ளார்.

நாட்டில் உள்ள தீய எண்ணம் கொண்ட சக்திகள் சகிப்புத் தன்மைக்கு எதிராக கேள்வி எழுப்புகின்றனர். இந்தியர்கள் மாட்டு இறைச்சி சாப்பிட

## வியக்க வை

### சீனாவின்



(பீஜிங்)

சீனாவின் சோங்குயிங் நகரம் வத்தியாசமான கட்டடங்களுக்கு பெ[illegible]ர் போனது. இங்குள்ள 19 மாடி கட்டடத்தின் 7, 8வது மாடிகளுக்கு இடையே புகுந்து செல்லும் வகையில் ரயில்வே தண்டவாளம் அமைக்கப்பட்டுள்ளது.

கட்டடத்திற்குள் ரயில் புகுந்து செல்லும் வீடியோக்கள் கடந்த சில மாதங்களுக்கு முன்பு சமூக வலைத் தளங்களில் பரவின. அதுபோல, தற்போது விசித்திரமான மற்றொரு கட்டடம் பற்றிய புகைப்படங்கள் வெளியாகியுள்ளன. 5 மாடி கொண்ட அந்த கட்டடத்தின் 5வது மாடியில் பொது வழிச்

## அ.தி.மு.க - தி.மு.க. நாட்டை சீரழித்துவிட்டது

### அன்புமணி ராமதாஸ் சீற்றம்

(நெல்லை)

தாமிரபரணி ஆறு பாதுகாப்பு பொதுக்கூட்டம் பாளையங்கோட்டை சந்தைத் திடலில் நேற்று முன்திம் இரவு நடந்தது. இதில் பா.ம.க. இளைஞர் அணி தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் எம்.பி. பேசியதாவது,




தமிழகத்தில் உள்ள 33 ஆறுகளில் 32 ஆறுகளில் தண்ணீரஓடவில்லை. ஆனால் தண்ணீர் ஓடக்கூடிய ஒரு ஜீவநதி தாமிரபரணி தான். இந்த ஆற்றை பாதுகாக்க வேண்டும் என்று நாங்கள் பல ஆண்டுகளாக கோரிக்கை விடுத்து வருகிறோம்.

தாமிரபரணி ஆற்றில் கழிவு நீர் கலப்பதை தடுக்க வேண்டும். மழைக் காலங்களில் வீணாக கடலுக்கு செல்கின்ற தண்ணீரை தடுப்பணைகள் மூலமாகவும், வெள்ள நீர் கால்வாய் திட்டம் மூலமும் பாதுகாக்க வேண்டும். மணல் கொள்ளை நடக்கிறது. இதை தடுக்க வேண்டும். இல்லை என்றால் தாமிரபரணி சென்னையில் ஓடுகின்ற கூவம் நதியை போல் ஆகிவிடும்.

50 ஆண்டுகளாக தமிழகத்தை ஆட்சி செய்த அ.தி.மு.க.-தி.மு.க. நாட்டை சீரழித்துவிட்டன. புதிய அணைகள் எதுவும் கட்டவில்லை. தமிழகத்தை வளப்படுத்த என்னால் மட்டும் தான் முடியும்.

நீங்கள் மாற்றத்தை கொடுங்கள் நான் முன்னேற்றத்தை தருகிறேன்.

ஸ்டாலினுக்கு மக்கள் மீது அக்கறை இருந்தால் உங்கள் கட்சி நிர்வாகிகள் நடத்தும் மது ஆலைகளை மூடுங்கள். தமிழகத்திற்கு மத்திய அரசு பல துரோகங்களை செய்து வருகிறது.

தமிழக மக்கள் நடிகர்களை தான் நம்புகிறார்கள். இதனால் தான் நடிகர்கள் மக்களை ஏமாற்றுகிறார்கள். ரஜினிகாந்த் எனது திருமணத்திற்கு முன்பே அரசியலுக்கு வருவதாக கூறினார். அவர் எனது பேரன் திருமணத்தின் போது கூட வரமாட்டார்.

தைரியமானவராக இருந்தால் உடனே வரவேண்டும். வருவேன்.. வருவேன் என்று ஏமாற்றி கொண்டு இருப்பவர். கோழைத்தனம் கொண்டவர் ரஜினி.

காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க வேண்டும என மத்திய அரசை வலியுறுத்தினால், அவர் அரசியலுக்கு வருவதை நான் வரவேற்கிறேன். அதே நேரத்தில் தமிழகத்தை ஆட்சிசெய்ய நடிகர்கள் தேவையில்லை. நல்ல நிர்வாகிகள், நல்ல ஆட்சியாளர்கள், இளைஞர்கள், படித்தவர்கள் தேவை என்று தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் மாநில தலைவர் ஜி.கே. மணி உட்பட பலர் கலந்து கொண்டனர். (8)

## சிரிய இராணுவ நில

## இஸ்ரேல் படையின

(டமாஸ்கஸ்)

சிரிய இராணுவ நிலைகள் மீது இஸ்ரேல் படையினர் மீண்டும் நேற்று முன்தினம் சனிக்கிழமை தாக்குதல் நடத்தியதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவ்விடயம் தொடர்பில் இஸ்ரேலால் வெளியிடப்பட்ட அறிக்கையில், "சிரியாவின் கொலன் ஹைட்ஸ் பகுதியில் இஸ்ரேல் படையினர் நிலை கொண்டுள்ள நிலையில், சிரிய இராணுவத் தினரால் ஏவப்பட்ட ஷெல்கள் குறித்த பகுதியில் வீழ்ந்தன.

அதற்கு பதிலடி கொடுக்கும் வகை யில் சிரியாவின் பீரங்கி நிலைகளை குறி வைத்து தாக்குதல் நடத்தப்பட்டது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அததுடன் கொலன்ஹைட்ஸ பகுதியில் தாக்குதல் நடத்தப்படுவது சிரியாவில் தொடரும் உள்நாட்டு யுத்தத்தையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## வழியில் செயற்படுகிறது
## ந்தி கடும் தாக்கு



முடியாது. அவர்கள் நேசிக்க முடியாது. அவர்கள் பேசக் கூடாது. அவர்கள் தங்கள் எண்ணங்களை வெளிப்படுத்த முடியாது என்பன போன்ற சூழ்நிலைகளை உருவாக்கி வருகின்றனர்.

இதுபோன்ற கடுமையான சவால்களை நாடு எதிர் கொண்டுள்ளது. நாட்டில் தவறான ஆட்சி நடக்கிறது. இப்பிரச்சினைகள் குறித்து நாம் பேசாமல் வாய்மூடி மௌனமாக இருந்தால் ஆட்சியாளர்களின் நடவடிக்கைக்கு சம்மதம் தெரிவித்தது போல் ஆகிவிடும் என்று தெரிவித்துள்ளார்.

விழாவில் சோனியா காந்தியின் மகள் பிரியங்கா காந்தியும் கலந்து கொண்டார். (8)

## வட கொரியாவுக்கு பதிலடி கொடுக்க ட்ரம்ப் திட்டம்



(வோஷிங்டன்)

சர்வதேச நாடுகளின் கண்டனங்களை புறம்தள்ளி ஏவுகணைகளை செலுத்தி வரும் வடகொரியா குறித்து ஜப்பான் மற்றும் சீன தலைவர்களுடன் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் தொலைபேசியில் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

வடகொரியா நாடானது ஐ.நா. சபை மற்றும் சர்வதேச நாடுகளின் கண்டனங்களை புறம்தள்ளி தொடர்ந்து ஏவுகணைகளை செலுத்தி வருகிறது. இதனால், கொரிய தீபகற்ப பகுதி மட்டுமல்லாமல் உலக நாடுகளின் பாதுகாப்புக்கு அச்சம் நிலவுகிறது. இதன்காரணமாக, வட கொரியா மீது பல்வேறு நாடுகளும் பலதரப்பட்ட தடைகளை விதித்துள்ளன.

இந்நிலையில், வட கொரியாவின் செயற் பாடுகள் குறித்தும், அந்நாட்டுக்கு பதிலடி கொடுக்கும் விதமாக எந்த மாதிரியான நடவடிக்கையை எடுப்பது என்பது குறித்து ஜப்பான் பிரதமர் ஷின்சோ அபே மற்றும் சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் ஆகியோருடன் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ம்ரம்ப நாளை மறுதினம் தொலைபேசியில் பேச்சுவார்த்தை நடத்த உள்ளார்.

மேலும், ஜேர்மனியின் ஹம்பர்க் நகரில் கூட இருக்கும் ஜி-20 நாடுகளின் மாநாடு குறித்தும் இருநாட்டு தலைவர்களுடன் ட்ரம்ப் ஆலோசனை நடத்த உள்ளதாக வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது. (8)

## 546 இந்தியர்கள் பாக். சிறைகளில்

(இஸ்லாமாபாத்)


பாகிஸ்தானில் உள்ள சிறைகளில் 546 இந்தியர்கள் அடைக்கப்பட்டுள்ளனர். இந்த 546 இந்தியர்கள் பட்டியலை பாகிஸ்தானுக்கான இந்திய தூதர் கவுதம் பம்பாவாலேயிடம் வழங்கப்பட்டது.

பாகிஸ்தானில் உள்ள சிறைகளில் 546 இந்தியர்கள் அடைக்கப்பட்டுள்ளனர். 2008ஆம் ஆண்டு, மே மாதம் 21 ஆம் திகதி இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் இடையே கையெழுத்தான தூதரக அணுகல் ஒப்பந்தத்தின் கீழ், இந்த 546 இந்தியர்கள் பட்டியலை பாகிஸ்தானுக்கான இந்திய தூதர் கவுதம் பம்பாவாலேயிடம் வழங்கப்பட்டது. 546 பேரில் 494 பேர் மீனவர்கள்.

இதேபோன்று இந்திய சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள பாகிஸ்தான் பிரஜைகளின் பட்டியலை இந்தியாவுக்கான பாகிஸ்தான் தூதரிடம் மத்திய அரசு வழங்கும் என தகவல்கள் கூறுகின்றன.

இது தொடர்பாக பாகிஸ்தான் வெளியுறவு அலுவலகம் கூறுகையில், "இரு நாடுகளும் தூதரக அணுகல் ஒப்பந்தத்தின்படி, ஒவ்வொரு ஆண்டிலும் ஜனவரி முதலாம் திகதியும், ஜூலை முதலாம் திகதியும், பரஸ்பரம் எதிர்தரப்பு கைதிகளின் பட்டியலை வழங்க வேண்டும் என்பதைப் பின்பற்றி இந்திய தூதரிடம் பாகிஸ்தானில் உள்ள இந்திய கைதிகளின் பட்டியல் தரப்பட்டுள்ளது" என்று தெரிவித்தது. (8)

## வைக்கும்
## ன் கட்டடம்



பாதை அமைக்கப்பட்டுள்ளது.

மலையை ஒட்டிய அக்கட்டடம் மன ப்பாதை வழியாக கட்டடத்தின் வீதியை அடையுறுமாறு அமைக்கப்பட்டுளளது. அச்சாலையில் ஒருபுறம் முழுவதும் கடைகளும் வீதியோரம் மரங்களும் உள்ளன.

இவ்வீதி வழியாக இறங்கி கட்டடத்தின் தரைத்தளத்திற்கு வர லாம். அங்கு வாகனத் தரிப்பிடத்துடன் ஏராளமான கடைகளும் உள்ளன.

கார்கள் சென்று வந்தாலும், கட்டடத்தின் இடைப்பட்ட தளங்களில் வசிக்கும் மக்களுக்கு எந்த சத்தமும் கேட்காத வகையில் நவீன தொழில் நுட்பமும் பயன்படுத்தப்பட்டுள்ளது. (8)

## நிராகரிக்கப்படுவதற்காகவே நிபந்தனைகள் உருவாக்கம்

### கட்டார் வெளியுறவு அமைச்சர் குற்றச்சாட்டு

(சவுதி)

சவுதி உள்ளிட்ட நான்கு நாடுகளால் கட்டாருக்கு விதிக்கப்பட்ட நிபந்தனைகள், கட்டாரின் இறையாண்மையை பாதிக்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளதென கட்டார் வெளியுறவு அமைச்சர் ஷெய்க் மொஹமட் பின் அப்துல்ரஹ்மான் அல் - தானி தெரிவித்துள்ளார்.

இத்தாலியின் ரோம் நகரில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடத்தப்பட்ட ஊடகவியலாளர் மாநாட்டில் துருக்கி ஜனாதிபதியுடன் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

குறித்த விடயம் தொடர்பில் அவர் உரையாற்றுகையில், "கட்டாருக்கு விதிக்கப்பட்ட நிபந்தனைகள் நிராகரிக்கப்படுவதற்காகவே உருவாக்கப்பட்டுள்ளன. ஏனெனில், அவை தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தவோ அல்லது அனுசரித்துச் செல்லவோ அவர்கள் விரும்பவில்லை. குறித்த நிபந்தனைகள்நாட்டின்இறையாண்மையை பாதிக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றை எவ்வாறு ஏற்றுக் கொள்வது? நிபந்தனைகள் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் அல்லது நிராகரிக்கப்பட வேண்டும் எனும் அடிப்படையிலேயே அவை உருவாக்கப்பட்டுள்ளன எனத் தெரிவித்தார். (8)

## ராமேஸ்வரம் மீனவர்கள் விரட்டியடிப்பு

(ராமேஸ்வரம்)

கச்சதீவு அருகே மீன் பிடித்துக் கொண்டிருந்த ராமேஸ்வரம் மீனவர்கள் 4 ஆயிரம் பேரை இலங்கை கடற்படை விரட்டியடித்தது.

ராமேஸ்வரத்தில் இருந்து 600-க்கும் மேற்பட்ட விசைப படகுகளில் 4 ஆயிரம் மீனவர்கள் மீன் பிடிப்பதற்காக நேற்று முன்தினம் கச்சதீவு அருகே படகுகளை நிறுத்தி மீன்பிடி பணியில் ஈடுபட்டனர்.

அப்போது 10இற்கும் மேற்பட்ட குட்டி ரோந்து கப்பல்களில் அங்கு வந்த இலங்கை கடற்படையினர் தமிழக மீனவர்களை பார்த்து 'இது எங்கள் எல்லைப் பகுதி, இங்கு மீன் பிடிக்கக் கூடாது' என எச்சரித்தனர்.

இதனைத் தொடர்ந்து மீனவர்கள் அவசர அவசரமாக அங்கிருந்து புறப்பட முயன்றனர்.

அப்போது இலங்கை கடற்படையினர் சில படகுகளுக்குள் புகுந்து மீனவர்களை தாக்கினர்.

இலங்கை கடற்படையினரின் இந்த நடவடிக்கையால் மீனவர்கள் மீன் பிடிக்காமல் நேற்றுக்காலை கரை திரும்பினர்.

மீனவர்கள் மீதான தாக்குதல் ராமேஸ்வரம் பகுதியில் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

இந்த நிலையை மாற்ற மத்திய, மாநில அரசு கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என மீனவர்கள் வலியுறுத்தினர். (8)

## லைகள் மீது
## ர் தாக்குதல்



குறிக்கும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும், இந்த தாக்குதலில் உயிரிழப்புக்கள் எவையும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிரியா வில் உள்ள இஸ்ரேல் படையினர் சிரிய இராணுவ தளங்களை குறிவைத்து தாக்குதல் நடத்துவது கடந்த 10 நாட்களாகத் தொடர்கின்றது என தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (8)

## ஐ.நாவுக்கு இந்தியா நன்கொடை

(நியூயோர்க்)

உள்நாட்டுப் போர் மற்றும் வன்முறை வெறியாட்டங்களால் பாதிக்கப்படும் நாடுகளில் ஐக்கிய நாடுகள் சபையில் ஆற்றப்படும் அமைதிப் பணிகளுக்காக இந்த ஆண்டு நன்கொடையாக 5 இலட்சம் டொலர்கள் அளிக்கப்படும் என இந்தியா அறிவித்துள்ளது.

உள்நாட்டுப்போர் மற்றும் கலவரங்களால் பாதிக்கப்பட்டுள்ள நாடுகளிலும், தீவிரவாதத்தால் நிலைகுலைந்துப் போய் கிடக்கும் நாடுகளிலும் ஐக்கிய நாடுகள் சபையின் அமைதியை நிலைநாட்டும் முயற்சிக்காக கடந்த 2005-ம் ஆண்டு ஒரு சிறப்பு பிரிவு உருவாக்கப்பட்டது.


இப் படையில் ஐக்கிய நாடுகள் சபையில் அங்கம் வகிக்கும் 193 நாடுகளை சேர்ந்த இராணுவ வீரர்களும், பொலிஸ் அதிகாரிகளும் இடம்பெறுகின்றனர். இந்தியாவின் சார்பில் மட்டும் 10 நாடுகளில் 7,798 அமைதிப்படையினர் இது போன்ற பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஒவ்வொரு நாட்டிலும் இப் படையினருக்கென தனி முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவர்களுக்கான சம்பளம், உணவு மற்றும் பராமரிப்பு செலவினங்களுக்கு ஐ.நா.சபையில் இடம் பெற்றுள்ள நாடுகள் ஆண்டு தோறும் தங்களது பங்களிப்பை அளித்து வருகின்றன. அவ்வகையில், இவ் அமைதிப் பணிக்காக இந்த ஆண்டின் பங்களிப்பாக 5 இலட்சம் அமெரிக்க டொலர்களை அளிக்க இந்தியா முன்வந்துள்ளது.

இதுவரை, ஐக்கிய நாடுகள் சபையில் ஆற்றப்படும் அமைதிப் பணிகளுக்காக தனது பங்களிப்பாக 50 இலட்சம் அமெரிக்க டொலர்களை இந்தியா வழங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது. (8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





யாழ்.தெல்லிப்பழை, யூனியன் கல்லூரியின் மாணவர் பாராளுமன்ற அமர்வும், சாதனையாளர் பரிசளிப்பு விழாவும் கடந்த வெள்ளிக்கிழமை பாடசாலை அதிபர் வரதன் தலைமையில் இடம்பெற்றன. இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் கலந்துகொண்டதுடன் மாகாண மட்டத்தில் விளையாட்டு நிகழ்வுகளில் இடம்பெற்ற வீர,வீராங்கனைகளுக்கான பரிசில்கள் வழங்கும் நிகழ்வுகளும் இடம்பெற்றன. இந் நிகழ்வுகளில் மாகாண சபை உறுப்பினருடன், பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

# ஜி.எஸ்.ரி.வரி விதிப்பால் பொதுமக்கள் அதிருப்தி

ஜி.எஸ்.ரி. வரி விலை உயர்வு பொதுமக்கள் மத்தியில் கடுமையான அதிருப்தியை ஏற்படுத்தி உள்ளது. இதனால் நாடு முழுவதும் எதிர்ப்பு கிளம்பி இருக்கிறது.




வர்த்தக விற்பனை பொருட்களுக்கு இதுவரை மத்திய-மாநில அரசுகள் பல்வேறு வரிகளை விதித்து வந்தன.

இதை மாற்றி ஒரே வரி மட்டும் விதிக்கும் வகையில் சரக்கு சேவை வரி என்ற ஜி.எஸ்.ரி. வரி விதிப்பு முறை கொண்டு வரப்பட்டுள்ளது.

இந்த வரிவிதிப்பு முறை நேற்று முன்தினம் முதல் நாடு முழுவதும் அமுலுக்கு வந்தது. இதில், பொருட்களுக்கு தகுந்த மாதிரி 4 வகையான வரி விகிதங்கள் உள்ளன.

அதாவது 5 சதவீதம், 12 சதவீதம், 18 சதவீதம், 28 சதவீதம் என 4 பிரிவாக வரிகள் விதிக்கப்படுகிறது. ஒரு சில பொருட்களுக்கு மட்டும் முற்றிலும் வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

ஜி.எஸ்.ரி. வரியால் விலைவாசி குறையும் என்று தான் முதலில் கூறப்பட்டது. ஆனால், நேற்று முன்தினம் அமுலுக்கு வந்த நிலயில் பல்வேறு அத்தியாவசிய பொருட்களின் விலையும், மக்களின் முக்கிய தேவைகளுக்கு பயன்படுத்தும் இலத்திரனியல் பொருட்களின் விலையும் மிகவும் அதிகரித்துள்ளது.

இது, பொதுமக்கள் மத்தியில் கடுமையான அதிருப்தியை ஏற்படுத்தி உள்ளது. இதனால் நாடு முழுவதும் எதிர்ப்பு கிளம்பி இருக்கிறது.

காஷ்மீர் மாநிலத்தில் ஜி.எஸ்.ரி. வரியை எதிர்த்து வணிகர்கள் ஏற்கனவே போராட்டத்தை தொடங்கி இருந்தனர். நேற்று முன்தினம் மாநிலம் முழுவதும் பெரும்பாலான கடைகள் அடைக்கப்பட்டு இருந்தன.

பொதுமக்களும் ஜி.எஸ்.ரி. வரிக்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டம் நடத்தினார்கள். இதனால் ஸ்ரீநகரில் 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இதேபோல் ஆந்திராவிலும் மேலும் பல மாநிலங்களிலும் கடையடைப்பு நடந்தது. ஆடைகள் உற்பத்தியில் குஜராத் மாநிலம் தான் இந்தியாவில் முன்னணியில் உள்ளது. ஆடைகளுக்கு வரி உயர்வால் அங்கு கடுமையான பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இதனால் குஜராத்தில் ஆடைவிற்பனை நிறுவனங்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டன. அகமதாபாத், சூரத் உள்ளிட்ட நகரங்களில் ஆடை கடைகள் முற்றிலும் அடைக்கப்பட்டு இருந்தன. மொத்த வியாபாரிகளும் நேற்று முன்தினம் வியாபார நடவடிக்கையில் ஈடுபடவில்லை. அகமதாபாத்தில் பின்னல் ஆடை உற்பத்தி முற்றிலும் முடங்கியது.

இலத்திரனியல் கடைகளில் பெரும்பாலான பொருட்கள் ஜி.எஸ்.ரி. வரியால் விலை உயர்ந்து காணப்பட்டன. எனவே, பொருட்கள் வாங்க வந்தவர்கள் கூட முந்தைய விலையை விட அதிகமாக இருந்ததால் அவற்றை வாங்காமல் திரும்பி சென்றனர்.

பெரிய ஹோட்டல்களில் உணவுப் பொருட்களில் விலை அதிக மாக இருந்தது. இது பற்றி சென்னையில் உள்ள ஹோட்டல் ஒன்றின் மேலாளர் கூறும் போது, இதற்கு முன்பு உணவு பொருட்களுக்கு 2.5 சதவீதம் வற் வரி மட்டும் வசூலித்து வந்தோம்.

இப்போது ஜி.எஸ்.ரி. வரியால் உணவு பொருட்களுக்கு அதிக வரி வசூலிக்க வேண்டிய நிலை வந்துள்ளது. எனவே, விலையை உயர்த்தி விட்டோம் என்று கூறினார்.

அதே நேரத்தில் பீசா, பர்கர் போன்ற மேலை நாட்டு உணவுகளை விற்கும் சங்கிலித்தொடர் கடைகளில் விலை குன்றவாக காணப்பட்டது. ஏனென்றால், முன்பு இந்த பொருட்களுக்கு 30 சதவீத வரி இருந்தது. தற்போது 18 சதவீதமாக வரி குறைந்துள்ளது. எனவே, விலையை குறைத்து பொருட்களை விற்றனர்.

ஒரு சில கார்களின் விலையும் குறைந்திருந்தது. மாருதி நிறுவனத்தின் சில வகையான கார்கள் விலை 3 சதவீதம் வரை குறைந்து இருந்தது. அதே நேரத்தில் அதி சக்தி கொண்ட கார்களின் விலை ரூ.ஒரு இலட்சம் வரை அதிகரித்து இருந்தது.

ஜி.எஸ்.ரி தொடர்பாக முன்னாள் மத்திய நிதி அமைச்சரும் காங்கிரஸ் மூத்த தலைவருமான ப.சிதம்பரம் கூறும்போது, ஜி.எஸ்.ரி. வரி முறையை கொண்டு வர காங்கிரஸ்தான் முடிவு செய்தது. நாங்கள் இதற்கு ஆதரவாகவும் இருந்தோம்.

ஆனால் இப்போதுகொண்டு வந்துள்ள ஜி.எஸ்.ரி. வரி விகிதங்களை உரிய நிபுணர்களை கொண்டு தயாரிக்கவில்லை. தலைமை பொருளாதார ஆலோசகர்களுடைய ஆலோசனையையும் பெறவில்லை. நாங்கள் கொண்டு வந்த வடிவமைப்பில் இந்த ஜி.எஸ்.ரி. வரி முறை இல்லை. இதனால், நாட்டுக்கு நன்மை கிடைக்க போவதுமில்லை என்று கூறினார்.

இதுகுறித்து தமிழ்நாடு வணிகர்சங்கங்களின்பேரவை தலைவர் த.வெள்ளையன் கூறியதாவது,

ஜி.எஸ்.ரி. வரி விதிப்பா[illegible] சில்லறை வணிகர்கள் மிகவும் பாதிக்கப்படுவார்கள். நமது நாட்டின் சுயதொழில்கள் உள்நாட்டு உற்பத்திகள் அழியும் நிலை ஏற்படும்.

நமது நாட்டில் ஒன்லைன் வணிகத்தை அதிகரிக்க அமெரிக்கா செய்த திட்டமிட்ட சதி ஆகும். பணக்கார நாடுகளின் நிர்ப்பந்தத்தால் ஜி.எஸ்.ரி. வரி அமுல் படுத்தப்பட்டுள்ளது.

ஜி.எஸ்.ரி. வரி விதிப்பால் அந்நியர்கள் நமது நாட்டுக்குள் மீண்டும் ஆதிக்கம் செலுத்தவருவார்கள். நம[illegible] நாட்டின் சுதந்திரம் பறிபோகும் நிலை ஏற்படும். மீண்டும் காலனி ஆதிக்கத்தை உருவாக்க முயலுவார்கள் என்றார்.

எனினும் அத்தியாவசிய மருந்துகளின் விலை ஓகஸ்ட் மாதம் வரை உயர்த்தப்படாது என்று தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜி.எஸ்.ரி கொண்டு வரப்படுவதற்கு முன்பு இருந்த விலையிலேயே மருந்துகளை வாங்கிக் கொள்ளலாம் என மருந்து விற்பனை துறையினர் தெரிவித்துள்ளனர். (8)

# இரட்டைக்குடியுரிமையுடன் மேலும் 9 நாடாளுமன்ற உறுப்பினர்கள்

நாடாளுமன்றத்தில்மேலும் 9 இரட்டைக் குடியுரிமை கொண்ட உறுப்பினர்கள் அங்கம் வகிப்பதாகவும், அவர்களின் பெயர்களை அம்பலப்படுத்தப் போவதாகவும், கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் காலி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கீதா குமாரசிங்க சுவிஸ் நாட்டின் குடியுரிமையைக் கொண்டவர் என்பதால், அவர் நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவி வகிக்கத் தகைமையற்றவர் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது. இதற்கு எதிராக அவர் மேல்முறையீடு செய்துள்ளார்.

இந்த நிலையில், நாடாளுமன்றத்தில் மேலும் சில இரட்டைக்குடியுரிமை கொண்ட உறுப்பினர்கள் இருப்பதாக சர்ச்சைகள் எழுந்துள்ளன.

இந்த நிலையிலேயே, மேலும் 9 இரட்டைக் குடியுரிமை உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிப்பதாக உதய கம்மன்பில கூறியுள்ளார்.



அவர்களில் அமைச்சர் ஒருவர், சுவிஸ் குடியுரிமையைப் பெற்றவர் என்றும், ஐவர் கனேடிய குடியுரிமை கொண்டவர்கள் என்றும், இருவர் நோர்வே குடியுரிமையையும், ஒருவர் ஜேர்மன் குடியுரிமையையும் கொண்டவர்கள் என்றும் உதய கம்மன்பில தெரிவித்தார்.

இவர்களின் பெயர்களை விரைவில் வெளியிடவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

# இ.ஆ.ச. பொதுச் செயலாளராக ஜோசப் ஸ்டாலின் மீண்டும் தெரிவு

(கொழும்பு)

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் 60வது பேராளர் மாநாடு கடந்த 30ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொழும்பு றோயல் கல்லூரி புதிய மண்டபத்தில் சங்கத்தின் தலைவர் எஸ்.பியந்த பெர்ணாந்து தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் ஆசிரியர் சங்க பிரதிநிதிகளான அதிபர், ஆசிரியர்கள், கல்வியியலாளர்கள் கலந்து கொண்டனர்.

மேலும் இம் மாநாட்டில் 2016,2017 மாநாட்டிற்கான அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதுடன் 2017, 2018 ஆம் ஆண்டிற்கான தலைவர், பொதுச்செயலாளர் தெரிவில் சங்கத்தின் பொதுச் செயலாளராக ஜோசப் ஸ்டாலின், தலைவராக எஸ்.பிரியந்த பெர்ணாந்தும் தெரிவு செய்யப்பட்டனர்.

அத்தோடு 2017, 2018 ஆம் ஆண்டு காலப்பகுதிக்கான முன்மொழிவுகள். ஆலோசனைகள். திட்டங்கள் பற்றியும் கலந்துரையாடப்பட்டன. (இ-10-105)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன, மத நல்லிணக்கம் குறித்து

# அரசு உடன் பதிலளிக்க வேண்டும் மூன்று மகாநாயக்கர்கள் அழுத்தம்

(கொழும்பு)

இன, மத நல்லிணக்கத்தைப் பாதுகாப்பது தொடர்பில் மகா சங்கத்தினர் வெளியிட்ட அறிவிப்பு குறித்து அரசாங்கத்திடமிருந்து கிடைத்த பதில் திருப்திகரமானதாக இல்லையெனவும், அவ்வறிக்கையில் முன்வைக்கப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பில் பாரபட்சமின்றிய விசாரணை அறிக்கையொன்றை உடனடியாக நாட்டுக்கு வெளிப்படுத்துமாறும் மூன்று மகா சங்கத்தினர் மற்றும் அனைத்து பிக்குகள் அமைப்பு என்பன இணைந்து அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுத்துள்ளன.

சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளத்தக்க நியாயங்களின் அடிப்படையில் இன, மத, வர்க்கவாத நோக்கில் அல்லாமல் சுயாதீன ஆணைக் குழுவொன்றை நியமித்து அதனூடாக எமது நாட்டுக்குத் தேவையான விபரங்களை சேகரித்து அறிக்கையொன்றைத் தயார் செய்யுமாறும் மகா சங்கத்தினர் அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளதாக அஸ்கிரிய மகா விகாரைப் பீடத்தின் பதிவாளர் மெதகம தம்மானந்த தேரர் அறிவித்துள்ளார். (இ-7)

# மாலிக்கு அனுப்பப்படவுள்ள இலங்கை படையினர் குறித்து ஐ.நா. அதிகாரிகள் ஆராய்வு



(கொழும்பு)

மாலியில் ஐ.நா. அமைதிப்படையில் இலங்கை படையினரை பணியில் ஈடுபடுத்துவது தொடர்பாகவும், அமைதிப்படையினருக்கான பயிற்சிகள் தொடர்பாகவும், ஐ.நா. அதிகாரிகள் இலங்கை பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தியுள்ளனர்.

பாதுகாப்பு அமைச்சில் நடந்த இந்தக் கூட்டத்தில், இலங்கைக்கான ஐ.நாவின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி உனா மக்கோலியும், பாதுகாப்பு அமைச்சின் மூத்த அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் பயிற்சி, அமைதிப்படையில் பணியாற்றுவதற்காக படையினரைத் தெரிவு செய்யும் முறை, பணியில் அமர்த்துவதற்கு முந்திய பயிற்சிகள், மொழிகள், சமூக, கலாசார பின்னணி, பெண்கள் மற்றும் சிறுவர்களின் உரிமைகள் உள்ளிட்ட மனித உரிமைகள் பற்றிய அறிவு என்பன தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது.

ஐ.நா. அமைதிப்படையில் பணியாற்றுவதற்காக தெரிவு செய்யப்படும் படையினருக்கான பயிற்சித் தரத்தை அதிகரிப்பதற்குத் தேவையான வசதிகள், வளங்கள் மற்றும் ஏனைய தேவைப்படும் உதவிகளை வழங்குவதற்கும் தயாராக இருப்பதாக, ஐ.நா.வதிவிட இணைப்பாளர் உனா மக் கோலியும், ஏனைய ஐ.நா அதிகாரிகளும் உறுதியளித்துள்ளனர்.

படையினரைத் தெரிவு செய்வதற்குப் பொருத்தமான முறைகள் தொடர்பாகவும் இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது.

இந்தக் கூட்டத்தில், நல்லிணக்கம் மற்றும் அபிவிருத்திக்கான ஐ.நா. ஆலோசகர் கீதா சபர்வால், பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலர் சரத்குமார, பிரதி இராணுவ இணைப்பதிகாரி பிரிகேடியர் வீரசிங்க மற்றும் இலங்கை வெளிவிவகார அமைச்சு, பாதுகாப்பு அமைச்சுக்களின் அதிகாரிகள் பங்கேற்றிருந்தனர். (இ-7)

# இலங்கையில் இரட்டைக் கோபுரம் அமைக்க உடன்படிக்கை கைச்சாத்து



ஆசியாவின் மிக உயரமானதும், உலகின் ஒன்பதாவது உயரமானதுமான இரட்டைக் கோபுரக் கட்டடம் தலைநகரான கொழும்பில் அமைக்கப்படவுள்ளது.

இதற்கான 2 பில்லியன் டொலர் முதலீடு தொடர்பாக, இலங்கை முதலீட்டுச் சபைக்கும், உலக கப்பிரல் நிலையத்துக்கும் இடையில், உடன்பாடு கையெழுத்திடப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தின் கீழ் கொழும்பின் இதயத்தில் உள்ள வணிகப் பகுதியில், 117 தளங்களை கொண்ட, 625 மீற்றர் உயரமான நவீன வசதிகளுடன் கூடிய இரட்டைக் கோபுரம் அமைக்கப்படவுள்ளது.

இதில் 1,200 வதிவிட அலகுகள், 2,000 விடுதி அறைகள், 3,000 சில்லறை வணிகள் நிலையங்கள், 5,000 வாகனங்களை நிறுத்தும் வசதி, 7 நட்சத்திர விடுதி, 20 ஆடம்பர நீச்சல் தடாகங்கள், உலகின் மிக வேகமான இரண்டடுக்கு மின்னுயர்த்திகள் மற்றும் உலங்குவானூர்தி இறங்கு தளம் உள்ளிட்ட பல அதி நவீன வசதிகளைக் கொண்டதாக இந்த இரட்டைக் கோபுரம் அமையவுள்ளது. (இ-7)

# நிலக்கீழ் சுரங்கத்தால் பாதிப்பில்லை

(கொழும்பு)

கடந்த அரசாங்கத்தின் முறையற்ற திட்டங்களின் காரணமாகவே, கண்டி நகரத்தின் அபிவிருத்தி மற்றும் போக்குவரத்து என்பன பாதிக்கப்பட்டன என உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல நேற்று முன்தினம் தெரிவித்தார்.

ஆனால் தற்போது கண்டி நகரை அபிவிருத்தி செய்வதற்கு பலவேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கண்டியில் நிலக்கீழ் சுரங்கம் ஒன்றை அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனால் பாதிப்பு ஏற்படும்என பலர்பொய்யான எதிர்ப்புக்களை வெளியிட்டு வருவதாகவும் அவர் குற்றம் சுமத்தினார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்று ஒரு தகவல்

### ஐந்து நிமிடங்களில் அசத்துவது எப்படி

நம் வாழ்க்கைப் பயணத்தில் பல பேர் வருடக் கணக்கில் நம்முடன் பயணம் செய்கிறார்கள். சிலரோ விருட்டென்று கடந்து போகிறார்கள்.

இப்படி நம்மைக் கடந்து போகிற பலரில் எத்தனை பேரை நாம் நினைவில் வைத்துக் கொள்கிறோம்; அல்லது மற்றவர்களின் நினைவில் நாம் தங்குகிறோம் என்பது சற்றே முக்கியமான விடயம்.

எத்தனை பேர் எத்தகைய சூழ்நிலையில் அறிமுகம் செய்யப்பட்டாலும் செத்தவன் கையில் வெற்றிலை, பாக்குக் கொடுத்த கதையாய் எந்தவிதமான சுரத்தும் இன்றி நடந்து கொள்கிறவர்களை பார்க்கிறேன்.

இன்னும் சிலர் இருக்கிறார்கள். இவர்கள் ''ஹாய்'' அல்லது ''ஹலோ'' ரகத்தினர். இயந்திர கதியாய் பழகுவார்களே தவிர இதயத்தில் எவருக்கும் இடம் கொடுக்க மாட்டார்கள். மனத்தில் பதியவும் மாட்டார்கள்.

இந்த இரு ரகத்தினரையும் முதல் முறையாகச் சந்தித்த எவருக்கும் மறுபடி சந்திக்க வேண்டும் என்ற தூண்டுதல் ஏற்படாது. இங்கே தான் மேற்கூறிய மனிதர்கள் தோல்வியைத் தழுவுகிறார்கள்.

பல நபர்களுடன் நாம் ஆற அமர பேசிக் கொண்டு இருக்க முடிவதில்லை. ஒரு நிகழ்ச்சிக்கு போகிறோம். இயந்திர துப்பாக்கி வெடிப்பதைப் போல சட சடவென ஏகப்பட்ட அறிமுகங்கள் கிடைப்பதோ குறுகிய நேரம் அதற்குள் அவர்களது இதயத்தை துளைத்து உள்ளே ஓர் இருக்கை போட்டு பலமாக நாம் அமர்ந்து விட வேண்டும். சாய்த்து விடும் மிகப் பெரிய சயனைட் புன்னகையை சட்டென்று முடித்துக் கொள்ளக்கூடாது. மெல்லத்தான் புன்னகையை சுருக்கி நிறுத்த வேண்டும். ஆணுக்கு ஆண் – பெண்ணுக்கு பெண் அறிமுகம் என்றால் பேருக்கு கையை குலுக்காமல் கைகளை உறுதியாகப் பற்ற வேண்டும். உடனே கைகளை விட்டு விடக் கூடாது கவனத்தை அடுத்தவர் மீது உடனே திருப்பக்கூடாது. மெல்லத்தான் கவனம் நகர்த்தப்பட வேண்டும்.

அடுத்த ஆயுதம் தயாரா? அது தான் பாராட்டு. அவர்களுடைய பெயர், அவர்களுடைய தோற்றம், அதைப்பற்றிய பாராட்டை வழங்க வேண்டும். பாராட்டும் சற்றும் செயற்கை தட்டக்கூடாது காரியம் கெட்டுவிடும்.

உபசரிப்பு ஏதும் சாத்தியம் என்றால் செய்யலாம். தேநீர் சாப்பிடுகிறீர்களா? என்பதை மனப்பூர்வமாக கேட்க வேண்டும். ( சில பேர் கேட்கும் போது " நீங்கள் வேண்டாம் என்று சொன்னால் நிம்மதி'' என்று சொல்வது போல இருக்கும்)

நம்மைப் பற்றி பேசுவதை விட்டு விட்டு அவர்களைப்பற்றியே அதிகம் பேச வேண்டும். ( ஐந்து நிமிடங்களில் நான்கு நிமிடம் அவர்களைப் பற்றி)


அவரையோ அவர்களைச் சார்ந்தவர்களையோ அவர் அமைப்பையோ குறைபாடாகவும் குற்றச்சாட்டாகவும் ஏதும் பேசக்கூடாது. உதாரணமாக கார்ப்பரேஷன் ஊழியர் ஒருவர் அறிமுகமாகிறார் என்றால், '' உங்க ஒபீஸ் ஒண்ணும் சரியில்லை'' என்று ஆரம்பித்து விடக்கூடாது.

அந்த ஐந்து நிமிடத்துக்குள் மன இடைவெளிகளை குறைத்துக் கொள்ள வேண்டும். நீண்ட நாள் பழகிவிட்ட உணர்வை ஏற்படுத்த வேண்டும்.

அதற்குப் பிறகு இந்த மனிதர்கள் உம்மளை எங்கே கண்டாலும் விடமாட்டார்கள்.

**லேனா தமிழ்வாணன்**

# குடும்ப வன்முறைகளும் அவை தொடர்பான சட்ட ஏற்பாடுகளும்



"அரிசி அவியும் வரை தான் குடும்பத்தில் சண்டைகள் நீடிக்கின்றன" என்று ஒரு சிங்கள பழமொழி கூறுகின்றது. இதிலிருந்து குடும்பத்துக்குள் சண்டைகளோ, வன்முறைகளோ இடம் பெறுவது சாதாரண விடயம் என்ற எண்ணக்கரு காலங்காலமாக எமது சமுதாயத்தில் நிலவி வருகின்றமையை உணரலாம். எனினும் இத்தகைய வாய்மொழி மூலமான, உடல் ரீதியான, உணர்வு ரீதியான, பாலியல் ரீதியான துஷ்பிரயோகங்களை உள்ளடக்கிய குடும்ப வன்முறைகள் நாம் காலகாலமாக எண்ணி வந்ததைப் போல நமது அன்றாட வாழ்க்கையில் சாதாரணமாக இடம்பெறும் நிகழ்சிகளா என்பது ஆராயப்பட வேண்டிய ஒன்றாகும். இலங்கையில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றின் தரவுகள் 60 சதவீதத்திற்கும் அதிகமான பெண்கள் குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கின்றது. இவ்வாறாக சாதாரணமானது எனக்கருதி நாம் கவனிக்கத் தவறிய ஒரு விடயம் எதிர்கால சமுதாயத்தில் ஏற்படுத்தக் கூடிய தாக்கம் நமது கற்பனைக்கு அப்பாற்பட்டதாக இருக்கலாம்.

குடும்ப வன்முறை என்பதனை "குடும்ப உறுப்பினர் ஒருவரின் உடலுக்கோ அல்லது உணர்வுகளுக்கோ ஊறு விளைவிக்கும் ஏதேனும் செயல் அல்லது உணர்ச்சி ரீதியான துஷ்பிரயோகம்" என சுருக்கமாக வரை விலக்கணப்படுத்தலாம். இத்தகைய குடும்ப வன்முறைகளால் பாதிக்கப்படும் நபர்களின் உடல், உளவியல் ரீதியான சேமநலன் மீது கடுமையான விளைவுகளை ஏற்படுத்துகின்றன என மருத்துவ ஆராய்ச்சிகள் சுட்டிக்காட்டியுள்ளன. அத்துடன் குடும்ப வன்முறைகளை நேரில் பார்ப்பதால் பிள்ளைகள் சில வேளைகளில் தனிமைப்படுகின்ற நிலைக்குள்ளாவதுடன் சமூகத்துக்கு எதிராக மூர்க்கத்தனமாக செயல்படுகின்ற நிலையும் உருவாகின்றது.

எமது சமுதாயத்தை பொறுத்த வரையில் போதைப் பொருட்கள் அல்லது மது பானத்தின் உபயோகம், சந்தேகம் தொடர்பான பிரச்சினைகள், திருமணத்துக்கு புறம்பான உறவுகளால் எழும் பிரச்சினைகள், பொருளாதாரம் மற்றும் கலாசார ரீதியான காரணங்கள், உளவியல் சார்ந்த பிரச்சினைகள் குடும்ப வன்முறைகள் இடம் பெறுவதற்கான அடிப்படை காரணங்களாக விளங்குகின்றன. இத்தகைய வன்முறைகள் தொடர்ச்சியாக இடம் பெற்று வருகின்ற போதும் இவை பொது இடங்களில் நடைபெறாமை, சமுதாய ரீதியான நிலவும் கட்டுப்பாடுகள், பாதிக்கப்படும் நபர் பெரும்பாலும் இன்னொருவரில் தங்கி இருக்கின்றமை, சட்டம் பற்றிய அறிவின்மை, சட்ட அமுலாக்க அதிகாரிகளின் பொறுப்பின்மை போன்ற காரணங்களால் இவை பெரும்பாலும் வெளிக் கொணரப்படுவதில்லை எனலாம்.

இத்தகைய குடும்ப வன்முறைகளால் பாதிக்கப்படும் நபர்களை பாதுகாக்கும் நோக்கில் 2005 ஆம் ஆண்டின் 34ஆம் இலக்க குடும்ப வன்முறை தடுப்பு சட்டம் இலங்கையில் 2005ஆம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்டது. இச் சட்டமானது "வீட்டுக்குள் அல்லது வீட்டிற்கு வெளியே நெருங்கிய உறவினர்கள் இடையே இடம் பெறும் வன்முறைகளை குடும்ப வன்முறை" என வரையறை செய்கிறது. இச் சட்டத்தின்படி குடும்ப வன்முறையின் வடிவம் உடல் சார்ந்த அல்லது உணர்வு சார்ந்ததாக காணப்படலாம். குடும்ப வன்முறை தடுப்பு சட்டத்தின் ஏற்பாடுகளின் அடிப்படையில் ஒரு நபருக்கு எதிராக குடும்ப வன்முறை புரியப்பட்டுள்ளது அல்லது புரியப்பட சாத்தியமுள்ளது எனின் அந்த நபர் அவ்வன்முறையை தடுப்பதற்கு நீதவான் நீதிமன்றுக்கு விண்ணப்பம் செய்யலாம். இத்தகைய விண்ணப்பமானது

◆ துன்புற்ற நபரினால் அல்லது

◆ துன்புற்ற நபர் சிறுவர் எனின் அவரது பாதுகாவலர் அல்லது பெற்றோரால் அல்லது எவருடன் சிறுவர் வசிக்கின்றாரோ அவரால்

◆ தேசிய சிறுவர் பாதுகாப்பு சபையின் அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரி ஒருவரால் அல்லது

◆ பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட முடியும்.

இத்தகைய விண்ணப்பம் மேற்கொள்ளப்படும் போது குறித்த வன்முறையை உறுதிப்படுத்தக் கூடியவாறான ஆவணங்கள் குறிப்பாக வைத்திய அறிக்கை, பொலிஸ் முறைப்பாட்டின் பிரதிகள் காணப்படின் அவற்றுடன் பாதிக்கப்பட்டவர் மற்றும் சாட்சிகளது சத்தியக்கூற்றுக்கள் இணைக்கப்பட்டு வழக்கு தாக்கல் செய்யப்படலாம்.

குடும்ப வன்முறை தடுப்பு சட்டத்தின் கீழ் வழக்கு தாக்கல் செய்யப்படும் போது விண்ணப்பம் தொடர்பாக இறுதி விசாரணை மேற்கொள்ளும் முன்னதாகவே அவசியமென நீதவான் கருதினால் பாதிக்கப்பட்டவரின் உறுதிமொழி மற்றும் முன்வைக்கப்படும் சான்றுகளின் அடிப்படையில் வழக்கு தாக்கல் செய்யப்பட்ட தினமே இடைக்காலப் பாதுகாப்பு கட்டளை ஒன்றை வழங்கலாம். இக் கட்டளை 14 நாட்கள் வலுவிலிருக்கும் என்பதுடன் அது குற்றம் இழைத்தவரை,

◆ பாதிக்கப்பட்ட நபருடன் வன்முறை இழைத்த நபர் ஏதேனும் வகையில் தொடர்பு கொள்ளல்.

◆ பாதிக்கப்பட்ட நபரின் வீட்டுக்குள் அல்லது வேலை செய்யும் இடத்துக்கு அல்லது பிள்ளைகள் கல்வி கற்கும் கல்வி நிலையங்களுக்கு பிரவேசித்தல்.

◆ பாதிக்கப்பட்டவரின் வீட்டில் தங்கியிருத்தல்.

◆ பாதிக்கப்பட்ட நபருக்கு உதவுகின்ற நண்பர்கள் சமூக ஊழியர்களுக்கு கெடுதல் மேற்கொள்ளுதல்.

ஆகிய விடயங்களிலிருந்து தடை செய்யும்.

எனினும் இடைக்காலப் பாதுகாப்பு கட்டளை வழங்குவதானது முன்வைக்கப்பட்ட நிகழ்வுகளினதும், சாட்சிகளினதும் அடிப்படையில் அவசியமில்லை என நீதவான் கருதினால் 14 நாட்களில் விண்ணப்பம் பற்றிய விசாரணை மேற்கொள்ள திகதி ஒன்றை நியமிக்கலாம். குறித்த தினத்தில் குற்றம் இழைத்தவர் தனக்கு எதிராக ஏன் பாதுகாப்பு கட்டளை ஒன்றை வழங்கக் கூடாது என்பதற்கு காரணம் காட்ட வேண்டும்.

விண்ணப்பம் மேற்கொள்ளப்பட்டு 14 நாட்களின் பின்னர் விண்ணப்பம் பற்றிய விசாரணை முடிந்த பின்னர் அவசியமென்று நீதவான் கருதினால் பாதுகாப்பு கட்டளை ஒன்றை வழங்கலாம். இது இடைக்கால பாதுகாப்பு கட்டளை போன்றே குற்றம் இழைத்தவரை வன்முறை செயற்பாட்டில் ஈடுபடுவதை தடைசெய்வதாக அமையும். இப்பாதுகாப்பு கட்டளை 12 மாதங்கள் வலுவிலிருக்கும் என்பதுடன் சூழ்நிலைகளில் மாற்றம் ஏற்படின் இரு தரப்பும் இணைந்து விண்ணப்பித்தால் நீதிமன்றம் அதனை மாற்றும்.

குற்றம் இழைத்தவர் இடைக்கால அல்லது நிரந்தர பாதுகாப்பு கட்டளையை மீறினால் பாதிக்கப்பட்ட நபர் உடனடியாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யலாம். இக் கட்டளைகள் "நீதிமன்ற உத்தரவு" என்பதனால் குற்றம் இழைத்தவர் அதனை மீறினாலோ அல்லது கீழ்ப்படியாவிட்டாலோ அது 10,000 ரூபா வரையான அபராதம் அல்லது ஒரு வருடம் வரையிலான சிறைத் தண்டனை அல்லது இரண்டும் விதிக்கப்படக்கூடிய குற்றவியல் குற்றமாகும்.

மேற்படி குடும்ப வன்முறை தடுப்பு சட்டத்தை தவிர பாரதூரமான வகையில் உடல் ரீதியான, பாலியல் ரீதியான வன்முறைகள் அல்லது துஷ்பிரயோகங்கள் குடும்பத்துக்குள் இடம்பெற்றால் பாதிக்கப்பட்ட நபர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ய முடியும். காயம், கடுங்காயம் அல்லது கடுமையான பாலியல் துஷ்பிரயோகம் போன்ற குற்றவியல் குற்றமொன்று தொடர்பாக தண்டனை சட்ட கோவையின் கீழ் குற்றமிழைத்த தவருக்கு எதிராக பொலிஸார் குற்றவியல் வழக்கு தொடரலாம்.

குடும்ப வன்முறைகள் தொடர்பாக நாம் மேலே ஆராய்ந்துள்ள வகையில் குடும்ப வன்முறை தடுப்புச் சட்டம் செயற்பட்டு வந்தாலும் இச்சட்டத்தில் குற்றம் இழைத்தவருக்கு தண்டனை விதிக்கக் கூடியவாறான ஏற்பாடுகள் காணப்படாமை, இச்சட்டம் பற்றிய போதிய விழிப்புணர்வு பொது மக்கள் மத்தியிலும் அது தொடர்பாக செயலாற்றுகின்ற அரசாங்க உத்தியோகத்தர் மத்தியிலும் காணப்படாமை, இச்சட்டத்தின் கீழாக பாதுகாப்பு கட்டளை வழங்கப்பட்டாலும் அதனை மீறி குற்றமிழைத்தவர் செயற்படும்போது அது தொடர்பான உரிய நடவடிக்கைகள் எடுப்பதில் காணப்படுகின்ற மந்த நிலை போன்றன இச்சட்டம் இயற்றப்பட்டு ஒரு தசாப்தம் கடந்த பின்னும் இச் சட்டத்தினை வெற்றி கரமான வகையில் எம்மால் அமுல்படுத்த முடியாத நிலைமைக்கு காரணமாகும். எனவே இச்சட்டத்தில் காணப்படும் குறைபாடுகளை களைந்து திருத்தங்களை கொண்டு விடுவதற்கான ஏற்பாடுகள் இலங்கை அரசால் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது.

சமுதாயத்தின் அடிப்படை அலகு குடும்பமாகும். குடும்ப பிரச்சினைகள் குடும்பத்துக்குள்ளேயே தீர்த்துக் கொள்ளப்பட வேண்டும் என்பது அன்று தொட்டு எமக்கு கற்பிக்கப்பட்ட ஒன்றாகும். சில வரையறைகளுக்குட்பட்ட வகையில் இது ஏற்கப்படக் கூடிய தொன்று எனினும் அவை பாரதூரமான வன் முறைகளை நோக்கிச் செல்லும் போது அது தொடர்பான சட்ட நடவடிக்கைகளை எடுத்தல் அத்தியாவசியமானது. வன்முறைகளற்ற குடும்ப மற்றும் சமுதாய சூழலிலும் வளரும் குழந்தைகளே பிற்காலத்தில் நற்பிரஜைகளாக உருவெடுக்கின்றனர். எனவே குடும்ப வன்முறைகளற்ற சமுதாயத்தை நோக்கி ஒன்றிணைந்து செயற்படுவோம்.

தொகுப்பு -த. நிசாந்தி
சட்ட உத்தியோகத்தர்
சட்ட உதவி ஆணைக்குழு
முல்லைத்தீவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜகிரியவிலுள்ள எரிவாயு விற்பனை நிலையத்தில் தீ!



(கொழும்பு)

ராஜகிரியவிலுள்ள சுப்பர் மார்க்கட் ஒன்றில் காணப்பட்ட எரிவாயு விற்பனை நிலையமொன்று நேற்று அதிகாலை 5.30 மணியளவில் தீப்பிடித்துள்ளது.

இந்த தீ சுப்பர் மார்க்கெட் கட்டடத் தொகுதி முழுவதும் பரவும் அபாய நிலை காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

தீயை அணைப்பதற்கு கோட்டை நகர சபை தீயணைப்புப் பிரிவின் 3 வாகனங்களும், தெஹிவளை கல்கிஸ்ஸை நகர சபை வாகனமொன்றும் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

ராஜகிரியவிலுள்ள HSBC கட்டடத் தொகுதிக்கு அருகில் இந்த எரிவாயு நிலையம் காணப்படுகிறது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# மாற்றுத்திறனாளி வாவியில் தவறி விழுந்து உயிரிழந்தார்

(கொழும்பு)

ஏறாவூர். பொலிஸ் பிரிவிலுள்ள சந்திவெளி வாவியில் மாற்றுத்திறனாளி ஒருவர் தவறி விழுந்து உயிரிழந்து விட்டதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்தவெள்ளிக்கிழமை காலை கண்டெடுக்கப்பட்ட சடலம் சந்திவெளியைச் சேர்ந்த செல்லத்தம்பி சித்திரவேல் (வயது 57) என்பவருடையது என ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

ஒரு காலும், ஒரு கையும் பலவீனமான இவர் மது அருந்திய நிலையில் வாவியோரமாக நடந்து செல்லும்போது தடுமாறி நீரில் விழுந்து மூச்சுத் திணறி உயிரிழந்துள்ளார் என பிரேத பரிசோதனையின்போது தெரிவிக்கப்பட்டது.

கடந்த வியாழக்கிழமை காணாமல் போன இவர் உறவினர்களால் தேடப்பட்டு வந்த நிலையில் வாவியில் மீன்பிடிக்க சென்ற ஒருவர் சடலம் கிடப்பது பற்றி உறவினர்களுக்குத் தெரியப்படுத்தியதையடுத்து வெள்ளிக்கிழமை காலை சடலம் மீட்கப்பட்டது.

இச்சம்பவம்பற்றி ஏறாவூர் பொலிஸார் விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர். (இ-7)

# மகிந்தவுடன் பசில் சந்தித்துப் பேச்சு



(கொழும்பு)

முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, தேர்தல் ஆணைக் குழு தலைவரை சந்தித்து நேற்று பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் இந்தப் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது.

தேர்தல் நடத்தப்படாமல் காலம் தாழ்த்தப்படுவதற்கான காரணங்கள் தொடர்பில் இந்த சந்திப்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இந்தநிலையில் தேர்தல் காலம் தாழ்த்தப்படுவதற்கான தொழில்நுட்ப காரணங்களை தேர்தல் ஆணைக் குழுத் தலைவர் விளக்கியுள்ளார். (இ-7)

# வெலிக்கடை சிறைச்சாலை களுத்துறைக்கு மாற்றப்படும்

வெலிக்கடை சிறைச் சாலை களுத்துறைக்கு மாற்றப்படவுள்ளது. இந்த சிறைச்சாலை களுத்துறை- மில்லெனியாவ, நியூசெப்பல் பெருந்தோட்டப் பகுதிக்கு மாற்றப்படவுள்ளதாக அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை அதற்கான பணிகள் முன்னெடுக்கப்படுவதாகவும் அமைச்சர் தெரிவித்தார். (இ-7)

# அமெரிக்க தூதரக அறிக்கை குறித்து உத்தியோகபூர்வ அறிவிப்பு இல்லை

## பொலிஸ் பேச்சாளர் ருவான் தெரிவிப்பு



கொள்ளுப்பிட்டியிலுள்ள அமெரிக்க தூதுவர் காரியாலயத்துக்கு தாக்குதல் மேற்கொள்ள ஐ.எஸ். சர்வதேச பயங்கரவாதிகள் சூழ்ச்சி செய்வதாக கூறப்படும் அறிவிப்பு தொடர்பில், இதுவரையில் எந்தவித தகவலும் தமக்கு கிடைக்கவில்லையென பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சிலவேளை, அந்த அறிவிப்பு அமெரிக்காவிலிருந்து இலங்கையிலுள்ள அமெரிக்க தூதரகத்துக்கு விடுக்கப்பட்டதாக இருக்கலாம் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் ருவான் குணவர்தன தெரிவித்துள்ளார்.

இருப்பினும் குறித்த அறிவிப்பு தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என அவர் தெரிவித்தார். (இ-7)




கஜானா

ஏனோ தானோனு வாழுறவனுக்கு தான் எல்லாம் கிடைக்குது



இப்படித்தான் வாழனும்னு நினைக்கிறவனுக்கு ஒரு செம்பு தண்ணி கூட கிடைக்கமாட்டேங்குது...

சுபாங்கி

பணத்த அச்சடிக்க பேப்பர் மரகட்டைலருந்து கிடைக்குது...
அந்த மரக்கட்டை மரத்துலருந்து கிடைக்குது..



இப்ப சொல்லுங்க... பணம் மரத்துல தானே காய்க்குது..??

கண்ணன்

தலைமைப் பண்பு என்பது உருவத்தை பொறுத்தது அல்ல



நம்முடைய நடத்தையை பொறுத்தது..!

கோபிநாத்

குழந்தைகள் உடைக்காமல் விளையாடும் உயிருள்ள பொம்மை...



"அப்பா"

சியா

டேய் விட்றா... ஏற்கனவே ஸ்கூல் பீஸ் கட்டி இது ஒன்னு தான் மிச்சம் இருக்குன்னு அப்பா சொல்லிட்டார்.. அதையும் கிழிச்சிறாத...



விஜய்



"கழற்றி விடப்படுவோம் என்று தெரிந்தும் நம்முடன் இருப்பது....

செருப்பு மட்டுமே!!!

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு மாகாண சபைக்கு தனியான பொலிஸ் பிரிவு

## மூன்றாக பொலிஸ் திணைக்களம் பிரிப்பு ஓகஸ்டில் புதிய சட்டமூலம் வருகிறது

இலங்கைபொலிஸ்திணைக்களத்தை மூன்று பிரதான பகுதிகளாக பிரிக்கும் சட்டமூலமொன்று எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 16 ஆம் திகதி அரசாங்கத்தினால் முன்வைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த யோசனை 288 பக்கங்களைக் கொண்டதாக இருக்கும் எனவும் கூறப்படுகின்றது.

இதன்படி, முழு பொலிஸ் திணைக்களமும் தேசிய பொலிஸ், மாகாண பொலிஸ் மற்றும் நகர சபைப் பொலிஸ் என மூன்றாக்கப்படவுள்ளது.

பொலிஸ் திணைக்களம் இவ்வாறு மூன்றாக பிரிக்கப்படுவதனால், பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு, இரகசியப் பொலிஸ் சேவை என்பன பலவீனப்படுத்தப்படும் என தெரிவிக்கப்படுகின்றது.

இந்த பரிந்துரையின் கீழ் வட மாகாண சபைக்கும் தனியான பொலிஸ் பிரிவு அமைக்கப்படவுள்ளது.

இந்த யாப்புத் திருத்தச் சட்ட மூலத்தினால், மக்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாத்தல், அரச சேவையை மீளமைத்தல் என்பன எதிர்பார்க்கப்படுகின்றது.

பாராளுமன்றத்தில் அரசியலமைப்புச் சபைக்கு பரிந்துரைகளை முன்வைக்கவென அமைக்கப்பட்ட 6 குழுக்களின் பின்னர் இந்த பரிந்துரை கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் கூறப்படுகின்றது. இவ்வாறு பிரிக்கப்படுவதனால், மாகாண பொலிஸ் பிரிவிலுள்ளவர்கள் இரண்டாம் தரத்துக்கு தள்ளப்படுகின்றனர்.

அத்துடன், தேசிய மட்ட பொலிஸாருக்கு, மாகாணத்தில் இடம்பெறும் குற்றச் செயல் குறித்து, சம்பந்தப்பட்ட மாகாண அனுமதியின்றி விசாரணை நடத்த முடியாமல் போகும் நிலைமை உருவாகும்.

இந்த மாகாண பொலிஸ் பிரிவுகளுக்கும் பிரதேச பொலிஸ்மா அதிபர்கள் நியமிக்கப்படவுள்ளதாகவும் அச்சட்ட மூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதுவரை இலங்கை முழுவதற்கும் ஒரு பொலிஸ்மா அதிபரே காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# 40 வருடங்களாக நாடாளுமன்றம் செல்லும் ரணில்



பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் 40வருட நாடாளுமன்ற வாழ்க்கை முழுமையடைந்துள்ளது. கட்சித் தலைவரின் 40 வருட நாடாளுமன்றநிறைவை முன்னிட்டு ஐக்கிய தேசிய கட்சியினால் பல்வேறு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

1977ஆம்ஆண்டு ஜூலை மாதம் 22ஆம் திகதி நடைபெற்ற பொதுத் தேர்தல் மூலம் முதல் முறையாக ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்திற்கு சென்றார்.

அதன் பின்னர் கடந்த 40 வருடங்களாக அவர் நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவம் செய்துவரும் அரசியல்வாதியாக செயற்பட்டு வருகிறார்.

தொடர்ந்து 40 வருடங்கள் நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்திய ஒரேயொரு ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)



கண்டி மலையக கலாசார சங்கத்தின் ஆதரவில் இரத்தின தீபம் அமைப்பின் 22வது விருது விழா யாழ்ப்பாணம் இலங்கை வேந்தன் கலைக்கல்லூரி மண்டபத்தில் லயன் கலாநிதி நா. தனேந்திரன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். இந்தியத்துணைத் தூதுவர் ஏ.நடராஜன், சிறப்பு விருந்தினராக பேராசிரியர் மா.தேவராஜாவும் காரைநகர் தேசோதய தலைவர் கலாநிதி க.சுந்தரலிங்கமும் கலந்து சிறப்பித்தனர்.

# உமா ஓயா வேலைத்திட்டம் தொடர்பில் இன்று கள ஆய்வு



உமா ஓயா வேலைத் திட்டம் தொடர்பில் ஆராய நியமிக்கப்பட்ட, அமைச்சரவை உப குழு இன்று உமா ஓயா வேலைத் திட்டம் குறித்த கள ஆய்வினை நடத்தவுள்ளது.


உமா ஓயா வேலைத் திட்டத்திற்கு எதிராக பண்டாரவளை நகரில் மேற்கொள்ளப்பட்ட எதிர்ப்பு நடவடிக்கைகளையடுத்து, அதனை அண்டிய, பகுதிகளில் நிலவும் நீர்ப்பிரச்சினை பற்றி ஆராய, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குறித்த குழுவை நியமித்தார்.

அமைச்சர்களான மகிந்த அமரவீர, சம்பிக்க ரணவக்க, விஜித் விஜயமுனி சொய்சா ஆகியோர் இந்தக் குழுவில் அடங்குகின்றனர்.

அவர்கள் இன்று பண்டாரவளை நகருக்கு சென்று ஆய்வினை மேற்கொள்ளவுள்ளனர். (இ-7)

# இலங்கையிலுள்ள இந்திய மீனவர்களை உடன் விடுவிக்க நடவடிக்கை எடுங்கள்

## சுஷ்மாவிடம் ஜெயக்குமார் கோரிக்கை



(டில்லி)

இலங்கையில் கைது செய்யப்பட்டுள்ள இந்திய மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு, தமிழக நிதி அமைச்சர் டி.ஜெயக்குமார், இந்திய வெளிவிகார அமைச்சர் சுஷ்மா சுவராஜிடம் நேற்று நேரில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மேலும், இலங்கை வசமுள்ள இந்திய மீனவர்களின் படகுகளையும் விரைவில் விடுவிக்கத் தேவையான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொள்ள வேண்டும் எனவும், அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, இந்திய மீனவர்கள் 42 பேர் இலங்கை சிறைகளில் உள்ளதாகவும், இந்திய மீனவர்களின் 141 படகுகள் இலங்கையால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

எனவே, குறித்த மீனவர்கள் மற்றும் அவர்களது படகுகளை விடுவிக்க இராஜதந்திர ரீதியில், தலையிடுமாறு தமிழக நிதியமைச்சரால், சுஷ்மா சுவராஜிடம் எழுத்து மூலம் கோரப்பட்டுள்ளது.

தமிழக முதலமைச்சரால் இந்த பிரச்சினை குறித்து இந்தியப் பிரதமருக்கு எழுத்து மூலம் தெரியப்படுத்தியும் அதற்கு உரிய தீர்வு கிடைக்கப் பெறவில்லை என, தமிழக நிதி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இந்திய - இலங்கை மீனவர் பிரச்சினை குறித்து நிலையான தீர்வினை வழங்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஜெயக்குமார் மேலும் வேண்டுகோள் விடுத்துள்ளார். (இ-7)

# வெற்றிடமாகியுள்ள கிழக்கு மாகாண ஆளுநர் பதவி; ஜனாதிபதியின் கோரிக்கையை நிராகரித்தார் பசீர்



கிழக்கு மாகாணத்தில் ஆளுநர் பதவி வெற்றிடமாகியுள்ள நிலையில், அந்த பதவிக்கு முன்னாள் அமைச்சர் ஏ.எல்.எம். அதாவுல்லா நியமிக்கப்படலாம் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ள செய்தியில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண ஆளுநராக இருந்த ஒஸ்ரின் பெர்னாண்டோ ஜனாதிபதியின் செயலாளராக பதவியேற்றுள்ளார்.

இந்நிலையில், அவர் ஆளுநர் பதவியிலிருந்து விலகியுள்ளார்.

எனவே, கிழக்கு மாகாணத்தின் புதிய ஆளுநராக முன்னாள் அமைச்சர் ஏ.எல்.எம். அதாவுல்லா நியமிக்கப்படலாம் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

எனினும், இந்த பதவி நியமனம் உறுதி செய்யப்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கிழக்கு மாகாண ஆளுநர் பதவிக்கு முன்னாள் பிரதியமைச்சர் பசீர் சேகுதாவூத்தை நியமிக்க ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விருப்பம் தெரிவித்துள்ளதாக அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், ஜனாதிபதியில் கோரிக்கையை பசீர் சேகுதாவூத் நிராகரித்துள்ள நிலையிலேயே, புதிய ஆளுநராக ஏ.எல்.எம். அதாவுல்லா நியமிக்கப்படலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கிழக்கு மாகாண சபையின் ஆயுட்காலம் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 25ஆம் திகதியுடன் முடிவடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நன்று: வளைந்து கொடுக்கணும் ஐயா! வளைந்து...


1990களில் பார்த்த காட்சி: ஒரு வங்கி கிளையில் ஒரு காசாளர். அதிகம் படிக்காதவர்தான். ஆனால் மிகத்திறமைசாலி. கண்ணை மூடிக் கொண்டே தாள்களை அதிவேகமாக எண்ணுவார். அப்போதெல்லாம் காசு எண்ணும் இயந்திரம் எல்லாம் அதிகம் கிடையாது.

மற்றவர் ஒரு கட்டு எண்ணுவதற்குள் 2 கட்டுக்களை முடித்திருப்பார்!அத்துடன் உள்ளே ஏதேனும் கள்ள நோட்டு இருந்தால் உடனே தனியே எடுத்து விடுவார்! மனுசன் நம்மைப் பார்த்துப் பேசிக் கொண்டிருந்தவர், நோட்டைக் கண்ணால் பார்க்கரமலேயே எப்படிக் கண்டு பிடித்தார்? கேட்டால், தம்பி, எல்லாம் அனுபவம்தான் என்பார். தாளை விரல் தொடும் பொழுதே எல்லாம் தெரிந்து விடும் எனச் சொல்லிச் சிரிப்பார்!

வாடிக்கையாளர்கள் உணவு இடைவேளையில் வந்தால் கூட, கோபப்படாமல் பணத்தை வாங்கிக் கொள்வார்.சின்ன நோட்டு, அழுக்கு நோட்டு என்றெல்லாம் முகம் சுளிப்பதே கிடையாது! மிக முக்கியமானதைச் சொல்லணுமே! அவர் மிக நேர்மையானவர்.யாரேனும் தவறாக அதிகப் பணம் கொடுத்து விட்டால் உடனே திருப்பிக் கொடுத்து விடுவார்.அவர் பணம் எண்ணிக் கொடுத்தால் பலரும் அதை எண்ணிப் பார்க்காமல் வாங்கிப் போவதைப் பலமுறை பார்த்ததுண்டு.

ஆனால் இவ்வளவு நல்ல பணியாளரிடம் ஒரு குறை இருந்தது. தினமும் தாமதமாக வருவார்.9 மணி அலுவலகத்திற்கு 9.10 அல்லது 9.15க்குத் தான் வருவார்! தூரத்திலிருந்து பேருந்துகள் பிடித்து, ஓடி வருவதற்குள், பாவம் நேரமாகி விடும்! எவ்வளவு சீக்கிரம் கிளம்பினாலும் எங்கேயாவது தாமதமாகி விடுமாம்!

அவர் வந்தவுடன் நேரே காசாளரின் தனிக்கூண்டுக்கள் நுழைந்து, சுவாமி படங்களுக்குப் பூ போட்டு விட்டு வேலையைத் தொடங்குவார்! சில வாடிக்கையாளர்கள் முணுமுணுத்தாலும் அவரின் அதிவேக சேவையால் விரைவில் எல்லாம் அமைதியாகிவிடும்!



ஆனால் பிரச்சினை வேறுவிதமாய்வெளிக் கிளம்பியது! அவர் 3 முறை தாமதமாக வந்தால் அவரை பணிசெய்ய அனுமதிக்கக்கூடாதென்றும், அவர் இடத்தில் மற்றவர்க்கு வாய்ப்புத் தர வேண்டுமென்றும்குரல்கள்எழுந்தன!

தர்மசங்கடமான நிலைமை வங்கிக்கு உருவாயிற்று. விதிமுறைகள்படி பார்த்தால் பணிக்குத் தாமதமாக வரக் கூடாதுதான். காசாளரை அனுமதிக்கக்கூடாது தான். ஆனால் அந்த 10,15 நிமிடங்களுக்கு மேலேயே காசாளர் மாலையில் பல வேலைகள் பார்த்து விடுவாரே!

கிளை முகாமையாளர் யோசித்தார்.அவர் ஒரு துணிந்தவர். அவரைப் பொறுத்த வரை முதலில் மனச் சாட்சிக்குப் பயப்படணும். மற்றப்படி சட்ட திட்டங்கள், விதிமுறைகள் எல்லாம் இரண்டாம்பட்சம் தான்! சூழ்நிலைக்குத் தகுந்தவாறு விதிகளை அமல்படுத்துவதற்காகத் தான் முகாமையாளர்கள் இருக்கிறோம் என்பார்.

சட்டத்தோடு நடைமுறையையும் (law and practise)பார்க்க வேண்டுமென்று அவர் சொல்வதை மறுக்க முடியுமா?

ஐயா!, அடிப்படைக் கொள்கைகளை எப்பவும் விட்டுக் கொடுக்கக் கூடாது! நேர்மை, கண்ணியம், செயல்திறமை, விசுவாசம் இவற்றில் குறை இருந்தால் கண்டிப்பும் தண்டிப்பும் வேண்டியது தான்! ஆனால் சின்ன விடயத்தில் விட்டுக் கொடுத்தால் தப்பா என்ன?

ஒருவரின் கெட்டிக்காரத்தனம் அவர் எவ்வளவு வளைந்து கொடுக்கின்றார் என்பதை வைத்தே அளவிடப்படும் என்றார் விஞ்ஞானி ஐன்ஸ்டீன்! நீங்கள் என்ன சொல்கின்றீர்கள்? சும்மா சட்டம் பேசிக் கொண்டு இருக்காமல், அந்தக் காசாளரின் சேவையை வங்கியின் வளர்ச்சிக்குச்சாதகமாக பயன்படுத்திக் கொண்ட முகாமையாளர்செய்தது சரியா, தவறா?

எமது உறவினர் ஒருவர் வெளிநாட்டு நிறுவனம் ஒன்றில் மனிதவள மேலாண்மை இயக்குநராகப் பணிபுரிகிறார்.அங்கெல்லாம் விதிமுறைகளே இதை அனுமதிக்கின்றனவாம்! அதாவது பணிக்கு எப்பொழுது வேண்டுமானாலும் வரலாம்.நினைத்தபொழுது வீட்டிற்குப் போய் விடலாம்.ஆனால் கொடுத்த வேலையை குறிப்பிட்ட நேரத்திற்குள் முடித்து விட வேண்டும்!

அதுமட்டுமில்லை.அவரவர்கள் விரும்பின உடையில் பணிக்கு வரலாமாம்.இந்த மாதிரி பல சுதந்திரங்கள் இருப்பதால் பல நல்ல பணியாளர்கள், முக்கியமாகப் பெண்கள், வேறு இடங்களில் அதிக சம்பளம் கிடைத்தாலும் அந்த நிறுவனத்தை விட்டு அவர்கள்போவதே இல்லையாம்!

கூகுள் நிறுவனத்தை எடுத்துக் கொண்டால் உலக அளவில் பணிபுரிவதற்கு ஏற்ற நிறுவனமாகத் திகழ்வதற்கு பல்வேறு காரணங்கள் கூறப்படுகின்றன.

பணியாளர்களுக்கு பணி புரிவதற்கேற்ற சூழலை தொடர்ந்து உருவாக்கிக் கொண்டே இருக்கிறது இந்நிறுவனம். வேலையை மகிழ்ச்சியாக, சுலபமாக செய்யும் சூழலை உருவாக்கியுள்ளது.

இங்குள்ள 64 ஆயிரம் பணியாளர்களுக்கும் இலவச மருத்துவக் காப்பீடு, லோண்றி வசதி, உடற்பயிற்சி கூடம், நீச்சல் குளம், பெற்றோரைக் கவனிக்க போதிய விடுப்பு, குழந்தைகளைப் பாதுகாக்க மிகச் சிறந்த காப்பகம் உள்ளிட்ட அனைத்து வசதிகளும் இந்நிறுவனத்தில் உளளன.

ஊழியர்களின் முழுத் திறனை வெளிக் கொணர அவர்களுக்கு வசதியான நேரத்தில் பணி புரிய வாய்ப்பு என்பன உண்டு.

வாடிக்கையாளர் சேவை சார்ந்த பணிகளில் வேண்டுமானால், இது சாத்தியமில்லாது இருக்கலாம். ஆனால் மற்ற இடங்களில்? பணி செவ்வனே நடக்க வேண்டும் என்பதுதானே அடிப்படைக் குறிக்கோள்? அதற்கு உதவாத,தேவையற்ற விதிமுறைகளை முடிந்தவரை மாற்றினால் தெய்வக்குற்றமா என்ன?

எல்லாக் காரியங்களிலும் உங்கள் கொள்கைகளில் பிடிவாதமாக இருக்காதீர்கள்.வளைந்து நெளிந்து வாழக் கற்றுக் கொள்ளுங்கள். காடுகளில் நீண்டு நேராக உள்ள மரங்களே முதலில் வெட்டப் படுகின்றன" என்கிறார் சாணக்கியர்!




# நிதி நிர்வாகத்தில் தவிர்க்க வேண்டியது

(சென்ற வாரத் தொடர்ச்சி)

ஓய்வுகால திட்டம்

30 வயதில் இருக்கும் நான் ஓய்வு காலத்துக்கு ஏன் இப்போதே திட்டமிட வேண்டும் என்று பலர் நினைக்கிறார்கள். ஆனால் இப்போது திட்டமிடாவிட்டால் அதன் பிறகு எப்போதும் திட்டமிட முடியாது என்பதை மறந்து விட வேண்டாம்.தற்போது மருத்துவ வசதிகள் அதிகரித்து வரும் சூழ்நிலையில் சராசரி ஆயுள் காலம் உயர்ந்துகொண்டே இருக்கிறது. ஓய்வு காலத்துக்கு பிறகு 15 வருடங்களுக்கு மேலே சராசரியாக வாழ வேண்டி இருக்கும் என்பதை மனதில் வைத்துகொண்டு ஓய்வு காலத்துக்கு சேமிப்பது நல்லது.

அதிகக் கடன்

கடன் வாங்குவது தவறில்லை. கடன் வாங்காமல் வீடு வாங்க முடியாது என்பதும் உண்மைதான். ஆனால் தங்களது எல்லை தெரிந்து வாங்க வேண்டும். எவ்வளவு காலத்துக்கு நமக்கு வருமானம் கிடைக்கும், எவ்வளவு தொகையை நம்மால் திருப்பி செலுத்த முடியும் உள்ளிட்டவற்றை தெரிந்து கடன் வாங்க வேண்டும்.

பொதுவாக கையில் கிடைக்கும் நிகர வருமானத்தில் 40 சதவீதத்துக்கும் மேல் கடன் இருக்க கூடாது. வீட்டுக்கடன், கார் கடன் உள்ளிட்ட அனைத்து கடன்களும் இந்த எல்லைக்குள்தான் இருக்கவேண்டும். ஆனால் எளிதாகக் கடன் கிடைக்கிறது என்று பல வகையான கடன் வாங்குகிறார்கள்.

இது தவிர நண்பர்கள் உறவினர்களிடம் வாங்கும் கடன் தனி. எல்லை தாண்டிய கடன் தலைக்கு மேல் தொங்கும் கத்தி என்பதை மறக்கலாகாது.

அவசர கால நிதி

பலர் சீராக சேமித்து வந்தாலும், அனைத்து முதலீடுகளையும் உடனடியாக எடுக்க முடியாத திட்டங்களாக தேர்ந்தெடுத்து முதலீடு செய்து வருவார்கள். ஏதாவது அவசர தேவைகள் அல்லது வேலை இழப்பு என்னும் சூழ்நிலை வரும் போது பணம் இல்லாமல் சிரமப்பட வேண்டி இருக்கும். அல்லது கடன் வாங்க வேண்டி இருக்கும். இதில் இன்னொரு விடயம் என்னவென்றால் முதலீட்டின் மீது கிடைக்கும் வருமானத்தை விட வாங்கிய கடனுக்கு அதிக வட்டி செலுத்த வேண்டி இருக்கும். அதனால் குறைந்தபட்சம் 3 மாத சம்பளத்தையாவது எளிதில் எடுக்க முடிகிற முதலீடுகளில் சேமிப்பது நல்லது.?

முதலீடு செய்யாமல் இருப்பது எப்படி தவறோ அதுபோல மொத்த முதலீடும் ஒரே இடத்தில் இருப்பதும் தவறு. தங்கம், பங்குச்சந்தை, நம்பிக்கை நிதியம், நிலையான வைப்பு என அனைத்து முதலீடுகளிலும் பிரித்து முதலீடு செய்வது நல்லது.

## பங்குச் சந்தை விபரம்

(வார இறுதியில்)

CSE COLOMBO STOCK EXCHANGE

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 6,715.33 | 6,747.07 ⇧ |
| எஸ் & பி 20 சுட்டி | 3,915.3 | 3,933.51 ⇧ |
| விலை அசைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா.மில்.) | 4,599.568 |

உயர்வடைந்தபங்குகள்(ரூ): மஸ்கெலிய(13.90), பிராக் லங்கா பினான்ஸ்(47.40), இன்டஸ்ரியல்அஸ்ப்(360.00), றோயல் பாம்(24.50), லங்கா வென்ஜர்ஸ்(50.00).

சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ.): பிசி ஹவுஸ்(0.10), உடபுசலாவ(19.50), எஸ்எம்பி லீசிங்(X)(0.30), யூனியன் கெமிக்கல்(692.60)

மேலதிக தகவல்கள்: www.cse.lk

# சரக்கு மற்றும் சேவை வரி( இந்தியா)

## அறிந்து கொள்வோம்

இந்தியாவில் நீண்ட காலமாக எதிர்பார்க்கப்பட்ட சரக்கு மற்றும் சேவை வரி (ஜிஎஸ்டி) கடந்த 1-ம் திகதி முதல் அமுலாகிவிட்டது. ஆனால் ஜிஎஸ்டி கடந்த வந்த பாதை மிக நெடியது. பல நிதி அமைச்சர்கள், பல குழு கூட்டங்களுக்கு பிறகு ஜிஎஸ்டி அமல்படுத்தப்பட்டிருக்கிறது.

ஜிஎஸ்டி அதாவது சரக்கு மற்றும் சேவை வரி ஒரு மறைமுக வரி, இது இந்தியா முழுவதும் மத்திய மற்றும் மாநில அரசாங்கங்களால் விதிக்கப்படும் பல்வேறு வரிகளுக்கு பதிலாக ஒற்றை வரியாக அறிமுகப்படுத்தப்படுகிறது.

இந்த ச.சே.வரியானது ஜிஎஸ்டி சபை மற்றும் அதன் தலைவர் மத்திய நிதி அமைச்சர் அருண் ஜேட்லியினால் நிர்வகிக்கப்படுகிறது.

இந்த ச.சே.வரி-யின் கீழ், சரக்கு மற்றும் சேவைகளானது பின் வரும் விகிதங்களில் வரி விதிக்கப் படுகிறது அவை: 0%, 5%, 12%, 18%, 28% ஆகும். கடினமான விலை மதிப்பற்ற கற்கள் மீது 0.25% சிறப்பு விகிதமும் வடிவமற்ற அரை குறைவான கற்கள் மற்றும் தங்கம் மீதும் 3% வரி விதிக்கப்பட்டுள்ளது.

வரலாறு

இந்தியாவில் மறைமுக வரி ஆட்சி சீர்திருத்த செயல்முறையானது, 1986-ல் விஸ்வநாத் பிரதாப் சிங் ஆட்சியில் அறிமுகப்படுத்தப்பட்ட மாற்றப்பட்ட மதிப்பு கூட்டு வரி (MODVAT) மூலம் தொடங்கியது. பின்னர் வாஜ்பாய் ஆட்சிகாலத்தில் மாநில அளவிலும் அமுல்படுத்த முடிவு செய்யப்பட்டது. பின்பு மன்மோகன் சிங் ஆட்சி காலத்தில் 2005-ல் மாநிலங்களில் மதிப்பு கூட்டு வரி அமலுக்கு வந்தது. பின்வரும் வரிகள் அனைத் தும் ஒருங்கிணைக்கப்பட்ட ஒன்றாக ச.சே.வ திகழுகிறது

- மத்திய கலால் வரி
- வணிக வரி
- மதிப்பு கூட்டு வரி (வற்)
- உணவு வரி
- மத்திய விற்பனை வரி(ஊளுவு)
- ஆக்ட்ரோய்
- பொழுதுபோக்கு வரி
- நுழைவு வரி
- கொள்முதல் வரி
- ஆடம்பர வரி
- விளம்பர வரி

சரக்குகள் மற்றும் சேவைகளின் விற்பனை, பரிமாற்றம், கொள்முதல், பண்டமாற்று, குத்தகை, இறக்குமதி போன்ற அனைத்து பரிவர்த்தனை களிலும் ச.சே.வ விதிக்கப்படும். இந்தியா இரட்டை ஜி.எஸ்.டி மாதிரி யைப் பின்பற்றும். இதன் பொருள் மத்திய மற்றும் மாநில அரசுகளால் ஜிஎஸ்டி வரியானது நிர்வகிக்கப் படும். ஒரே மாநிலத்திற்குள் நடை பெறும் பரிவர்த்தனைகள் அனைத் துக்கும் மத்திய ஜிஎஸ்டி மத்திய அர சாலும், மாநில ஜிஎஸ்டி மாநில அரசினாலும்




விதிக்கப்படும். வெவ்வேறு மாநிலங்களுக்கி டையே நடைபெறும் பரிவர்த்த னைகள் மற்றும் சரக்கு அல்லது சேவை இறக்குமதிக்கு, ஒருங்கிணைந்த ஜிஎஸ்டி மத்திய அரசினால் விதிக்கப்படும்.

ஜிஎஸ்டி ஒரு நுகர்வு அடிப்படையிலான வரியாகும், இதனால் சரக்கு மற்றும் சேவைகள் உற்பத்தி செய்யப்ப டும் மாநிலத்தில் வரி வசூலிக்கப் படாது. மாறாக நுகரப்படும் மாநி லத்தில் வரி வசூலிக்கப்படும். ஜிஎஸ்டி மாநில அரசுகள் வரி வசூலிப்பதை சிக்கலாக்குகிறது. முந் தைய அமைப்பில் வரி வசூலிப்பது மாநில அரசின் வரையறைக் குட்பட்டிருந்தது.

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 151.40 | 155.20 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 196.41 | 203.06 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 172.13 | 178.63 |
| சுவிஸ் பிராங் | 157.25 | 163.52 |
| கனேடிய டொலர் | 115.91 | 120.49 |
| அவுஸ்திரேலிய டொலர் | 115.54 | 120.70 |
| சிங்கப்பூர் டொலர் | 109.40 | 113.40 |
| ஜப்பான் யென் | 1.34 | 1.39 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.37 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 41.79 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## யாருக்கு மரண தண்டனை

(01.07.2017 இன் தொடர்ச்சி)

"தயவு செய்து நான் குறுக் கிடுவதற்கு மன்னிக்கவும்" என்ற பீர்பால் தொடர்ந்து, "பிரபு! அன்று ஒருநாள் இந்தக் கிளியை வளர்க்கும் மிகப்பெரிய பொறுப்பை ஃபயிஸ்கானிடம் ஒப்படைத்தபோது நீங்கள் சொன்னது நினைவு இருக்கிறதா? "இந்தக் கிளி இறந்துவிட்டது என்ற தகவலைச் சொல்பவனுக்கு மரண தண்டனை" என்றீர்கள். அவ்வாறு சொன்னது நீங்கள்தானே!" என்றார்."ஆம்! அப்படித்தான் சொன்னேன்! இன்றும் அதையே சொல்கிறேன். என்னுடைய கிளி இறந்து விட்டது.அதனால்" என்ற அக்பரை இடை மறித்தார் பீர்பால்."கிளி இறந்து விட்டது என்று சொன்னது நீங்கள்தான்! அதை ஃபயிஸ்கான் சொல்லவில்லை. அதனால் இப்பே?து யாருக்கு மரண தண்டனை தரவேண்டும்?" என்றார் பீர்பால். இதைக் கேட்டு அக்பர் உரக்கச் சிரித்தார் "பீர்பால்! நல்ல சமயத்தில் என் கண்களைத் திறந்து விட்டாய். ஒரு கிளிக்காக என் நல்ல அதிகாரிகளில் ஒருவனுக்கு மரண தண்டனை அளிப்பது சரியல்ல!" என்றார். ஃபயிஸ்கானுக்குப் போன உயிர் திரும்பி வர, பீர்பாலுக்கு நன்றி கூறினான். (முற்றும்)

## குழந்தையின் அழுகை



அக்பர் சக்கரவர்த்தியைக் காக்காய் பிடிப்பதற்காக அவருடைய சில அதிகாரிகள் எப்போதும் அவரைச் சூழ்ந்து கொண்டு, அவர்சொல்வதற்கெல்லாம்ஆமாம் போட்டுக் கொண்டிருந்தனர். அவர்களுடைய செயலைக்கண்டு முகம் சுளித்த பீர்பல், 'இவர்கள் அக்பரின்பணிஆளர்களா, இல்லை எதற்கெடுத்தாலும்வாலையாட்டும் நாய்களா?' என்று எண்ணினார். தன் மனத்தில் தோன்றியதை ஒருநாள் அவர்களிடம் பீரபல் கூறி விட, அவர்கள் வெகுண்டனர். "பீர்பல்! என்ன தைரியம் இருந்தால் எங்களை நாய்கள் என்று குறிப்பிடுவாய்! நீ எங்களிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும்!" என்று கோபத்தில்எகிறிக்குதித்தனர்.

"ஏன் உங்களை நாய்கள் என்று சொல்லக்கூடாது?" என்று பீர்பல் கேட்டதும், "நாங்கள் ஆறறிவு படைத்த மனிதர்கள்!" என்றனர். "அதுதான் தெரிகிறதே!" என்றார் பீர்பல் ஏளனத்துடன்! "அப்படியெனில் ஏன் எங்களை நாய்கள் என்று சொல்கிறாய்?" என்று கேட்டனர்.

"தவறுதான்! ஏனெனில் நாய்களுக்கு வால் உண்டு. உங்களுக்கில்லை!" என்றார்பீரபல். "நாக்கை அடக்கிப் பேசு!" என்று அவர்கள் சீறி விழ, "நான் என்ன பிரமாதமாக சொல்லிவிட்டேன் என்று நீங்கள் இப்படி கோபத்தில் குதிக்கிறீர்கள்? உங்களுக்கு தைரியம் இல்லை என்றும், நீங்கள்கோழைகள் என்றும் கூறுகிறேன். அது தவறா?" என்றார் பீர்பல்.

"சரி, அதைவிடு! நாங்கள் பயந்தாங்கொள்ளிகளாகவே இருந்து விட்டுப் போகிறோம். ஆனால் நீ எங்களை விட தைரியசாலியா?" என்று ஒருவன் பீர்பலிடம் கேட்டான். "ஆமாம், சந்தேகம் இல்லாமல்!" என்று மார்தட்டிய பீர்பல், "உங்களுக்கு என் தைரியத்தை நான் எந்த விதத்தில் நிரூபித்துக் காட்டவேண்டும் என்று என்னிடம் சொல்லுங்கள்!" என்றார். "முன்கூட்டியே சக்கரவர்த்தியிடம் அனுமதி பெறாமல் தர்பாருக்கு உன்னால்தாமதமாகவரமுடியுமா?" என்று ஒருவர் சவால் விட்டார்.

அக்பர்சபைக்கு வருமுன்னரே, மற்றவர்கள் வந்துவிட வேண்டும் என்பது அக்பரின் கட்டளை! அப்படி யாராவது குறித்த நேரத்தில் வர முடியவில்லையெனில், தாமதமாக வருவதற்கு முன்கூட்டியே தகவல் அனுப்ப வேண்டும். அந்த நியதியை மீறுபவர்களின் மீது சக்கரவர்த்தி கடுமையானநடவடிக்கைஎடுப்பது உண்டு. இந்த விஷயம்பீரபலுக்கும்தெரியும். ஆயினும், முன் வைத்த காலைப் பின் வைக்க மனமின்றி, "சரி! நாளைக்கு நான் முன் அனுமதி இன்றி தாமதமாக சபைக்கு வந்துக் காட்டுகிறேன்!" என்று கூறினார்.

நாளைக்கு பீர்பலுக்கு சக்கரவர்த்தி கடுமையான தண்டனை விதிப்பார் என்று எண்ணியவாறு அவர்கள் மகிழ்ச்சியுடன் சென்றனர். மறுநாள் அக்பர் தர்பாரில் நுழைந்த போது, பீர்பலைத் தவிர மற்றவர் அனைவரும் ஏற்கெனவே வந்து இருந்தனர். அனைவரும் எழுந்து நின்று அவருக்கு வணக்கம் செலுத்திய பிறகு தங்களுடைய ஆசனங்களில் அமர்ந்தனர். அக்பரும் தன் ஆசனத்தில் அமர்ந்தார். பிறகு சபையோரை ஒருமுறை பார்த்த அக்பர் அவர்களில் பீர்பல் மட்டும் இல்லாததை உணர்ந்தார்.

"பீர்பல் ஏன் வரவில்லை? ஏதாவது தகவல் அனுப்பியிருக்கிறாரா?" என்று அக்பர் சபையோரைக் கேட்டார். உடனே, சபையில் ஒருவர் எழுந்து, "இல்லை, பிரபு!" என்றார். "தர்பாருக்கும் வரவில்லை தகவலும் அனுப்பவில்லை! அவரை இங்கு அழைத்து வர ஆள் அனுப்புங்கள்!" என்று அக்பர் உத்தரவிட்டார். பீர்பலை அழைத்து வரச் சென்ற ஆள் சிறிது நேரத்தில் திரும்பினான். (தொடரும்)

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

07.2017
03

- 1754 - ஏழாண்டுப் போர்: ஜோர்ஜ் வாஷிங்டனின் படைகள் நெசசிட்டி கோட்டையை பிரெஞ்சுப் படைகளிடம் இழந்தனர்.
- 1775 - அமெரிக்கப் புரட்சிப் போர்: ஜோர்ஜ் வாஷிங்டன் மசாசுசெட்சில் இராணுவத்துக்குத் தலைமை வகித்தார்.
- 1778 - அமெரிக்கப் புரட்சிப் போர்: பென்சில்வேனியாவில் பிரித்தானிய இராணுவத்தினர் பெண்கள், குழந்தைகள் உட்பட 360 பேரைக் கொலை செய்தனர்.
- 1778 - புருசியா ஆஸ்திரியாவின் மேல் படையெடுத்தது.
- 1844 - ஐஸ்லாந்தில் கடைசிச் சோடி பெரிய ஓக் பறவைகள் கொல்லப்பட்டன.
- 1848 - அமெரிக்கக் கன்னித் தீவுகளில் பீட்டர் வொன் ஸ்கொல்ட்டன் என்பவரால் அடிமைகள் விடுவிக்கப்பட்டனர்.
- 1867 - தமிழ்நாடு விழுப்புரம் வளவனூர் பகுதியில் நிலநடுக்கம் ஏற்பட்டது.
- 1866 - புருசியாவின் வெற்றியுடன் ஆஸ்திரிய-புரூசியப் போர் முடிவுக்கு வந்தது.
- 1872 - யாழ்ப்பாணக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது.
- 1890 - ஐடஹோ ஐக்கிய அமெரிக்காவின் 43வது மாநிலமாக இணைந்தது.
- 1944 - இரண்டாம் உலகப் போர்: பெலரஸ்சின் தலைநகர் மின்ஸ்க் சோவியத் படையினரால் நாசி ஜேர்மனியிடம் இருந்து விடுவிக்க ப்பட்டது.
- 1962 - பிரான்சுக்கு எதிரான அல்ஜீரிய விடுதலைப் போர் நிறைவு பெற்றது.
- 1969 - சோவியத்தின் என்1 என்ற ஏவுகணை ஏவுதளத்திலேயே வெடித்துச் சிதறியது.
- 1970 - பிரித்தானிய விமானம் ஸ்பெயினில் மலையொன்றுடன் மோதியதில் 113 பேர் கொல்லப்பட்டனர்.
- 2006 - பூமியில் இருந்து 432,308 கிமீ தூரத்தில் 2004 ஓீ14 என்ற சிறுகோள் பறந்தது அவதானிக்கப்பட்டது.

பிறப்புகள்

- 1782-பியெரி பெர்தியர், பிரெஞ்சு புவியியலாளர் (இ. 1861)
- 1883 - பிரான்ஸ் காஃப்கா, செக்-ஆத்திரிய எழுத்தாளர் (இ. 1924)
- 1918 - எஸ். வி. ரங்கராவ், தென்னிந்தியத் திரைப்பட நடிகர் (இ. 1974)
- 1924 - செல்லப்பன் ராமநாதன், சிங்கப்பூரின் 6வது குடியரசுத் தலைவர் (இ. 2016)
- 1928 - எம். எல். வசந்தகுமாரி, கருநாடக இசைப் பாடகர் (இ. 1990)
- 1942 - அடூர் கோபாலகிருஷ்ணன், கேரளத் திரைப்பட இயக்குநர்
- 1948 - கோ. இளவழகன், தனித்தமிழ் இயக்கச் செயற்பாட்டாளர்
- 1949 - நெ. அப்துல் அஜீஸ், இந்திய அரசியல்வாதி
- 1962 - டாம் குரூஸ், அமெரிக்க நடிகர்
- 1971 - ஜூலியன் அசாஞ்சு, விக்கிலீக்ஸ் நிறுவனர்
- 1980 - ஹர்பஜன் சிங், இந்தியத் துடுப்பாளர்
- 1982 - கனிகா இந்திய நடிகை, பாடகி
- 1987 - செபாஸ்டியன் வெட்டல், செருமானிய மோட்டர்ர் பந்தய வீரர்

இறப்புகள்

- 1971-ஜிம் மோரிசன், அமெரிக்கப் பாடகர் (பி. 1943)

சிறப்புநாள்

- விடுதலை நாள் (பெலருஸ், 1944)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி | நெல்லியடி | கொடிகாமம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் | சுன்னாகம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 100 | 140 | 200 | 150 | 140 |
| உருளைக்கிழங்கு | 120 | 80 | 100 | 120 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 250 | 250 | 300 | 400 | 400 | 240 |
| தக்காளி | 200 | 140 | 160 | 160 | 120 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 60 | 80 | 80 | 80 | 70 |
| கோவா | 200 | 150 | 200 | 120 | 120 | 200 |
| கரட் | 400 | 250 | 300 | 300 | 350 | 300 |
| பூசணி | 120 | 80 | 110 | 100 | 80 | 100 |
| புடோல் | 120 | 50 | 80 | 120 | 100 | 80 |
| வாழைக்காய் | 100 | 50 | 80 | 80 | 60 | 70 |
| சின்ன வெங்காயம் | 400 | 300 | 320 | 400 | 400 | 340 |
| பெரிய வெங்காயம் | 120 | 90 | 100 | 100 | 100 | 100 |
| பாகற்காய் | 200 | 140 | 150 | 160 | 120 | 160 |
| வெண்டிக்காய் | 120 | 80 | 80 | 120 | 100 | 120 |
| கருணைக் கிழங்கு | 150 | 50 | 140 | 160 | 120 | 120 |
| பயற்றங்காய் | 150 | 80 | 140 | 160 | 100 | 120 |
| லீக்ஸ் | 150 | 80 | 120 | 120 | 120 | 100 |
| பீற்றூட் | 150 | 100 | 140 | 120 | 140 | 100 |
| கறிமிளகாய் | 400 | 150 | 300 | 240 | 200 | 240 |
| முருங்கைக்காய் | 150 | 180 | 250 | 200 | 250 | 200 |
| போஞ்சி | 300 | 180 | 200 | 200 | 160 | 200 |
| கத்தரிதம்புள்ள | 100 | 100 | 140 | 160 | 120 | 120 |
| கீரை - 1பிடி | 50 | 20 | 30 | 30 | 30 | 30 |
| தேசிக்காய் | 60 | 80 | 80 | 120 | 100 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 60 | 50 | 40-60 | 70 | 70 |
| இராசவள்ளி | 400 | 200 | — | 300 | 200 | 250 |
| வெங்காயப்பூ | 200 | 200 | — | 240 | 200 | 200 |
| முள்ளங்கி | 150 | 50 | 80 | 120 | 80 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 10 | 40 | 40 | 25 | 30 |
| வல்லாரை | 60 | 10 | 20 | 20 | 20 | 10 |
| ஈரப்பலா | 150 | — | — | 120 | 100 | 100 |

எல்லா மக்களையும் எப்போதும் முட்டாளாக்க முடியாது.

~ ஆபிரகாம் லிங்கன்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## சமஷ்டியும் இல்லை இணைப்பும் இல்லையென்றால் இதற்கு ஏன் நீங்கள்?

இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பது சமஷ்டியோ அல்லது வடக்கு கிழக்கு மாகாணங்கள் இணைந்ததோ அல்ல என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் கூறியுள்ளார்.

தமிழ் மக்கள் விடயத்தில் இதுதான் நடக்கும் என்பதை எம்மவர்கள் மிகத் தெளிவாக புரிந்து கொண்டுள்ளனர்.

இதையே வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் மிகத் தெளிவாக அண்மையில் கூறியிருந்தார்.

சமஷ்டியும் இல்லை; வடக்கு கிழக்கு இணைப்பும் இல்லை ஆக பதின்மூன்றுக்கும் குறைவான தீர்வே த்மிழ் மக்களுக்கு தரப்படப் போகின்றது.

இதனால் எமது மக்களுக்கு எந்தப் பிரயோசனமும் இல்லை என்று முதலமைச்சர் கூறியிருந்தார்.

அதுமட்டுமின்றி வடக்கு மாகாண முதலமைச்சராகிய என்னை பதவியிலிருந்து இறக்குகின்ற சதித் திட்டத்துக்கும் இதுவே காரணம்.

அதாவது நான் முதலமைச்சராக இருந்தால் பதின்மூன்றுக்குக் குறைவான எந்தத் தீர்வையும் ஏற்க மாட்டேன்.

அவ்வாறு ஏற்காவிட்டால் அது அரசுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் மிகுந்த சிரமத்தைக் கொடுக்கும்.

ஆகையால் என்னை பதவியில் இருந்து இறக்கிவிட்டு எந்த அதிகாரமும் உப்புச்சப்பும் இல்லாத தீர்வுத் திட்டத்தை அரங்கேற்றுவது தான் உண்மையான நோக்கம் என்றும் முதலமைச்சர் விக்னேஸ்வரன் கூறியிருந்தார்.

தீர்வு என்ற அடிப்படையில் தமிழ் மக்கள் ஏமாற்றப்படப் போகின்றனர் என்பதை முதலமைச்சர் வெளிப்படுத்தி விட்டார் என்ற பதட்டத்தில் நாமும் உண்மையைக் கூறிவிடுவதே இதிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கான ஒரே வழி என்ற அடிப்படையில்,

இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பது சமஷ்டியும் அல்ல; வடக்கு கிழக்கு மாகாண இணைப்பும் அல்ல என்பதை கூறிவிடுவதற்கு கூட்டமைப்பு முடிவு செய்தது.

சரி; முப்பது ஆண்டு காலப் போராட்டம், எத்தனையோ தியாகங்கள், தமிழ் மக்களின் உயிரிழப்புக்கள், போர் தந்த வடுக்கள், வேதனைகள் என சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து வரும் தமிழ் மக்களுக்கான தீர்வு என்பதில் எந்த அதிகாரமும் இல்லை என்றால்,

அதைப் பெற்றால் என்ன? பெறாமல் விட்டால்தான் என்ன என்ற கேள்வி எழும்.

இன்னும் சற்று ஆழமாகப் பார்த்தால் மேற்கூறப்பட்டதுதான் தீர்வு என்றால் நீங்கள் ஏன் என்ற கேள்வி கூட்டமைப்பை நோக்கி எழும்.

கடவுளே! அன்று சர்வதேச போர்க்குற்ற விசாரணையை வலியுறுத்தியிருந்தால் இன்று இப்படியொரு அவலநிலை நமக்கு வருமா என்று தமிழ் மக்கள் கேட்கின்றனர்.

ஏதோ தமிழ் மக்கள் விடயத்தில் கூட்டமைப்பு அரசியல் சாணக்கியத்துடன் செயற்படுவது போல நடித்து எங்களை ஏமாற்றி விட்டது என்பதைத் தவிர, இப்போதைக்கு வேறு எதனையும் சொல்ல முடியாது.

# உமா ஓயா திட்டப் பாதிப்புக்கு ராஜபக்ஷ நிறுவனமே காரணம்

## இராஜாங்க அமைச்சர் ரங்கே குற்றச்சாட்டு

(கொழும்பு)

உமா ஓயா திட்டத்தினால் ஏற்பட்டுள்ள மக்களின் புலம் பலானது ராஜபக்ஷ சகோதர நிறுவனத்தின் தன்னிச்சையான நடவடிக்கையின் பிரதி பலன என இராஜாங்க அமைச்சர் பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.

ஆனமடுவ பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசும்போதே அவர் இதனை கூறியுள்ளார்.

160 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் மேற்கொள்ளக்கூடிய உமா ஓயா திட்டத்திற்கு 548 மில்லியன் டொலர் என மதிப்பீடு செய்து பணத்தை மோசடி செய்துள்ளனர்.

பண்டாரவளை என்பது மிகவும் முக்கியமான பிரதேசம். ஓய்வெடுக்க பண்டாரவளை அல்லது நுவரெலியாவுக்கு செல்ல வேண்டும் எனக் கூறும் நிலைமையும் தற்போது மாற ஆரம்பித்துவிட்டது எனவும் பாலித ரங்கே பண்டார குறிப்பிட்டுள்ளார். (இ-7)

# அரசு மற்றும் இராணுவத்திற்கு எதிராக காஷ்மீரில் வெடித்தது மக்கள் போராட்டம்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் மற்றும் இராணுவத்தின் அத்து மீறல்களை கண்டித்து பொதுமக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தியாவுக்கு சொந்தமான காஷ்மீரின் வடக்குப் பகுதியை பாகிஸ்தான் அத்து மீறி ஆக்கிரமித்து வைத்துள்ளது.

ஆசாத் காஷ் மீர் என்று அழைக்கப்படும் இப்பகுதியில் சீனா மற்றும் பாகிஸ்தான் அரசுகள் இணைந்து வீதிக் கட்டுமானப் பணிகளை மேற்கொண்டு வருகின்றது. இதற்காக, இப்பகுதி மக்க ளின் நிலங்கள் கையகப்படுத்தப்படுகிறது.

நிலம் அபகரிப்பதை கண்டித்து மக்கள் போராட்டம் நடத்தினால் இராணுவத்தின் மூலம் மக்கள் தாக்கப்படுவதாக இப்பகுதியினர் குற்றச்சாட்டுகளை முன் வைத்து நேற்று போராட்டத்தில ஈடுபட்டனர். ஹாஜிரா என்ற பகுதியில் பெருந்திரளாக திரண்ட மக்கள் அரசுக்கும் ராணுவத்துக்கும் எதிராக கோஷங்களை எழுப் பினர்.

போராட்டத்தில் பங்கேற்ற ஹயாத் கான், " பாகிஸ்தான் பிரதமருக்கும் இராணுவத்தினருக்கும் ஒன்று கூறிக் கொள்கிறேன். இது போன்ற நடவடிக்கைகளை இங்கு மேற்கொண்டால் அவர்களை (இராணுவததினரை) எப்படி இங்கிருந்து வெளியே வீசுவது என நாங்கள் பார்த்துக்கொள்வோம்" என ஆவேசமாக கூறியுள்ளார்.

மேலும், இந்துக்களும், ஷியா முஸ்லிம்களும் தீவிர வாதிகளின் இலக்குகளுக்கு உள்ளாவதாக கூட்டத்தினர் இடையே ஹயாத் கான் தெரிவித்தார். (8)

## சாஸ்திரங்கள்

✦ நமது உடலிலுள்ள அனைத்து நாடிகளும் சேருமிடம் நெற்றியாகும். இந்த நெற்றியில் அணிகின்ற குங்குமம், விபூதி, திருமண், கோபி சந்தனம், முதலிய நமது உடலிலுள்ள நாடிகளின் கெட்ட நீரை வற்றச் செய்து நல்ல ஆரோக்கியத்தையும் தீர்க்காயுளையும் சுறுசுறுப்பையும் தருகின்றன.

-வைத்திய சாஸ்திரம்

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




**ஜாதகம் இல்லாதவர்கள் பொருத்தம் பார்ப்பது எப்படி?**

ஜாதகம் இல்லாதவர்கள் பெண் குலத்தையும் ஆண் குலத்தையும் நன்கு ஆய்வு செய்த பிறகு குல தெய்வத்திடம் பூ வாக்கு கேட்டு திருமணத்தை முடிக்கலாம்.

ஆண், பெண் இருவரில் ஒருவருக்கு ஜாதகம் பார்க்கக் கூடாது. மாறாக குல தெய்வத்திடம் வாக்கு கேட்க வேண்டும். (தொடரும்)

## குழந்தைகளுக்கு உணவு ஊட்டும் போது

உணவு தயாரிக்கும்போதும் உணவூட்டும் போதும் தனிநபர் சுத்தத்திலும் சுற்றாடல் சுத்தத்திலும் கவனம் செலுத்துவோம்.

குழந்தைகளுக்கென தனியான பாத்திரங்களை, கரண்டியை வைத்திருத்தல் சிறப்பு.

தகவல்: சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, யாழ். மாநகரசபை.




## திருப்பதி மலை வாழும் வெங்கடேசா

அரசன் அஞ்சி நடுங்கினான். ஆண்டவன் பாதம் பணிந்தான்.

ஐயனே! நான் ஒரு பாவமும் அறியேன். குற்றமிழைக்காத எனக்கு இப்படி ஒரு கொடுந்தண்டனையா? அடியேனைப் பொறுத்தருளுங்கள். இட்ட சாபம் விலக்கி என் இடர் தீருங்கள் என்று மன்னிப்புக் கோரினான்.

கோவிந்தனின் கோபம் குறைந்தது. சதுர்புஜன் சாந்தமூர்த்தியானான்.

அரசே உன்மேல் வந்திறங்கிய சாபம் முற்பிறப்பின் கர்மபலன். அதை மாற்ற இயலாது. இனி நடக்க இருப்பது இன்னொன்று. நீ பூதமாக சில காலம் இருந்து, இறந்து இதே சோழவம்சத்தில் ஆகாச மன்னன் என்னும் பெயருடன் அவனியில் பிறப்பாய். அந்தப் பிறப்பின்போது நீ பெற்றெடுக்கும் உனது புதல்வியை எனக்கு மணம் செய்து கொடுத்து மாண்படைவாயாக என்று வாயார வாழ்த்தினார். (தொடரும்)

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## மக்களின் அறிவு வளர்ச்சி



அறியாமை என்ற மயக்கத்தில் வாழும் மக்களுக்கு மேலும் மயக்கத்தையூட்டி அதன் மூலமே வயிறு வளர்த்து வாழும் ஒருவரைத் தவறுதலாக அறிவாளி என்றோ, பெரிய மனிதர் என்றோ, அரசியல் தலைவர் என்றோ, சாது என்றோ, ஞானி என்றோ, மக்கள் கருதும் வழக்கில் உலகம் சிறிது சிறிதாக மாறிக் கொண்டே வருகின்றது.


யார் எந்தக் கருத்தை வெளியிட்டாலும், இயற்கையமைப்பு, மனித இன வரலாறு, முன்னோர் கருத்து, தற்கால உலகப் போக்கு, தனது அறிவு நிலை, விஞ்ஞானம், இவைகளோடு அதை ஒப்பிட்டு ஆராய்ந்து தெளிவு காணும் அளவிற்கு, உலக மக்களின் அறிவு நிலை நாளுக்கு நாள் உயர்ந்து வருகின்றது.

தனித்த ஒரு மனிதனையோ, அவன் கருத்தையோ, சிறப்பித்துப் பேசிக் கொண்டிருப்பதிலேயே காலம் கழித்து, தான் பயனற்றுப் போகும் அறியாமை இருள், சுய ஆராய்ச்சியால் மக்களிடமிருந்து விலகி வருகின்றது.

இதன் விளைவாக மனிதன் [illegible] மனிதன் அறிந்து மனிதனாகவே வாழத்தக்க சூழ்நிலைகள் உலக முழுவதும் [illegible] காலத்திலேயே உருவாகிவிடும் என்பது திண்ணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Drayton அணியை வீழ்த்தியது AB



AB விளையாட்டு கழகத்தின் முதலாவது வன் பந்து கிரிக்கெட் போட்டி (01.07.2017) அன்று இடம் பெற்ற AB விளையாட்டுக் கழகத்திற்கும் drayton விளையாட்டுக் கழகத்திற்கும் இடம் பெற்ற போட்டியில் நாணய சுழற்ச்சில் வெற்றி பெற்ற drayton அணி கழத்தடுப்பை தீர்மானித்து அதன்படி துடுப்பெடுத்தாடிய AB 30 பந்து பரிமாற்றத்தில் அனைத்து இலக்குகளையும் இழந்து 197 ஓட்டங்களை பெற்றது. இதில் லிங்கநாதன்-49, விஷ்ணு -43, சிலோயன் -28 ஓட்டங்களை அணிக்காக பெற்று கொடுத்தனர்.

பந்து வீச்சில் drayton அணி சார்பாக நந்தகுமார் 9 பந்துப் பரிமாற்றம் வீசி 31 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும் திலக் 5.3 பந்துப்பரி மாற்றம் வீசி 42 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும் கைப்பற்றினர். 198 என்ற இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய drayton அணி 18 பந்துபரிமாற்றத்தில் அணைத்து இலக்குகளையும் இழந்து 97 ஓட்டங்களை பெற்றது. அவ் அணி சார்பாக வனதீசன்-17, உதயசாந்-17, பவா 12ஓட்டங்களை பெற்றனர்.

பந்து வீச்சில்உத்தமன் 3.4 பந்துப்பரிமாற்றம் வீசி 31 ஓட்டங்களுக்கு 5இலக்குகளையும் ராகுலன் 1.4 பந்துப் பரிமாற்றம் வீசி 8 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் சாஜித் 4 பந்துப் பரிமாற்றம் வீசி 11 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

இப்போட்டியில் AB விளையாட்டுகழகமானது 100 ஓட்டங்களால் கன்னி வெற்றியினை பெற்றது. (க)

# யமஹா கூடைப்பந்தாட்ட அணி காலிறுதிக்கு தகுதி பெற்றது



சரஸ்வதியின் சனசமூக நிலையத்தின் 98ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு யாழ்.மாவட்ட ரீதியில் நடைபெறும் கூடைப்பந்தாட்ட தொடரின் (01.07.2017) அன்று நடைபெற்ற கூடைப்பந்தாட்ட போட்டியில் யாழ்.பல்கலைக் கழக அணியை எதிர்த்து யமஹா கூடைப்பந்தாட்ட பெண்கள் அணி மோதியது.

இப் போட்டியில் யமஹா கூடைப்பந்தாட்ட பெண்கள் அணியை யாழ் .பல்கலைக் கழக அணி 47:22 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று காலிறுதிக்கு தகுதி பெற்றுள்ளது. (க)

# நவிண்டில் கலைமதி வி. கழகத்தின் உதைபந்தாட்ட சுற்றுத் தொடர்

## றோயல்,சென் அன்ரனிஸ் வெற்றி



நவிண்டில்கலைமதி யின் உதைபந்தாட்டச் . சுற்றுப் போட்டியில்(201706.30) அன்று நடைபெற்ற முதலாவது போட்டியில் குப்பிளான் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக மோதியது.

இதில் றோயல் வி.க.2:0 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக றோயல் விளையாட்டுக்கழக 6ஆம் இலக்க வீரன் பிரசன்னா தெரிவு செய்யப்பட்டார்.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது போட்டியில் பாசையூர் சென் அன்ரனீஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து பல்கலைக்கழகம் மோதியது.

இதில் சென் அரனீஸ் விளையாட்டுக்கழகம் 2:0 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது. போட்டியின் ஆட்ட நாயகனாக சென் அன்ரனீஸ் அணியின் 7 ஆம் இலக்க வீரன் பவா தெரிவு செய்யப்பட்டார். (க)

# உள்ளூர் ரீதியான உதைபந்தாட்டம் அரியாலை சரஸ்வதி சம்பியன்



அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 98வது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு (25.06.2017)அன்று அரியாலை உதைபந்தாட்டப்பயிற்சி மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் உள்ளூர் ரீதியான உதை பந்தாட்டதொடரில்சமனிலை தவிர்ப்பு உதையில் 4:3 ரீதியில் அரியாலைதிருமகள் சனசமூக நிலைய அணியை வீழ்த்தி சம்பியனாகியது அரியாலை சரஸ்வதி சன சமூக நிலைய அணி. (க)




2017 ஆம் ஆண்டிற்கான பாடசாலை ரீதியிலான கராத்தே சுற்றுப் போட்டி கடந்த 19, 20 ஆம் திகதிகளில் நெல்லியடி மத்திய கல்லூரியில் நடைபெற்றது. இப் போட்டியில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியைச் சேர்ந்த மாணவர்கள் 7 பதக்கங்களும் இரண்டாம் இடத்திற்கான வெற்றிக் கிண்ணத்தையும்பெற்றுக்கொண்டு பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளனர். இவர்களுடன் பிரதம நடுவராகிய சென்சே M.இரத்தினசோதி, பாடசாலை கராத்தே பொறுப்பாசிரியர் செ. செல்வறமணன் மற்றும் பாடசாலை கராத்தே ஆசிரியர் சென்சே எஸ். விஜயராஜையும் படத்தில் காணலாம். இம் மாணவர்கள் இவ் வருடத்திற்கான தேசிய போட்டிக்கு தெரிவாகியுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

# இன்றைய போட்டிகள்

அரியாலை சனசமூக நிலையம் தனது 68 ஆவது ஆண்டு நிறைவு விழாவினை முன்னிட்டு யாழ் மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத்தின் அனுசரணையுடன் நடத்தும் கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் இன்று திங்கட் கிழமை இரவு 7 மணிக்கு நடைபெறும் போட்டியில் நாயன்மார்க்கட்டு பாரதி விளையாட்டு கழகத்தை எதிர்த்து புத்தூர் சென்றல் விளையாட்டுக் கழகமும் தொடர்ந்து இரவு 8 மணிக்கு நடைபெறும் போட்டியில் சண்டிலிப்பாய் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நீர்வேலி காமாட்சி அம்பாள் விளையாட்டுக் கழகமும் மோதுகின்றது.

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையம் 98 ஆவது ஆண்டு நிறைவு விழாவினை முன்னிட்டு யாழ். மாவட்ட தாச்சி விளையாட்டு சங்க அனுசரணையுடன் அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையம் நடத்தும் மாபெரும் தாச்சி சுற்றுப் போட்டி இன்று மாலை 6 மணிக்கு நடைபெறும். இப் போட்டியில் நாவலர் சுதுமலை விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சரஸ்வதி நாவற்குழி விளையாட்டுக் கழகமும் அதனை தொடர்ந்து நடைபெறும் போட்டியில் நவாலி தென்றல் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கைதடி துர்க்கா விளையாட்டுக் கழகமும் மோதுகின்றது. (க)

இரணைப்பாலை சென் அன்ரனிஸ் விளையாட்டு கழகத்தினால் அமரர் யோன் கில்லறி அவர்கள் நினைவாக நடத்தப்படும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் இன்று மாலை 4 மணிக்கு நடைபெறும் போட்டியில் உதிக்கும் திசை விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து அலையோசை விளையாட்டுக் கழகமும் மோதுகின்றது. (க)







கிளிநொச்சி மாவட்ட DSI கரப்பந்தாட்டப் போட்டி அண்மையில் கிளிநொச்சி இளைஞர் சேவைகள் மன்ற விளை யாட்டு மைதானத்தில் நடை பெற்றது.

இதில் கனகபுரம் மகாவித்தியாலயத்தின் 15 வயது ஆண்கள் அணியும் 15, 17 வயது பெண்கள் அணியும் முதலாம் இடம் பெற்று தேசிய மட்டம் செல்லத் தகுதி பெற்றுள்ளன. வெற்றி பெற்ற அணி வீர,வீராங்கனை களுடன் உடற்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர், உடற் கல்வி ஆசிரிய ஆலோசகர், உடற்கல்வி ஆசிரியர், பொறுப் பாசிரியர், இளைஞர் சேவை அதிகாரியையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பாடசாலை...

முற்பகல் 10 மணியளவில் கடலில் குளித்துக் கொண்டிருந்த வேளை துரதிஷ்டவசமாக சேற்றில் கால் புதைந்தமையினால் நீரில மூழ்கி உயிரிழக்க நேரிட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவ இடத்திற்கு வந்த கடற்படையினரின் உதவியுடன் மாணவனின் உடல் மீட்கப்பட்டு தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டு பின் மரண விசாரணைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

மேலும் மாணவனின் உயிரிழப்பு தொடர்பில் தெல்லிப்பழை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (செ-30)

## முதியவரொரு...

சடலம் ஒன்று மீட்கப்பட்டதாக வல்வெட்டித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் கெருடாவில் பகுதியைச் சேர்ந்த சின்னையா தெய்வேந்திரம் (வயது 70) எனப் பொலிஸார் கூறினார்.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மாலை தோட்டத்திற்கு சென்றவரை காணாத நிலையில் நேற்று காலை அப்பகுதிக்கு சென்று பார்த்த போது பிரஸ்தாப நபர் சடலமாக தோட்டக் கிணற்றில் காணப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் வல்வெட்டித்துறை மரண விசாரணை அதிகாரி பா.சுசீந்திரசிங்கம் விசாரணைகளை மேற்கொண்டார். (செ-60)

## 110ஆவது நாளாக...

ப்படும் கவனயீர்ப்புப் போராட்டம் நேற்று 110ஆவது நாளாகவும் முன்னெடுக்கப்பட்டு தொடர்ந்து வருகின்றது.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளினால் வட் பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் போராட்டத்திற்கு வலுச் சேர்க்கும் முகமாக மருதங்கேணி பிரதேச செயலகத்திற்கு அருகாமையில் கடந்த மார்ச் மாதம் 15ஆம் திகதி ஆரம்பமான இக் கவனயீர்ப்புப் போராட்டம் தீர்வுகள் எதுவுமின்றி நேற்று 110 ஆவது நாளை எட்டி தொடர்ந்து நடைபெற்று வருகின்றமை சுட்டிக்காட்டத்தக்கது. (செ-60)

## த.தே.கூ.மீனவ...

சட்டமூலம் எதிர்வரும் 6 ஆம் திகதி பாராளுமன்றில் கொண்டுவரப்படவுள்ள நிலையில், அந்த சட்டத்துக்கு வடக்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவு வழங்க வேண்டும் எனக் கோரியும், குறித்த சட்டமூலத்தை கொண்டு வந்த பாராளுமன்ற உறுப்பினருக்கு நன்றி தெரிவிக்கும் கலந்துரையாடல் ஒன்று வடமாகாண கடற்தொழிலாளர் இணையத்தின் ஏற்பாட்டில் நேற்றைய தினம் கிறீன் கிறஸ் விருந்தினர் விடுதியில் இடம்பெற்றது.

அப்போது கடற்தொழிலாளர் இணையத்தின் தலைவர்கள் உரையற்றியதை தொடர்ந்து, பாராளுமன்ற உறுப்பினர்கள் உரையாற்றியிருந்தானர். அவர்களின் உரை முடிந்த பின்னர், குறித்த கலந்துரையாடலின் ஏற்பாட்டாளர்கள் நிகழ்வை நிறைவுக்கும் கொண்டு வந்தனர். இதையடுத்து பாராளுமன்ற உறுப்பினர்கள் அங்கிருந்து வெளியேற முற்பட்டனர்.

அவ் வேளையில் அங்கிருந்த மீனவ சங்க பிரதிநிதிகள் தமது எதிர்ப்பை தெரிவித்ததுடன், எமது கருத்துக்களை கேட்காமல் யாரும் வெளியில் செல்ல அனுமதிக்க முடியாது என தெரிவித்தனர். இதனால் அங்கு பெரும் குழப்ப நிலை ஏற்பட்டது.

பின்னர் மீனவ சங்க பிரதிநிதிகளை கருத்து தெரிவிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்ட பின்னரே சுமூகமான நிலை ஏற்பட்டிருந்தது.

மேற்படி கலந்துரையாடலில் த.தே.கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, எம்.ஏ.சுமந்திரன், சி.சிறீதரன், திருமதி சாந்தி சற்குணராசா, த.சித்தார்த்தன், ஈ.சரவணபவன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (செ-9)

## மிருசுவிலில்...

ந்துள்ளார்.

நேற்று மிருசுவில் சந்தியில் ஏற்பட்ட கோஷ்டி மோதலில் சிக்கி தாக்குதலுக்குள்ளான பிரஸ்தாப இளைஞன் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இத் தாக்குதல் சம்பவத்தின் போது 10 பேர் கொண்ட இளைஞர் குழுவினர் தாக்குதலில் ஈடுபட்டிருந்தார்கள் என தெரிவிக்கப்படுகிறது. சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டுள்ள கொடிகாமம் பொலிஸார் இருவருக்கு இடையே ஏற்பட்ட குரோதமே மோதலுக்கு காரணம் எனக் கூறியுள்ளனர். இச் சம்பவத்தில் படுகாயம் அடைந்த இராஜேந்திரம் கரேஷ் (வயது 23) என்பவரே வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (செ-85)

## தமிழரசுக் கட்சி...

கூறுவதற்கு இடமளிக்காமல், பாராளுமன்ற உறுப்பினர்கள் வெளியேற முற்பட்ட போது அங்கு பெரும் குழப்ப நிலை உருவாகியது.

அவ்வேளையில் அங்கு செய்தி சேகரிப்பில் ஈடுபட்டிருந்த வலம்புரி பத்திரிகையின் ஊடகவியலாளருடன் தமிழரசுக்கட்சியின் முக்கிய பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருடைய வாகன சாரதி அடாவடியாக நடந்து கொண்டுள்ளார்.

குறித்த சம்பவத்தை ஊடகவியலாளர் படம்பிடித்துக்கொண்டிருந்த போது, **யாரை படம் எடுக்கிறீர்கள்? விசேட அதிரடிப்படையை படம் எடுக்கக் கூடாது, நீங்கள் வலம்புரி பத்திரிகை ஊடகவியலாளர் தானே, இந்த சம்பவத்துக்கு என்ன செய்வீர்கள் என்று எங்களுக்கு தெரியும், எடுக்கிற படங்களை எடுங்க நாங்க உங்களுக்கு செய்யிறதை செய்து காட்டிறோம், எங்களை பற்றி வெளியே கேட்டு தெரிந்து கொள்ள வேண்டும், உங்களை கவனிக்கிற இடத்தில் கவனிப்போம், அரசியலுக்குள்ள வந்தால சட்டை கிழியும்** எனக் கூறி குறித்த வாகன சாரதி அடாவடியில் ஈடுபட்டார்.

இதன்போது அந்த இடத்துக்கு வந்த சக ஊடகவியலாளர்களும் அங்கு நின்ற சில பாதுகாப்பு பிரிவினரும் குறித்த சாரதியை அப்பகுதியில் இருந்து வெளியேற்றியிருந்தனர்.

இந்நிலையில் மேற்படி சம்பவம் தொடர்பில் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவிடம் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-1)

## மக்களை ஏமாற்றி...

தேர்தல் காலத்தில் நாங்கள் மேடையில் பேசும் பேச்சு வேறு, அது தேர்தலில் வெல்வதற்காக பேசுகின்றோம், ஆனால் பின்னர் நடைமுறை என வரும் போது நாங்கள் பேசும் பேச்சு மற்றும் செயற்பாடு என்பன வேறு என தமிழரசுக் கட்சியின் பொருளாளர் கனக சபாபதி உண்மையை உளறியுள்ளார்.

வடக்கு மாகாண சபை தொடர்பாக அண்மையில் தமிழரசுக் கட்சி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக தமிழரசுக் கட்சியின் இளைஞர் அணி உறுப்பினர்களுக்கு விளக்கமளிக்கும் வகையிலான கலந்துரையாடல் ஒன்று யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

நேற்றைய தினம் காலை 10 மணி தொடக்கம் மேற்படி கலந்துரையாடல் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா தலைமையில் ஆரம்பமாகியது.

இந்தக் கலந்துரையாடலில் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன் மற்றும் ஈ.சரவணபவன் மற்றும் வட மாகாண அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் மற்றும் தமிழரசுக் கட்சி மாகாண சபை உறுப்பினர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

கலந்துரையாடலில் பங்கேற்க வந்திருந்தவர்கள் கடும் பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் அழைப்பிதழ் அனுப்பப்பட்ட உறுப்பினர்கள் மட்டும் அழைப்பிதழ் பரிசோதிக்கப்பட்டு உள்ளே அனுமதிக்கப்பட்டனர்.

கலந்துரையாடப்பட்ட ஒருபகுதியில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொருளாளர் கனகசபாபதி பேசும் போது.

தேர்தல் காலங்களில் மேடைகளில் நின்று நாம் பேசும் பேச்சு வேறு, அது தேர்தலில் வெல்ல வேண்டும் என்பதற்காகப் பேசும் பேச்சு. ஆனால் பின்னர் நிர்வாகம் என்று வரும் போது நாங்கள் பேசும் பேச்சு நடக்கிற நடை வேறு. என்று உண்மையை உளறினார்.

இதன்போது திகைப்படைந்த சுமந்திரன் உடனே எழுந்து சென்று அவரின் காதில் எச்சரித்துப் பேச்சை மாற்றினார்.

மேலும் தமிழரசுக் கட்சி மாகாண சபை உறுப்பினர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில்,

தன்னைப் பொதுமக்கள் தாக்க வருவதாகவும் விசேட அதிரடிப்படையின் உதவியை நாடவுள்ளதாகவும் கூறியிருந்தார்.

மேற்படி கலந்துரையாடலில் இளைஞர்கள பல கேள்விகளை கேட்க முற்பட்ட போதும் சரிவர சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை என்றும் தாம் கூறியபடி நடக்குமாறு அறிவுறுத்தப்பட்டதாகவும் கூட்டத்தில் கலந்து கொண்ட தமிழரசுக் கட்சி உறுப்பினர் ஒருவர் வலம்புரியிடம் தெரிவித்திருந்தார். (செ-9)

## மயிலிட்டி மீன்பிடி...

வசமுள்ள ஏனைய நிலங்களையும் விடுவிக்க கோரி இன்றைய தினம் பாதிக்கப்பட்ட மக்கள் அனைவரும் வலி.வடக்கில் ஒன்று கூடவுள்ளனர்.

வலி.வடக்கு பகுதியில் 27 வருடங்களாக இராணுவத்தினரின் வசமிருந்த மயிலிட்டி மீன்பிடி துறைமுகம் இன்றைய தினம் விடுவிக்கப்படவுள்ளதுடன், அதை அண்டிய 54 ஏக்கர் நிலப்பரப்பும் மக்களின் பாவனைக்காக கையளிக்கப்படவுள்ளது.

வலி.வடக்கு பகுதியில் உயர் பாதுகாப்பு வலயமாக இருந்த பொதுமக்களின் காணிகள் தறபோது பகுதி பகுதியாக மக்களின் பாவனைக்காக இராணுவத்தினரால் விடுவிக்கப்பட்டு வருகிறது.

இந்த நிலையில், வலி.வடக்கு மக்களின் பாரிய மூலதனங்களில் ஒன்றாக இருந்த மயிலிட்டி துறைமுகம் இராணுவத்தினர் வசமே இருந்து வந்தது. அதை விடுவிக்குமாறு பொதுமக்களால் பாரிய ஆர்ப்பாட்டங்கள் பல தடவை முன்னெடுக்கப்பட்டதன் பயனாக துறைமுகம் தற்போது விடுவிக்கப்படுகிறது.

மேலும்இன்றைய தினம்9 மணிக்கு, தையிட்டி வடக்கு ஜே/249 கிராம சேவகர் பிரிவுக்கு உட்பட்ட 54 ஏக்கர் நிலப்பரப்பு பொதுமக்களின் பாவனைக்காக கையளிக்கப்படவுள்ளதாக பாதுகாப்பு படைத்தரப்பினர் அறிவித்திருந்தனர்.

இதேவேளை இன்றைய தினம் குறித்த மயிலிட்டி துறைமுகம் விடுவிக்கப்படவுள்ளமைக்கு நன்றி தெரிவித்தும், ஏனைய பகுதி நிலங்களை விடுவிக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தும் வலி.வடக்கு மக்கள அப்பகுதியில் ஒன்றுகூடவுள்ளனர். (செ-9)

## இழுவை மடி மீன்...

மன்றில் கொண்டுவரப்படவுள்ள நிலையில், அந்த சட்டத்துக்கு வடக்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவு வழங்க வேண்டும் என கோரிய கலந்துரையாடல் ஒன்று வட மாகாண கடற்தொழிலாளர் இணையத்தின் ஏற்பாட்டில் நேற்றைய தினம் கிறீன் கிறஸ் விருந்தினர் விடுதியில் இடம்பெற்றது.

அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இழுவை மடி மீன்பிடி தொழிலை முற்றாக தடை செய்ய வேண்டும் என்ற சட்ட மூலத்தை ஆதரிக்க வேண்டும் என மீனவ அமைப்புகள் கேட்டுள்ளார்கள்.

குறித்த இழுவை மடி தொழிலை செய்யும உள்ளூர் மீனவர்களுக்கு குறித்த தொழிலை நிறுத்தினால் அவர்களுக்கு நட்டஈடு, அல்லது மாற்றீடு வழங்க உடன்பாடு இல்லை எனவும் தெரிவித்துள்ளார்கள்.

ஆனால் உள்ளூரில் அண்ணளவாக 600 இழுவை படகுகள் உள்ளன. அத் தொழிலை செய்பவர்களுக்கு நாம் பொறுப்பு கூற வேண்டும். அவர்களுக்கு நிவாரணம் வேண்டும் அவர்கள் பாதிக்கக் கூடாது.

மீன்பிடியில் சட்டவிரோதமான ஏனைய பல தொழில்களும் உள்ளன. அவை தடுக்கப்பட்டு மாற்றீட்டு தொழில் வழங்க வேண்டும்.

இந்திய படகுகளின் வரவால் பாரிய அழிவு உள்ளது எனத் தான் அதிகமான மீனவர்கள் தெரிவித்துள்ளார்கள். அதில் எமது மக்கள் மீனவ குடும்பங்கள் தான் அதிகமாக பாதிக்கப்பட்டுள்ளார்கள். முழுமையாக சட்டம் நிறைவேற்றப்பட்டால் ஒத்துழைப்பு வழங்குவோம்.

ஆனால் இந்த இழுவை மடி தொழிலை உள்ளூரில் செய்தவர்கள் பாதிக்கப்படாமல் அவர்களுக்கு மாற்றீடு வழங்க வேண்டும். அவர்களும் பல முதலீடுகளை செய்துள்ளார்கள். எனவே அதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

ஏனைய விடயங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் இருக்கும் பொழுது, இந்த குடும்பங்களுக்கும் கொடுக்கப்பட வேண்டும். அதற்கு அனைவரும் இணங்க வேண்டும் என வேண்டுகோள் விடுப்பதாக மாவை எம்.பி மேலும் தெரிவித்துள்ளார். (செ-9)

## மாற்று தொழில்...

இழுவை மடி மீன்பிடி தொழிலை தடை செய்யும் சட்டமூலம் எதிர்வரும் 6ஆம் திகதி பாராளுமன்றில் கொண்டுவரப்படவுள்ள நிலையில், அந்த சட்டத்துக்கு வடக்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவு வழங்க வேண்டும் என கோரிய கலந்துரையாடல் ஒன்று வட மாகாண கடற்தொழிலாளர் இணையத்தின ஏற்பாட்டில் நேற்றைய தினம் கிறீன் கிறாஸ் விருந்தினர் விடுதியில் இடம்பெற்றது.

அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே சுமந்திரன் எம்.பி மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இந்திய படகுகள் எமது கடல் எல்லைக்குள் வந்து எமது மீனவர்களின் வாழ்வாதாரத்தை பாதித்தது. இழுவை படகுகளை தடை செய்ய கோரி பல போராட்டங்கள் கோரிக்கைகள் எமது மீனவ சமூகத்தால் கொண்டுவரப்பட்டது. ஆனால் அரசு இந்த சட்டத்தை கொண்டு வராது என தெரிந்த படியால் நான் தனியாக, இழுவை மடி மீன்பிடி தொழிலை தடை செய்யும் சட்டமூலத்தை கொண்டு வந்தேன்

மீனவ சங்க தலைவர்கள் பலர் கலந்துரையாடினார்கள் கோரிக்கையை முன்வைத்தார்கள். மக்களின் நலனுக்கு தான் இந்த அரசுடன் நட்பாக இருக்கிறோம். அதே போல குறித்த சட்டத்தையும் பொதுவாக கொண்டு வந்தேன்.

இழுவை மடி தொழிலை தடை செய்வதற்கு இந்திய அரசு உத்தியோகபூர்வமாக இணங்கி அதை எழுத்தில் எமது அரசிடம் கொடுத்தார்கள்

குறித்த சட்ட மூலம் பாராளுமன்றிக்கு கொண்டுவந்த போது, சட்டம் ஆக்கப்பட்டு விட்டதாக வந்த செய்தியை கேட்டவுடனேயே இந்திய மீனவர்கள் பயந்தார்கள். இந்திய மீனவருக்கு அந்த அரசு எச்சரிக்கை விட்டது. இதனால் பல மாதங்கள் எமது கடற்பரப்புக்குள் வராமல் இருந்தார்கள். எனவே இந்த சட்டம் நிறைவேற்றப்பட வேண்டும்.

இந்த சட்டமூலம் தொடர்பில் அனைத்து மாகாண சபைகளின் கருத்துக்களும் பெறப்பட்டிருந்தது. வடக்கு மாகாண சபையில் சில எதிர்ப்பு இருந்தது. எனவே வட மாகாண சபை உறுப்பினர்களுடன் இது தொடர்பில் கலந்துரையாடினேன்.

மாற்று தொழில் கொடுப்பதில் எனக்கு உடன்பாடு இல்லை. ஏனென்றால் இது பரம்பரை தொழில் அல்ல. ஒரு சிலரின் மிக கூடிய லாபகரமான வருமானத்துக்காக இது நடைபெறுகிறது. ஆனால் இதனால் இரண்டரை இலட்சம் மக்களின் வாழ்வாதாரத்தை பாதிக்கிறது. எனவே இத் தொழில் நிறுத்தப்பட வேண்டும்.

117 சங்கங்களும் இணைந்து இந்த தொழிலை தடுக்குமாறு கோரிக்கை விடுத்தன. எனவே சட்டமூலத்தை கொண்டு வந்தேன். அதை அரசு பொறுப்பேற்றது. அரச சட்டமூலமாக கொண்டுவரப்பட்டது. தனி நபர் கொண்டு வருவதை விடவும் ஒரு அரசால் கொண்டு வந்தால் தான் முழுமையானதாக இருக்கும்.

வலுவான சட்டமாக இருந்தால் தான் அது பயனுள்ளதாக இருக்கும். கடல் வளத்துக்கு பாதிப்பில்லாத எந்த தொழிலையும் யாரும் செய்யலாம்,

எனவே குறித்த சட்டமூலம் எதிர்வரும் 6ஆம் திகதி பாராளுமன்றில் நிறைவேற்றப்படும் என எதிர்பார்க்கிறேன். குறித்த சட்டமூலம் நிறைவேற்றப்பட்டதும், சில சில சேற்று நிலங்களில் இழுவை மடி தேவையாக உள்ள பகுதிகளில் சிறிய படகுகள் மூலம் இந்த இழுவை மடி தொழிலை செய்வதற்கான சட்டமூலத்தை கொண்டுவருவதற்கு அடுத்த வாரம் அளவில் பாராளுமன்றில் குறித்த விடயம் தொடர்பில் பிரசுரம் செய்வேன் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (செ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய அரசியலமை...

எஸ்.வி ன்ஸ்டன் பத்திராஜா தெரிவித்தார்.

புதிய அரசியலமைப்பினைத் தயாரித்தல் தொடர்பில் பொதுமக்களுக்கு தெளிவூட்டும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், மட்டக்களப்பு மாவட்ட மக்களின் கருத்தறியும் நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கி ழமை வின்சன்ட் தேசிய பாட சாலை மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த காலத்தில் நாடாளுமன்றத்தினை மையமாக வைத்து உருவாக்கப்பட்ட இரண்டு அரசியல் யாப்புகள் இந்த நாட்டுக்கு பயன்பட்டதாக நான் அறியவில்லை.

அந்த அரசியல் யாப்புகள் இனங்களிடையே ஒற்றுமையினை ஏற்படுத்தாத காரணத்தினால் அதனை தோல்வியான அரசியல் யாப்புகளாகவே நோக்க வேண்டியுள்ளது.

மாகாண சபைகள் உருவாக்கப்பட்டு, ஆளுநர்கள் நியமிக்கப்பட்டதை தவிர வேறு எந்த வெற்றியையும் அரசியல் யாப்புகள் கொண்டிருக்கவில்லை என்பது உண்மையாகும்.

ஆனால்அதனைக் கொண்டு இனப் பிரச்சினைக்கான தீர்வினையும் காணவில்லை. நாட்டை முன்னேற்றவும் இல்லை. மாறாக 30 வருட கால உள்நாட்டு யுத்தம் ஒன்றுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலைக்கு நாங்கள் தள்ளப்பட்டோம்.

அதன் மூலம் பெற்றுக்கொண்ட பாடங்களைக் கொண்டு, தற்போதைய அரசாங்கம், மக்களின் விருப்பங்களைக் கொண்டதாக புதிய யாப்பினை உருவாக்கி, அதன் மூலமாக அனைத்து இன மக்களும் இந்த நாட்டின் பிரஜைகள் என்ற எண்ணத்துடன் ஒன்றுபட்டு பயணித்து, ஒரு இனத்தினை இன்னுமொரு இனம் அரவணைத்து வாழும் நிலையினை ஏற்படுத்தும் வகையில், இந்த புதிய யாப்பினை உருவாக்கும் பணியை மேற்கொண்டு வருகின்றது என என வின்ஸ்டன் பத்திராஜா நம்பிக்கை தெரிவித்தார்.(செ-11)

## 8.9...

வீடொன்றில் இருந்து 8 கிலோ 900 கிராம் கைப்பற்றப்பட்டுள்ளது.

மேலும் கஞ்சா கைப்பற்றப்பட்ட வீட்டிலிருந்த 5 நபர்களும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு வட்டுக்கோட்டை பொலிஸாரின் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். (செ-9)

## மரண அறிவித்தல்



### திருமதி நித்தியலட்சுமி பாலசிங்கம்

அல்லைப்பிட்டி முதலாம் வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி நித்தியலட்சுமி பாலசிங்கம் தெகிவளையில் காலமானார்.

அன்னார் பொன்னம்பலம் பாலசிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - யோகம்மா தம்பதியினரின் இளைய மகளும், பொன்னம்பலம் - மாரிமுத்து தம்பதியினரின் மருமகளும், பாலினி, பாலேந்திரன் ஆகியோரின் அருமைத் தாயாரும், ஜெபநேசன், விஜயா ஆகியோரின் அன்பு மாமியாரும், ஆரணியா, அபிநயா ஆகியோரின் அம்மம்மாவும், அனுஷன், அனுஷியா, அபிஷன் ஆகியோரின் அப்பம்மாவும், காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு, அன்னலட்சுமி, விநாயகமூர்த்தி மற்றும் இராசலட்சுமி, காலஞ்சென்ற சிவஞானம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, இராசையா, இராஜேஸ்வரி, நல்லையா, இலட்சுமி, தங்கமுத்து, வெற்றிவேலு மற்றும் பரமலிங்கம், இராசலிங்கம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று திங்கட்கிழமை காலை 9 மணிமுதல் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் பார்வைக்கு வைக்கப்பட்டு பிற்பகல் ஒரு மணியளவில் இறுதிக் கிரியைகள் நடைபெற்று இரண்டு மணியளவில் கல்கிசை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

முகவரி : 1A, அல்பேட் பிளேஸ், தெகிவளை.

தகவல் : பொ.பாலசிங்கம் (கணவர்)
க.ஜெபநேசன் (மருமகன்)


விற்பனைக்கு
- கட்டிட இடிபாடு
- சுண்ணாம்பு மக்கி
- செம்பாட்டு மண்
என்பன விற்பனைக்குண்டு. (9661)
தொடர்பு:
075 515 9089

விற்பனைக்கு
தூண்பெட்டிகள், ஸ்கபோல்டிங், சட்டரிங் தகடுகள், இரும்பு முக்கு மேலும் இதர கட்டிட தளபாடப் பொருட்கள் மலிவான விலையில் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:
(C-8948) 0769182942,0767802415

விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்
- அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
- மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்
- விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் அலுவலகங்கள் உண்டு
- எம்மிடம் சேவைகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு தங்கப்பவுண், மோட்டார் சைக்கிள்கள் வெல்லும் வாய்ப்பு (C-8920)
UK-550*/=Kg
மற்றும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த விலையில்
DELIVERY IN 3 - 5 DAYS
V2 TRAVELS-0768226240
• யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை

Organ, Guitar, புல்லாங்குழல் வகுப்புக்கள்
சினிமாப்பாடல்களின் இசைக் குறிப்புக்கள் (Notes) விற்பனைக்கு உண்டு.
கரவீணா இசை மன்றம்
4, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர்.
தொ.பே : 077 703 1293

வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை
மிகக்குறைந்த கட்டணத்தில்
UK - 5Kg மேற்பட்ட பொதி 800/=
UK - 11 Kg மேற்பட்ட பொதி 500/=
மற்றைய நாடுகளுக்கும் விசேட சலுகைகள்
திருமுருகன் கொம்நெற் Pvt (Ltd)
T.P:- 077 755 4528
யாழ்ப்பாணம், திருநெல்வேலி, நெல்லியடி பருத்தித்துறை.

பணிநிலை வேண்டுகை
யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள SMART KINGS (PVT) LTD நிறுவனத்திற்கு அனுபவமுள்ள.
• Heavy Vehicle Driver (AD LICENCE)
தேவை. சுயவிபரக் கோவையுடன் அலுவலகத்திற்கு சமுகமளிக்கவும். மேலதிக விபரங்களுக்கு தொடர்புகொள்ளவும் (C-8940)
SMART 12, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். 021 454 6699

வேலைவாய்ப்பு
3ஆவது ஆண்டில் கால்தடம் பதிக்கும் சர்வதேச கம்பனியில் பணிபுரிய முழுநேர அலுவலக ஊழியர்கள் தேவை. தகுந்த பயிற்சி வழங்கப்பட்டு உள்வாங்கப்படுவர். குறுகிய காலத்தில் மிகக் கூடிய சம்பளம் பெற முடியும்.
- வெளிநாடுகளில் பணிபுரியும் வாய்ப்பு
- நிரந்தர வேலை
தகைமை: சாதாரண கல்வித் தகைமை (O/L, A/L) அனுபவம் அவசியமில்லை
வயதெல்லை: 18-30 (25 பேருக்கு முன்னுரிமை) தங்குமிட வசதிகள் இலவசம்
தொடர்புகளுக்கு : 077 664 4442, 077 230 2795

விசேட கருத்தரங்கு
GCE A/L LOGIC
A/L 2017
முற்றிலும் எதிர்பார்க்கை வினா விடைகள்
கொழும்பு, யாழ் முன்னணி வளவாளர் குழு
சனி, ஞாயிறு 15,16,30
S.சயந்தன் MED
T.துரை MED (Hons)
S.காண்டீபன் BA
P.கமல் MED (Hons) (9658)
NEC (ஆனைப்பந்தி)
T.P: 077 526 5344

ALLIANCE FRANÇAISE DE JAFFNA
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி
➢ பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
➢ அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
➢ யாரும் படிக்கலாம்.www.ambafrance-lk.org
ஆரம்பம் : 27.05.2017
021 222 8093 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்

எவரெஸ்ட் குமாரிக்கா சந்தனாதி தைலம்
- நீண்ட கூந்தல் வளர்ச்சிக்கும்
- இளநரையை போக்கவும்
- பொடுகிலிருந்து நிவாரணம் பெறவும்
- கண் எரிச்சல், தலை வலியை நீக்கவும்
- ஞாபக சக்தியை அதிகரிக்கச் செய்யவும்
- ஏழு வகையான மூலிகைகள் உள் அடங்கிய சிறப்பு தைலம்
100 வீதம் இயற்கையானது
(கற்றாழை, வல்லாரை, நெல்லிக்காய், கரிசலாங் கண்ணி, கறிவேப்பிலை, பொன்னாங்காணி, அவுரி மற்றும் விற்றமின் E) (9447)
எல்லா மருந்தகங்களிலும் சாதாரண கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்
தயாரிப்பு: எவரெஸ்ட் மருந்தகம், உசன், மிருசுவில், யாழ்ப்பாணம்.
ஏக விநியோகஸ்தர் பிரமநாதன் & Co எண்.28, 26, பேரின்பநாயகம் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
கைபேசி எண்: 0776389356, 0777153571

அருள் குளோபல் எக்ஸ்பிரஸ்
வெளிநாடுகளுக்கான துரித கடிதங்கள், பொதிகள் சேவை
365 நாட்களும்
72 மணி நேரத்தில்
(Door to Door Service)
அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டட் Call 021 222 3536
அருள் குளோபல் எக்ஸ்பிரஸ் Call 021 222 6113
DHL aramex FedEx


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.07.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org